Vol.1, Issue 10 | Annual Subscription ₹ 420

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

மார்ச் 2019

Rotary





## ரோட்டரி நியூஸ் படிக்கும் RIPE மார்க் மலோனி

RID 3250 PETS / SETS பயிலறங்கிற்கு கொல்கத்தா வருகை தந்த RIPE மலோனி சிறிது நேரம் தேநீர் இடைவேளையில் ரோட்டரி நியூஸ் ஆங்கிலப் பிரதியை படித்து இந்திய ரோட்டரியின் பெருமைக்குரிய திட்டங்களை பாராட்டினார்.

புகைப்படம்: ரஷீதா பகத்

# உள்ளே


**12** **ரோட்டரியின் கதவுகளை அடைக்க வேண்டாம்!**
இந்தியாவில் சுற்றுபயணம் செய்யும் போது
RIPE மார்க் மெலோனி, PETS மற்றும்
SETS கூட்டங்களில் பேசினார்.

**22** **குஜராத் ரோட்டரி மருத்துவமனையில் குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை**
தொழிற்சாலை பகுதியில் அமைந்துள்ள மருத்துவமனை,
சுமார் 150 சதுர கி.மீ சுற்றுப்புறத்தில் ஏற்படும்
தொழிற்சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு
ஒரே தீர்வாக இருக்கிறது.

**28** **உதவிக் கரம் நீட்டினோம்**
750 பேர்களுக்கு LN 4 செயற்கைக் கைகளைப்
பொருத்தி RC மேட்டுப்பாளையம் முந்தைய
சாதனையை முறியடித்துள்ளது.

**32** **பிறருக்கு உதவுதலும் நல்ல பணிகளும் இவரது ரத்தத்தில் ஊறியவை!**
ஆஸ்தர் DM ஹெல்த்கேர் குழுமத்தின் தலைவர்
ஆசாத் மூபென் தர்மக்காரியங்களுக்கு கணிசமான
அளவு செலவளிப்பதற்குக்கான காரணத்தை அவர்
பேட்டியில் தெரிந்துகொள்ளுங்கள்.

**38** **எல்லை கடந்த கார் பயணம்**
PDG சுபோத் ஜோஷி மற்றும் அவரது குழுவினர்
இமயமலையைக் கடந்து நேபாளம், பூடான்
சென்று திரும்பி வந்த ஒரு கார் சுற்றுப்பயணத்தில்
இணைந்து கொள்ளுங்கள்.

**46** **வடகிழக்கு மாநிலங்களுக்கு நம்பிக்கை ஒளி!**
மணிப்பூர் குழந்தைகளின் நல்வாழ்விற்கு
RC பெங்களூர் ஆர்சார்ட்ஸ் தலைவர்
D ரவி சங்கரின் மாற்றத்திற்கான முதலீடு.


**60** **கதகளி-கதை சொல்லும் நாட்டியம்!**
கேரளாவின் ஒருங்கிணைந்த ஒரு நடன வகை.

**78** **நலம் தரும் மனம்**
நிகழ் காலத்தருணத்தில் கவனம்
குவிப்பதைப்பற்றிக் கற்றுக்கொள்ளுங்கள்.

















**அட்டை:** கொல்கத்தாவில் சேவிங் லிட்டில் ஹார்ட்ஸ் திட்டப்பணியில் பலனடைந்த ஒரு குழந்தை மற்றும் அவளுடையத் தாயுடன் RIPE மார்க் மெலோனி மற்றும் RIDE கமல் சங்கவி.

**படம்:** ரஷீதா பகத்

## உற்சாகத்தைப் பரப்புகிறது

பிப்ரவரி அட்டைப் படத்தில் பள்ளிகளைக் கட்ட ஒட்டுமொத்தமாக ரூ.1 கோடி கொடுத்த ஜோடியான D ரவிசங்கர் மற்றும் அவருடைய மனைவி பவோலா மணிப்பூர் பள்ளிக்குழந்தைகளுடன் சேர்ந்து சிரித்த முகங்களுடன் இருந்த இதழைப் பார்க்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நலிவுற்ற மற்றும் வறுமைக்கோட்டுக்கு கீழே வாழ்பவர்களுக்கு தங்களின் செல்வத்தை நன்கொடையாக அளித்திருக்கின்றனர், அந்த புகைப்படங்கள் மற்றும் கட்டுரை நம்மிடையே உற்சாகத்தை பரப்பியுள்ளது. தங்களின் செல்வத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்பவர்களுக்கு மட்டுமே வாழ்க்கையில் சந்தோஷமும் மனநிறைவும் இருக்கும் என்பது உண்மைதான்.

மகாராஷ்டிராவில் பிறந்ததில் இருந்து நகுஷி அல்லது தோண்டா என்று பெயரிடப்பட்டு ஒதுக்கப்படும் பெண் சிறுமிகளைப் பற்றிய மனதைப் பிழியும் கதைகள் கொண்ட ஆசிரியரின் தலையங்கத்தை வாசிக்க மனம் சோகத்தில் மூழ்கியது, இந்த மாநிலத்தில் இன்றும் கூட இது போன்று பெயரிடப்பட்ட ஆயிரக்கணக்கான சிறுமிகள் இருக்கிறார்கள்.


RI தலைவர் பேரி மாற்றத்திற்கான திட்டப்பணிகளைப் பற்றி பேசுகிறார், இது உலகம் முழுவதிலும் ரோட்டரிச் சங்கங்கள் வெற்றிகரமாகப் பணியாற்ற இப்போதைய சூழலில் முக்கியமானது.

கேரளாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகளை கட்டிக்கொடுக்க ஆஸ்தர் குழுமமும் ரோட்டரியும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது மகிழ்ச்சியான செய்தி.

தலைமைத்துவத்திற்கான பாதை என்ற கட்டுரை மிகவும் தகவல் நிறைந்தது, மேலும் அனைவருக்குமான அறிவுரை என்பதால் அனைத்து ரொட்டேரியன்களும் வாசிக்க வேண்டியது, TCA ஸ்ரீனிவாச ராகவன் எழுதிய பழைய மாணவர் சந்திப்பு பலவித சிந்திப்பு நகைச்சுவையுடன் உண்மைகளும் கலந்து இருந்தது.

மற்ற அனைத்து கட்டுரைகளும் மனதைக் கவரும் விதத்தில் இருந்தது, மேலும் புகைப்படங்களும் தனித்துவமாக இருந்தது. ஒவ்வொரு மாதமும் அதீத முயற்சியுடன் ஒரு நல்ல இதழை வடிவமைப்பதற்கு நன்றிகள் பல.

M T ஃபிலிப் RC திருவனந்தபுரம் சப்பர்பன் — RID 3211




வடகிழக்குப் பகுதியை மாற்றும் ஒரு ரொட்டேரியனும் இராணுவ அதிகாரியும் என்ற உத்வேகம் அளிக்கும் கட்டுரைக்கு நன்றி, அது கர்னல் கிறிஸ்டோஃபர் ரீகோவும் அவருடைய குழுவும் மணிப்பூரில் செய்த வேலைகளை விவரித்தது. அவருடைய சிலத் திட்டப்பணிகளில் நாங்கள் இணைவதற்கு அவரின் தொடர்பு விவரங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ரொட்டேரியன் பன்கஜ் வர்மா

கர்னல் ரீகோவை 70222 60784; 94362 34587 என்ற எண்ணிலும், chrisregosunbirdtrust.com என்ற மின்னஞ்சலிலும் தொடர்பு கொள்ளலாம்

— ஆசிரியர்.

ஒரு வண்ணமயமான இதழை வெளியிட்டதற்கு எனது பாராட்டுக்கள். ரொட்டேரியன் அல்லாத எனது ஊழியர் ரோட்டரி நியூஸ் இதழைப் படித்து வியந்துவிட்டார், இது மிகவும் வண்ணமயமாகவும் நேர்மறைத் தாக்கங்களுடனும் இருப்பதால் ஒரு திருமண ஆல்பத்தைப் பார்ப்பது போல சுவாரஸ்யமாக இருக்கிறது என்று சொன்னார்.

V பசுபதி, RC ஈரோடு — RID 3202

பிப்ரவரி மாத இதழைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது, அதில் நிறைய மடல்கள் ரோட்டரி நியூஸ் குழுவைப் பாராட்டியுள்ளனர்.

தலையங்கம் - பெண்கள் கல்வி பெறுவது ஒரு பள்ளி திறப்பதற்குச் சமம்; வலிமையான சங்கங்களின் தேவையைப் பற்றிய தலைவர் பேரி ராஸினின் செய்தி; சேவை மூலம் உலக அமைதி என்ற RID C பாஸ்கர் அவர்களின் செய்தி; ஜெய்ஸ்ரீயின் மலோனிக்கு சூரத்தில் அமோக வரவேற்பு; ரஷீதா பகத் எழுதிய விரைவில் ரோட்டரி - ஆஸ்டரின் ஒரு புதிய கூட்டணி; திருநங்கைகளுக்கு உதவும் ரோட்டரி; சிறுமிகளுக்கு அதிகாரம் அளிப்பது; அர்னால்டு கிரால் எழுதிய உலகத்தை இணைக்கும் ரோட்டரி போன்றவை அனைத்தும் அருமையாக இருந்தது.

டேனியல் சித்திலப்பில்லி
RC கலூர் — RID 3201

### சரியான ஆலோசனை

பிப்ரவரி மாத இதழ் பாராட்டுக்குரியது. பெண்கள் கல்வி பெறுவது ஒரு பள்ளி திறப்பதற்குச் சமம் என்ற ஆசிரியரின் கட்டுரையில், நகுஷி (மராத்தியில் வேண்டாதது என்று பொருள்) மற்றும் தோண்டா (கல் அல்லது பூமிக்கு ஒரு பாரம்) என்ற வார்த்தைகள் ஒரு வறண்ட பிரதேசத்தில் தண்ணீரைத் தேடி அலையும் நெருக்கடியை அழகாக எடுத்துச் சொன்னார் ரஷீதா பகத். இவ்வுலகத்தை வறுமையிலிருந்து மீட்பதை யும் பெண் கல்வியின் முக்கியத்து வத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதையும் குறிக்கோளாகக் கொண்ட ரோட்டரியின் உறுதியை இந்த விஷயங்கள் எதுவும் தடுத்து நிறுத்தாது.

வலிமையான சங்கங்கள் மாற்றத்திற்கான திட்டப்பணிகளைச் செயல்படுத்தும் என்ற RI தலைவர் பேரி ராஸினின் செய்தி மற்றும் சேவை மூலம் உலக அமைதி என்ற RID C பாஸ்கர் அவர்களின் செய்தி கொண்ட இதர கட்டுரைகள் ரோட்டரிச் சங்கங்களுக்கு தகவல் கொடுப்பதாக இருந்தது. அனைத்துப் புகைப்படங்களும் கட்டுரைகளும் அழகாகவும் யோசிக்கக் கூடியதாகவும் இருந்தது.

A K சந்த்வார், RC தன்பாத்
மிட்டவுண் — RID 3250

பெண்கல்வியைப் பற்றிய தலையங்கம் ஒரு அற்புதமான விழிப்புணர்வை உருவாக்கியது, இது நமது சமூகத்திற்கு மிகவும் அவசியமான ஒன்று. பொதுவாக பெண்குழந்தைகள் வீட்டு வேலைகளுக்கும் கட்டிட வேலை போன்ற இதர பணிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். அதனால் பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு கொடுப்பது மிகவும் அவசியம். குழந்தைகளின் கல்விக்காக நல்ல கல்வி நிறுவனங்களை உருவாக்குவதில் நமது குறிக்கோள் இருக்கவேண்டும்.

வடகிழக்குப் பிராந்தியங்களில் சிகிச்சைக்கான போதிய மருத்துவ வசதிகள் இல்லை என்பதால், அவர்களுக்கு கல்வி மட்டுமல்லாது சுகாதார விழிப்புணர்வுத் திட்டங்களும் தேவைப்படுகிறது. மருத்துவச் சிகிச்சைக்காக வடகிழக்கிலிருந்து நிறைய பேர் பெங்களூரு, ஐதராபாத் மற்றும் சென்னைக்கு வந்து கொண்டிருகிறார்கள்.

இம்பாலில் அசத்துகிறது அனைத்து மகளிர் சந்தை பற்றிய கட்டுரை இந்த இதழில் சுவாரஸ்யமான கதை.

PRN சந்திர மௌலி
RC பெர்ஹாம்பூர்
மிட்டவுண் — RID 3262

ரஷீதா பகத் எழுதிய இம்பாலில் அசத்துகிறது அனைத்து மகளிர் சந்தை என்ற கட்டுரை அற்புதமானது. இது பெண்களை சுயத்தொழில் முனைவோர்களாக மாற்றுகிறது, அத்துடன் பொருளாதாரத்திலும் அவர்களை முன்னேற்றுகிறது. மேலும் ஒரு 10 சதவீத கமிஷனுடன் பழைய ரூபாய் நோட்டுக்களை புதிதாக மாற்றித்தருகிறார்கள் என்பது சுவாரஸ்யமான செய்தி.

S பாலசுந்தர ராஜ்
RC சிவகாசி
சென்ட்ரல் — RID 3212

பிப்ரவரி மாத இதழ் மிக அருமையாக இருந்தது. பக்கம் 80ல் இருக்கும் மைசூரில் ரோட்டரி ரவுண்டானா கட்டுரையில் மாவட்ட எண் 3181 என்பதற்குப் பதிலாக 3180 என்று அச்சிடப்பட்டுள்ளது.

Aa Cha அசோகா குமார
RC மைசூர் நார்த் — RID 3181

வீட்டு வேலை செய்பவர்கள் டிரைவர்களின் குழந்தைகளுக்காக ஒரு குழந்தைகள் காப்பகத்தை உருவாக்கும் தன் கற்பனைக்கு செயல்வடிவம் கொடுத்த பெங்களூரைச் சார்ந்த இண்டராக்டர் தன்வி ராய் பற்றிய கட்டுரை மிகவும் உத்வேகம் கொண்டதாக இருக்கிறது. தற்போதைய தலைமுறைக் குழந்தைகள் தங்களைச் சார்ந்த சமூகத்தில் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சிக்கிறார்கள், இது ரோட்டரி செயல்பாட்டிற்கும் நாட்டிற்கும் நல்லது. தன்விக்கும் நமது இண்டராக்டர்களுக்கும் மேலும் வலுசேர்க்கிறது.

கோபிநாத் N, RC பெங்களூரு
இந்திராநகர் — RID 3190

கல்லூரி காலங்களில் NCCல் இருந்தேன் மற்றும் கத்தி முனை கொண்ட துப்பாக்கிச் சண்டையில் “C” கிரேடு வாங்கியிருப்பதால், ஜனவரி இதழில் தியாகிகளுக்கு ரோட்டரியின் வீரவணக்கங்கள் என்ற கட்டுரையைப் படித்ததும் உணர்ச்சிவயப்பட்டேன்.

வேணுகோபால் எலமன்சில்லி
RC குண்டூர் — D 3150

## ஒரு சக்தி வாய்ந்த செய்தி

ஜனவரி மாத இதழில், நான்கு வழியும் பின்பற்று வோம் என்ற தலைப்பிட்ட RI டைரக்டரின் செய்தி உத்வேகம் அளிக்கும்படியாக இருந்தது.

இரண்டாவது, எல்லையைக் கடந்த 20 வருட சேவை என்ற ஃப்ரான்க் பியூரெஸ் கட்டுரை. ஆப்பிரிக்க நாடுகளில் மருத்துவத் திட்டங்களைச் செயல்படுத்திய PRIP ராஜேந்திர சபூ RI தலைவராக இருந்த போது, “சுயநலத்தைத் தாண்டிப் பாருங்கள்” என்ற தன் மையக்கருத்தை எப்படிப் பின்பற்றினார் என்பதை வெளிக்காட்டியது.

ஒவ்வொரு ரொட்டேரியனுக்குத் தொடர்புடையதாக இருப்பதால், 40 வயதிற்குப் பிறகும் ஆரோக்கியம் என்ற ஷீலா நம்பியாரின் கட்டுரை கட்டாயம் வாசிக்கக்கூடிய ஒன்று.

நவீன் R கார்க்
RC சுனம் — D 3090

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org.*

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | S Piraiyon |
| RI Dist 2982 | DG | Nirmal Prakash A |
| RI Dist 3000 | DG | RVN Kannan |
| RI Dist 3011 | DG | Vinay Bhatia |
| RI Dist 3012 | DG | Subhash Jain |
| RI Dist 3020 | DG | Guddati Viswanadh |
| RI Dist 3030 | DG | Rajiv Sharma |
| RI Dist 3040 | DG | Gustad Anklesaria |
| RI Dist 3053 | DG | Priyesh Bhandari |
| RI Dist 3054 | DG | Neeraj Sogani |
| RI Dist 3060 | DG | Pinky Patel |
| RI Dist 3070 | DG | Barjesh Singhal |
| RI Dist 3080 | DG | Praveen Chander Goyal |
| RI Dist 3090 | DG | Dr Vishwa Bandhu Dixit |
| RI Dist 3100 | DG | Deepak Jain |
| RI Dist 3110 | DG | Arun Kumar Jain |
| RI Dist 3120 | DG | Stuti Agrawal |
| RI Dist 3131 | DG | Dr Shailesh Palekar |
| RI Dist 3132 | DG | Vishnu S Mondhe |
| RI Dist 3141 | DG | Shashi Sharma |
| RI Dist 3142 | DG | Dr Ashes Ganguly |
| RI Dist 3150 | DG | Ramesh Vangala |
| RI Dist 3160 | DG | Konidala Muni Girish |
| RI Dist 3170 | DG | Ravikiran Janradan Kulkarni |
| RI Dist 3181 | DG | Rohinath P |
| RI Dist 3182 | DG | Abhinandan A Shetty |
| RI Dist 3190 | DG | Suresh Hari S |
| RI Dist 3201 | DG | A Venkatachalapathy |
| RI Dist 3202 | DG | Dr E K Ummer |
| RI Dist 3211 | DG | E K Luke |
| RI Dist 3212 | DG | K Raja Gopalan |
| RI Dist 3231 | DG | C R Chandra Bob |
| RI Dist 3232 | DG | Babu Peram |
| RI Dist 3240 | DG | Dr Sayantan Gupta |
| RI Dist 3250 | DG | Kumar Prasad Sinha |
| RI Dist 3261 | DG | Nikhilesh M Trivedi |
| RI Dist 3262 | DG | Bhabani Prasad Chowdhury |
| RI Dist 3291 | DG | Mukul Sinha |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |
| TRF Trustee | Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RIDE | Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RIDE | Kamal Sanghvi | RI Dist 3250 |

### Executive Committee Members (2018–19)

DG Rajiv Sharma — RI Dist 3030
Chair – Governors Council

DG Pinky Patel — RI Dist 3060
Secretary – Governors Council

DG Subhash Jain — RI Dist 3012
Secretary – Executive Committee

DG A Venkatachalapathy — RI Dist 3201
Treasurer – Executive Committee

DG Shashi Sharma — RI Dist 3141
Member – Advisory Committee



## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan



## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org



Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.



# பதற்றச் சூழலில் அமைதிப் பேச்சுவார்த்தை சாத்தியமில்லை

ஜம்மு காஷ்மீர் புல்வாமாவில் மத்திய ரிசர்வ் படை போலீசார் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி 40 வீரர்களின் இன்னுயிரைப் பறித்தது மிகக் கொடிய, நெஞ்சு பதற வைக்கும் அதிர்ச்சிகரமான சம்பவமாகும். இதனால், நாடு முழுவதும் சோகத்திலும் துயரத்திலும் ஆழ்ந்துள்ளது.

இந்த நிலையில், TRF மேற்கொண்டு வரும் அமைதித் திட்டம் முக்கியத்துவம் பெறுகிறது. இத்திட்டத்தின் மூலம் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள ஆறு முன்னணி பல்கலைக்கழகங்களில் அமைதி, பூசலுக்கான தீர்வு குறித்த கல்வியை நடத்துவதற்கான மையங்கள் உள்ளன. இதன்படி அமைதிக்கும் சிக்கல் தீர்வுக்கும் பங்களிப்பைச் செலுத்துவதற்காக உலகம் முழுதும் பரவலான சிறந்த நபர்களிலிருந்து அமைதிக் காவலர்கள் (Peace Fellows) கவனமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

அண்மையில் அது குறித்த பாடத் திட்டத்தில் சிறிய மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு RI முன்னாள் தலைவரும், TRF அறங்காவலருமான K R ரவீந்திரன் தலைமையிலான குழு முடிவு செய்தது. அப்பாடத் திட்டத்தில் கல்வி முறையைக் குறைத்து, செயல்முறையை அதிகரிப்பதன் மூலம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று தெரிவித்தார். இக்கல்வியைப் பெறும் பட்டதாரிகள் ரோட்டரி சங்கங்களின் திட்டங்களில் இணைந்து செயல்படுவதற்கு வசதியாக ரோட்டரியின் ஆறு அம்சங்கள் தொடர்புடைய பாடங்களாக உள்ளன. அமைதி என்பது போர் இல்லாத சூழல் அல்ல. இல்லாமையைப் போக்குவதிலிருந்தும் அமைதி ஏற்படுகிறது என்றார் ரவீந்திரன்.


இன்றைக்கு வன்முறையும் மோதலும் உலகைப் பிளவுபடுத்தி வருகின்றன. உலக அளவில் இன்றைக்கு சிரிய அகதிகள் பிரச்சினை, அவர்களது குடியேற்றப் பிரச்சினை தான் மிகப் பெரிதாக உள்ளது. 2011ம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போரினால், 55 லட்சத்துக்கு மேற்பட்டோர் தங்களது வசிப்பிடங்களிலிருந்து வெளியேறி முகாம்களில் குடிபெயர்ந்துள்ளனர். ஒரு காலத்தில் வளமாக இருந்த பெருமை பெற்ற சிரியா போன்ற நாடுகள் அந்நிய நாடுகளில் தஞ்சம் புகுவதற்காக கள்ளத் தோணிகளில் செல்கிறார்கள். பலர் நடுக்கடலில் விழுந்து இறந்து விடுவதும் உண்டு.

பிரச்சினை ஏற்பட்டுள்ள உலகில் வன்முறை, பூசலுக்கு முற்றுப் புள்ளி வைத்து, அமைதி, தூய்மை மீண்டு வருவதற்கு, TRF போன்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் அமைதி முயற்சிகள் போல எத்தனை திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்பது முக்கியமான கேள்வி. ஆண்டுதோறும், ரோட்டரியின் ஆறு அமைதி மையங்களில் குறுகிய காலக் கல்வித் திட்டத்திற்கும், நீண்ட காலக் கல்வித் திட்டத்திற்கும் தலா 50 பேருக்கு ரோட்டரி உதவிகளை அளித்து வருகிறது. TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி, இந்தியா, பாகிஸ்தான் உள்பட பல்வேறு நாடுகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலும் அரசு நிறுவனங்களிலும் பணியாற்றும் அமைதித் திட்டத்தின் மூலம் உரிய பயிற்சி, திறன்களைப் பெற்ற அமைதிக் காவலர்களுக்கு (Peace Fellows) ஃபவுண்டேஷன் உதவி வருகிறது என்றார்.

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த காவல்துறை அதிகாரி பிரவீண் தீட்சித் பின்னாளில் மாநில காவல்துறை தலைமை இயக்குநராக உயர்ந்தவர். டியூக் பல்கலைக் கழகம் வடக்கு கரோலினா பல்கலைக்கழக மையத்தின் முதல் பட்டதாரி அமைதிக் காவலர்களில் (Peace Fellows) அவரும் ஒருவர். அவர் பங்கேற்கும் நிகழ்ச்சி களில், தனது அமைதி குறித்த பாடத் திட்டத்தின் சிறப்புகளை எடுத்துரைத்து வருகிறார்.

அண்மையில் ஆசிய, மத்திய கிழக்கு, ஆப்பிரிக்க நாடுகளில் மோதல்கள், கலவரங்கள் அதிகம் ஏற்பட்டு வருகின்றன. அந்த இடங்களிலும் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் TRFன் அமைதி மையங்களை நடத்த வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்று வருகிறது. ஆப்பிரிக்காவில் செயல்படுத்துவது குறித்த ஆய்வுகள் தொடங்கிவிட்டன. புவிசார் அரசியல் அடிப்படையிலான பிரச்சினைகளைத் தீர்த்து அமைதியை நிலைநாட்டுவதற்கு இயலாது என்று நமக்குள் ஊறிப் போன அவநம்பிக்கையைத் தகர்த்தாக வேண்டும். அமைதி, சமாதானம் ஆகியவற்றுக்கான தேடலில் ரோட்டரியுடன் இதர அமைப்புகளும் இணைய வேண்டும். போரும் முழக்கங்களும் பிரச்சினைகள், ரத்தம் சிந்துவது, துயரம், மக்கள் இடம்பெறுவது ஆகியவற்றுக்குத்தான் வழிவகுக்கும். அண்மையில் நடந்த பயங்கரவாதச் செயலை அடுத்து இந்தியாவில் ஏற்பட்டுள்ள கோபமும் ஆத்திரமும் இருக்கும்போது, அமைதிக்கான பேச்சுவார்த்தை என்பது எளிதல்ல.

ரஷீதா பகத்



# ரோட்டராக்டர்களுக்கு ரோட்டரி ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்

BE THE INSPIRATION

RI தலைவராக நான் பணியாற்றுவதில், மிகவும் மதிக்கக்கூடிய விஷயங்களில் ஒன்று நான் சந்திக்கும் மனிதர்கள் தான். உலகம் முழுவதும் பயணம் செய்து அங்கிருக்கும் ரோட்டரிச் சங்கங்களை சந்திப்பதிலேயே தான், என் பெரும்பாலான நேரங்கள் கழிகிறது. ஒரு ரொட்டேரியனின் வரவேற்பு மிகச் சிறப்பாக இருக்கும். ஆனால் ரோட்டராக்டர்கள் எனக்குக் கொடுக்கும் வரவேற்பு மிகவும் கனிவானது என்று நான் சொல்லியே ஆக வேண்டும். ரோட்டரி கொள்கைகளில் உறுதியாக இருக்கும் இளைஞர்கள், சேவையை மனமுவந்து செய்கிறார்கள்.

எனது சமீபகால பயணத்தில் குறிப்பிடும்படியாக இருந்தது கானாவிற்குச் சென்றது தான். இங்கே இந்த மாவட்டத்தில் 60 ரோட்டராக்ட் சங்கங்கள் இருக்கிறது. ஆனாலும் கூட, அவர்களுக்கு இந்த எண்ணிக்கை திருப்தி அளிக்கவில்லை, எனவே அவர்கள் சங்கத்தின் எண்ணிக்கையை இரு மடங்காக உயர்த்தும் திட்டத்தில் உற்சாகமாக இருக்கிறார்கள்.

ரோட்டராக்டர்கள் போலியோவை ஒழிக்க குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து கொடுக்கிறார்கள், இரத்ததானம் செய்கிறார்கள்; பள்ளிகளில் கைகழுவும் வசதிகளை ஏற்படுத்தி கொடுக் கிறார்கள். சுருக்கமாகச் சொல்லுவதென்றால் தங்கள் சமுதாயத்தில் மாற்றத்திற்கான சேவையில் இருக்கிறார்கள்.

உகாண்டாவில் உள்ள நக்கிவளேவில், ஒரு சிறப்பான ரோட்டராக்ட் சங்கம் ஒரு அகதிகள் முகாமில் ஒரு மாற்றத்தை உருவாக்குகிறார்கள். சேவை, சமுதாயத்தை மேம்படுத்துதல் மற்றும் தேவைப்படுபவர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குவது போன்றவற்றிற்கான வாய்ப்புகளில் மற்றவர்கள் பாதகங்களாக நினைப்பதை சாதகங்களாக மாற்றுகிறார்கள் இந்த இளம் தலைவர்கள்.

துருக்கியில், ஒவ்வொரு புதன்கிழமையும் ரோட்டராக்டர்கள் மருத்துவமனைக்குச் சென்று, அங்கு குழந்தைகளை உற்சாகப்படுத்தும் விதமாக அவர்களுடன் விளையாடுகிறார்கள். அவர்கள் படிக்கும் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்து, தலைமைப்பண்புகளை கற்பிக்கிறார்கள்.

மார்ச் மாதம் 11 முதல் 17 வரை நாம் கொண்டாடுகின்ற உலக ரோட்டராக்ட் வாரம், உங்கள் ஊரில் உள்ள ரோட்டராக்டர்களைப் பற்றி தெரிந்துகொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருக்கிறது. அவர்களுடன் கலந்துபேசி, இரு சங்கங்களும் இணைந்து எவ்வாறு பணிபுரியலாம் என்று ஆலோசனை செய்யுங்கள். ஒருவேளை உங்கள் சங்கம் இதுவரை ஒரு ரோட்டராக்ட் சங்கத்தைப் பரிந்துரைக்கவில்லை என்றால், அருகாமையில் ஒரு கல்லூரியோ அல்லது பல்கலைக்கழகமோ தேவையில்லை, சமுதாய அடிப்படையில் ரோட்டராக்ட் சங்கங்களை அமைக்கலாம். மறந்துவிடாதீர்கள், ரோட்டராக்ட், நமது ரோட்டரி குடும்பத்தின் ஒரு அங்கம்.

ரோட்டராக்டர்கள், தங்கள் ரோட்டராக்ட் சங்கத்தை விட்டு வெளியேறும் நேரம் வரும்போது, அவர்கள் ரோட்டரி குடும்பத்தை விட்டு விலகிப்போவதை நாம் அனுமதிக்கக் கூடாது. அவர்கள் ரோட்டரி சங்கத்திற்கு வருவதற்கோ அல்லது புதிய ரோட்டரி சங்கத்தை ஆரம்பிக்கவோ வழி வகுத்துக் கொடுங்கள் என்று ரொட்டேரியன்களையும் கேட்டுக் கொள்கிறேன்: எத்தனை புதிய சங்கங்களை வேண்டுமானாலும் நான் சந்தோஷமாக உருவாக்குவேன். ஏனென்றால் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்க ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கு ஏதுவான ஒரு சங்கம் வேண்டும். சேவை சந்தோஷம் தர வேண்டும், மற்றவர்களை ஊக்கபடுத்துவதாக இருக்க வேண்டும், அத்துடன் எல்லோருக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும்.

ரோட்டரி எப்பொழுதுமே சிறந்து விளங்குகிறது என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம் அதன் பன்முகத்தன்மை தான். கடந்த காலத்தில் பன்முகத்தன்மை என்றால் நாம், பெரும்பாலும் தொழில், தேசியவாதம் மற்றும் கண்ணோட்டத்தில் தான் வேறுபட்டிருந்தோம். வயது மற்றும் பாலினத்தில் நாம் பெரிய அளவில் பன்முகத்தன்மையை அடைந்துள்ளோம். மேலும் நமது அமைப்பில் அதிக ரோட்டராக்டர்களை வரவேற்பதன் மூலம் நாம் மேலும் வலுவாகி விடுவோம்.

ரோட்டரி ஒரு சக்தி வாய்ந்த அமைப்பு. ரோட்டராக்ட் உடன் சேரும்போது அதற்கு யாரும் தடை போட முடியாது. நாம் ஒருங்கிணைந்து வேலை செய்யும் போது, சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கத்திலும், நாம் சந்திக்கும் ஒவ்வொரு நபருக்கும் உந்துசக்தியாக இருப்பதற்கான ஆற்றலைப் பெற்றிருக்கிறோம்.

பேரி ரஸின்
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்



# சுகாதாரச் சுழற்சி

அன்பார்ந்த ரோட்டரியினரே,

நீரின்றி அமையாதது மனித வாழ்க்கை. வேளாண் பொருளாதாரத்தை வறட்சி பாதிக்கும்போது, தண்ணீர் இல்லாமல், விவசாய விளைச்சல் பாதிக்கப்படும். உணவுப் பொருள் விநியோகம் குறையும். விலைவாசி உயரும். விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழப்பர். வறட்சி தீவிரமாக இருந்தால், அது கடும் பஞ்சமாகி, மரணத்துக்கே வழிவகுக்கும். கிடைக்கும் கொஞ்சம் தண்ணீரும் சுகாதாரமாக இருக்காது. அதைப் பயன்படுத்தினால், பல நோய்களும் ஏற்படும். எனவே, நல்ல சுத்தமான தண்ணீரும், சுகாதாரமும் அனைத்து மக்களுக்கும் அடிப்படை உரிமைகள் ஆகும். ஆனால், அப்படி நடப்பதில்லை. லட்சக் கணக்கானோர் இன்னமும் நல்ல குடிநீர் கிடைக்காமலும் சுகாதாரம் இல்லாமலும் தவிக்கிறார்கள். நோய் தாக்கி இறந்தும் போகிறார்கள்.

கழிவறைகளைக் கட்டுவது பற்றி நாம் பேசிக் கொண்டிருந்தாலும், ஒட்டுமொத்த சுகாதாரம் குறித்து போதிய கவனம் இல்லை. கழிவுகளை எப்படி அகற்றுவது, கையாள்வது என்பது குறித்த கவனமும் இல்லை. மனிதக் கழிவுகள் முறையாகச் சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப் படுவதால், நீர்நிலைகளில் கலக்கிறது. இதன் காரணமாக நிலத்தடி நீர் பெரிதும் பாதிக்கிறது. நீரும் மாசுபடுகிறது.

கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றுவதற்கோ மறு பயன்பாட்டுக்கோ மனிதக் கழிவுக் கசடு நீக்கல் (Faecal Sludge Treatment) குறித்த தேசிய கொள்கையின்படி (National Policy on Faecal Sludge and Septage Management) நான்கு கட்ட வழிகள் உள்ளன. நீர்நிலைகள் மேலும் மாசு ஏற்படாமல் தடுக்கவும், மாசடைந்த நீரினால் நோய் பரவுவதைத் தடுக்கவும் அது மிக முக்கியமானது.

கழிவு சுத்திகரிப்பின்போது, திடக் கழிவும் திரவக் கழிவும் பிரிக்கப்படுகின்றன. திரவக் கழிவுகள் தாவர படிவுகளின் மூலமாகவும் கற்கள் மூலமாகவும் இயற்கையான முறையில் வடிகட்டப்படுகின்றன. பின்னர் நீர்த்தொட்டியில் சேகரிக்கப்படுகிறது. நீர் முழுமையாகச் சுத்திகரிக்கப்பட்ட பின் பாசனத்துக்குப் பயன்படுத்தப்படும் நிலை அடையும்.

திடக்கழிவுக்குத் தனியாக மேலாண்மை கையாளப் படுகிறது. அதில் உள்ள நச்சுத்தன்மை, துர்நாற்றம் நீக்கப்பட்டு உரம் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

**தமிழகம் முதலிடம்:** மனிதக் கழிவுக் கசடு நீக்கல் (FST) வசதி தமிழகத்தின் கருங்குழி என்ற ஊரில் அமைக்கப் பட்டுள்ளது. இந்தியாவிலேயே இத்தகைய வசதிப் பெற்ற முதல் நகரம் என்றும் கருதலாம். மேலும், கழிவை முழுமையாக மறுசுழற்சியால் பயன்படுத்தும் முதல் நகரம் கருங்குழி என்பது குறிப்பிடத் தக்கது. கழிவறை வசதி, பாதுகாப்பாக கழிவை அகற்றுதல், சுத்திகரித்தல் ஆகிய அனைத்து வசதிகளும் கொண்டதாக நகரம் அமைகிறது.

டாய்லட் ஏக் பிரேம் கதா (Toilet Ek Prem Katha), ‘பேட்மேன்’ (Padman) ஆகிய இந்தி திரைப்படங்கள் சுகாதாரம், மாத விலக்கு ஆகியவை குறித்த விழிப்பு ஏற்படுத்தும் படங்களாகும். திரைப்படங்களும் ஊடகங்களும் மக்களுக்கு கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கு வலிமையான கருவிகள் ஆகும். முழுமையான சுகாதார சுழற்சி (Full cycle of sanitation) என்றால் என்ன என்றும் தண்ணீரை முறையாகப் பயன் படுத்துவது, தண்ணீர் சிக்கனம் ஆகியவை குறித்தும் சமூகத்துக்கு இன்றைக்கு ரோட்டரி எடுத்துரைக்க வேண்டி யுள்ளது. அப்படி எடுத்து ரைப்பதன் மூலம் அதன் புகழ் மேலோங்கும்.

பள்ளியில் WinS திட்டத்தை ரோட்டரி செயல்படுத்தத் தொடங்கியதை அடுத்தும் இந்திய அரசின் முயற்சிகளை அடுத்தும் நாட்டில் பள்ளிக் குழந்தைகளின் உடல்நலம் பாதுகாக்கப்படுவதில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக லட்சக்கணக்கான பள்ளிச் சிறுவர்களுக்கு இன்று நல்ல, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைக்கிறது. சுகாதார வசதி, அடிப்படை சுகாதாரம் ஆகியவை கிடைக்கின்றன.

இந்நிலையில், தண்ணீர் வீணாவதைத் தடுத்து, சிக்கனமாகவும் பயன்படுத்துவது குறித்து நகர்புற, கிராமப்புற மக்களிடையில் விழிப்புணர்வு ஏற்படுத்த உரிய பிரசாரங்கள், கருத்தரங்குகளை நடத்துவதற்கு இதுவே சரியான தருணமாகும். சிங்கப்பூர், இஸ்ரேல் ஆகிய நாடுகளில் கையாளப்படுவது போல கழிவு நீரையும், அழுக்கு நீரையும் எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டறிந்து பயன்படுத்தலாம்.

C பாஸ்கர்
இயக்குநர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

# District Wise TRF Contributions as on January 2019

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 29,218 | 3,029 | 0 | 8,000 | 40,247 | 190 | 4.2 |
| 2982 | 42,254 | 4,424 | 0 | 243 | 46,921 | 254 | 8.8 |
| 3000 | 10,631 | 1,000 | 72,766 | 29,265 | 113,661 | 18 | 0.4 |
| 3011 | 61,865 | 5,668 | 19,261 | 19,930 | 106,723 | 105 | 3.2 |
| 3012 | 64,222 | 150 | 269,069 | 8,800 | 342,241 | 73 | 2.2 |
| 3020 | 14,375 | 58,875 | 2,625 | 5,000 | 80,875 | 54 | 1.4 |
| 3030 | 13,747 | 0 | 0 | 0 | 13,747 | 6 | 0.1 |
| 3040 | 2,509 | 0 | 19,245 | 0 | 21,755 | 3 | 0.1 |
| 3053 | 44,857 | 0 | 0 | 0 | 44,857 | 13 | 0.5 |
| 3054 | (18,582) | 0 | 88,214 | 0 | 69,633 | 30 | 0.5 |
| 3060 | 12,100 | 796 | 145,229 | 102,381 | 260,506 | 588 | 14.3 |
| 3070 | 77,128 | 300 | 0 | 0 | 77,428 | 266 | 9.2 |
| 3080 | 71,272 | 8,702 | 15,657 | 5,000 | 100,631 | 57 | 1.8 |
| 3090 | 26,635 | 0 | 0 | 0 | 26,635 | 69 | 3.4 |
| 3100 | 19,623 | 475 | 0 | 0 | 20,098 | 76 | 4.6 |
| 3110 | 24,229 | 2,630 | 29,215 | 0 | 56,075 | 41 | 1.1 |
| 3120 | 53,960 | 0 | 217,897 | 0 | 271,857 | 53 | 1.7 |
| 3131 | 234,767 | 5,263 | 205,346 | 33,203 | 478,579 | 715 | 14.0 |
| 3132 | 10,002 | 310 | 14,571 | 40,000 | 64,884 | 19 | 0.5 |
| 3141 | 448,114 | 8,383 | 749,075 | 26,286 | 1,231,858 | 552 | 11.0 |
| 3142 | 239,566 | 50 | (438) | 0 | 239,178 | 476 | 15.1 |
| 3150 | 66,844 | 2,043 | 61,487 | 313,467 | 443,841 | 446 | 12.8 |
| 3160 | 49,081 | 580 | 0 | 9,287 | 58,949 | 112 | 4.7 |
| 3170 | 58,215 | 2,610 | 16,486 | 0 | 77,311 | 175 | 3.3 |
| 3181 | 70,530 | 691 | 0 | 103 | 71,324 | 239 | 7.9 |
| 3182 | 58,427 | 100 | 11,367 | 0 | 69,894 | 227 | 7.2 |
| 3190 | 67,178 | 4,197 | 10,530 | 1,449,359 | 1,531,264 | 487 | 10.2 |
| 3201 | 43,168 | 10,236 | 180,987 | 0 | 234,391 | 124 | 2.4 |
| 3202 | 14,034 | 19,762 | 0 | 0 | 33,796 | 38 | 0.8 |
| 3211 | 34,859 | 2,423 | 0 | 1,515 | 38,797 | 172 | 3.9 |
| 3212 | 87,032 | 6,530 | 5,250 | 24,000 | 122,812 | 99 | 2.5 |
| 3231 | 24,489 | 2,480 | 4,286 | 3,500 | 34,755 | 223 | 7.5 |
| 3232 | 99,622 | 785 | 122,867 | 1,000 | 224,274 | 129 | 3.0 |
| 3240 | 52,075 | 208 | 525 | 0 | 52,808 | 98 | 3.4 |
| 3250 | 17,086 | 1,834 | 9,216 | 0 | 28,136 | 39 | 1.1 |
| 3261 | 11,718 | 1,100 | (1,492) | 2,000 | 13,327 | 16 | 0.6 |
| 3262 | 27,244 | 1,429 | 900 | 6,213 | 35,786 | 100 | 3.1 |
| 3291 | 91,626 | 0 | 79,028 | 800 | 171,455 | 191 | 5.3 |
| **India Total** | **2,355,720** | **157,062** | **2,349,170** | **2,089,351** | **6,951,303** | **6,573** | **4.7** |
| 3220 **Sri Lanka** | 72,096 | 2,725 | 2,626 | 7,000 | 84,447 | 128 | 7.1 |
| 3271 **Pakistan** | 33,122 | 27,799 | 2,275 | 0 | 63,196 | 20 | 1.4 |
| 3272 **Pakistan** | 18,308 | 2,141 | 0 | 0 | 20,449 | 25 | 0.9 |
| 3281 **Bangladesh** | 106,949 | 2,900 | 48,132 | 15,756 | 173,737 | 169 | 3.1 |
| 3282 **Bangladesh** | 36,550 | 910 | 0 | 3,000 | 40,460 | 84 | 2.1 |
| 3292 **Nepal** | 190,029 | 12,711 | 91,632 | 0 | 294,372 | 282 | 6.5 |
| **South Asia Total** | **2,812,774** | **206,248** | **2,493,835** | **2,115,107** | **7,627,965** | **7,281** | **4.6** |
| **World Total** | **65,948,448** | **16,631,160** | **10,465,887** | **16,146,916** | **109,192,411** | | |

Source: RI South Asia Office

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

# GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.

KshetraGuru® PROPERTY

SwarnaGuru® GOLD

FDGuru® FIXED DEPOSIT

VyaparGuru® STOCK BROKING

ShuruGuru™ IPO

YojanaGuru® GOVERNMENT BONDS

NidhiGuru™ MUTUAL FUND

AmulyaGuru™ PRECIOUS STONES



Nivesh Guru Advisors Private Limited
68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021

+91 22 2288 0808 info@niveshguru.in www.niveshguru.in

# ரோட்டரியின் கதவுகளை அடைக்க வேண்டாம்!

ரஷீதா பகத்

ரோட்டரியில் பலர் சேருவதற்கு முன் வரும்போது, கதவுகளை அடைக்க வேண்டாம் என்று RI தலைவர்-தேர்வு (RIPE) மார்க் மலோனி வலியுறுத்தினார்.

ரோட்டரியின் 3291, 3232 மற்றும் 3030 வது மாவட்டங்களின் PETS, SETS கருத்தரங்குகளில் அவர் பேசினார்.

ரோட்டரியினர் ரோட்டரி முக்கியமா, குடும்பம் முக்கியமா என்று குழம்ப வேண்டாம். இரண்டையும் ஒன்று போலக் கருதி செயல்பட வேண்டும். நமது தேவைகளைப் பொறுத்தவரையில் யதார்த்தமானதாக இருக்க வேண்டும். தற்போதைய பண்பாட்டை மாற்றுவதற்கு ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். ரோட்டரியின் அனைத்து நிகழ்வுகளுக்கு நமது குழந்தைகளை வரவேற்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலகை இணைக்கும் ரோட்டரி (Rotary connects the world) என்ற 2019-20ம் ஆண்டுக்கான குறிக்கோளைச் சுட்டிக் காட்டிய மலோனி, ரோட்டரியினர் தங்களது உறுப்பினர்களுக்குப் புதிய பாதைகளைத் திறந்து விட வேண்டும். மேலும் புதிதாக தொடர்புகளை ஏற்படுத்தவேண்டும். ரோட்டராக்ட் இளைஞர்களை மிகச் சிறந்த கூட்டாளிகளாகப் போற்றி, அரவணைத்துக் கொள்ளவேண்டும். அவர்களது திறன்களைக் கொண்டு நல்ல பலன்களை ஏற்படுத்த முடியும் என்றார். மேலும் அவர் பேசியதாவது:

ரோட்டரி விவகாரங்களை அவர்கள் ஏற்கெனவே நன்கு உள்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை வழிநடத்திச் செல்வதுதான் நீங்கள் செய்யவேண்டியது. அவர்களுக்குச் சமுதாய நலன்களில் உற்சாகமாகத்தான்




*RIPE மார்க் மலோனி, RID C பாஸ்கர், மாலா, PRID PT பிரபாகர், நளினி, DGE G சந்திரமோகன் மற்றும் மஞ்சுளாவுடன் 2019-20 சங்கத் தலைவர்கள் சென்னையில் நடைபெற்ற PETS/SETS கருத்தரங்கில்.*

செயல்படுகிறார்கள். சமூகத்தின் தேவைகளைக் கண்டறிவதில் வல்லவர்கள். நெளிவு சுளிவோடு செயல்படுபவர்கள். சமூக ஊடகங் களுடன் நன்கு தொடர்புள்ளவர்கள். புதியதை எப்படி ஆக்க வேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்தவர்கள்.

ரோட்டரியினர் சமுதாய நலன் மனப்பான்மை கொண்ட இளைஞர் களை வரவேற்று, நாளைய தலைவர்களை உருவாக்கும் வகையில் அவர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ரோட்டரி தலைவரின் பணி என்பது எதற்கும் நேரமின்றி, ஓய்வில்லாது வேலை என்று நினைக்கும்படி ஆகிவிடக் கூடாது. தன்னார்வத் தொண்டர்களை முழுநேரப் பணியைப் போல் ஆக்குவதன் மூலம் நமது ரோட்டரிக்குத் தேவை யானவர்களுக்குக் கதவுகளை மூடிவிடுகிறோம். அவர்கள்தான் பல ஆண்டுகளுக்குத் தொண்டு புரிவதற்கும் தலைமை வகிப்பதற்கும் ஆற்றல் படைத்தவர்கள். அவர்களுக் காகக் கதவுகளைத் திறந்து வையுங்கள்.

நான் அமெரிக்காவின், அலபாமா டெகாடூர் ரோட்டரி சங்கத்தின் தலைவராகப் பணியாற்றத் தயாராக இருந்தபோது, இதுபோன்ற பயிற்சிக் கருத்தரங்குகள் அங்கே நடத்தப்படவில்லை. அமெரிக்காவின் சில பகுதிகளில் மட்டுமே உண்டு. அது 1985ம் ஆண்டு. அதற்காக நான் வயதானவன் என்று அர்த்தமாகாது. ரோட்டரியில் இளம் வயதிலேயே ஈடுபட ஆரம்பித்து, 30 வயதிலேயே தலைவராகி விட்டேன் அவ்வளவுதான். ரோட்டரி சங்கத் தலைவராக இருந்தபோது எப்படிச் செயல்பட்டேனோ அதே மாதிரிதான் மாவட்ட ஆளுநராக, RI இயக்குநராக, அறங்காவலராக இருந்தபோதும் செயல்பட்டேன். இன்னும் ரோட்டரியிடமிருந்து தினமும் ஏதாவது கற்றுக் கொள்கிறேன். வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.



## *வம்பாய் போன அறிவுரை!*

*D 3030ன் PETS/SETS தலைவர்கள், செயலர்ளுக்கான கூட்டத்தில் பேசிய RIDE பரத் பாண்ட்யா, உபதேசம் கூறுவதில் கவனமாக இருக்க வேண்டும் என்று நகைச் சுவையாகக் கூறினார்.*

*எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதில் நாமே முன்னோடியாக, உதாரணமாக இருக்க வேண்டும் என்று ஒரு கூட்டத்தில் பேசினேன். "உங்களது உறுப்பினர்கள் புதிய ஆட்களைக் கொண்டு வரவேண்டும், திட்டங்களில் அவர்கள் ஈடுபட வேண்டும் என்றால், அதை நீங்கள் முதலில் செய்யுங்கள்" என்றேன்.*

*"ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு நிதி அளிக்க வேண்டுமானால், முதலில் உங்களது நிதியை அளித்து உதவியைத் தொடங்குங்கள்" என்றேன்.*

*இது ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக பில் போய்டும், நான் ஆளுநராகவும் இருந்தபோது இப்படிக் கூறினேன்.*

*இப்படி அறிவுரை கூறுவது வம்பில் மாட்டிவிடும். ஒரு நாள் செஸ் விளையாட்டைத் தொடங்கி வைக்கும்போது, ஆட்டத்தை ஆடினேன். இரண்டாவது நாள் மும்பை மிட்டவுன் ரோட்டரி ஏற்பாடு செய்த இஸ்கான் மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது, அந்த உணவில் கொஞ்சம் மாதிரிக்காக சாப்பிட்டேன். மூன்றாவது நாள் முலந்த் ரோட்டரி சங்கம் ஏற்பாட்டில் சுடுகாட்டைத் திறந்து வைக்க அழைக்கப்பட்டேன். அச்சங்கத்தின் செயலர் என்னிடம், "உங்களது காலம் முடிவதற்குள் திட்டத்தை பூர்த்தி செய்வோம். நீங்கள் தொடங்கி வைப்பீர்கள்" என்று குறிப்பிட்டார். அதிலிருந்து எந்தத் திட்டத்தையும் நாமே உதாரணமாக இருந்து தொடங்கி வைக்க வேண்டும் என்று அறிவுரை கூறுவதில்லை என்றார்.*



RIPE *மார்க் மலோனி*

ரோட்டரிக்குத் தேவையான நிர்வாகம் மற்றும் அமைப்புக்குரிய திறன்களைக் கொண்டிருப்பதால், மிகப் பெரிய அளவிலான மனித நேயப் பணிகளுக்கு நான் வழியமைத்துத் தந்திருக்கிறேன்.

ரோட்டரி தலைவர்கள் வரும் ஆண்டுகளில் ரோட்டரி குறித்த அணுகுமுறைகளை ஆராய வேண்டும். ரோட்டரி தலைவர்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட சகாக்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். திறன்கள், அனுபவங்கள், கோணங்கள் ஆகிய வற்றின் பன்முகத் திறன் ரோட்டரியைச் சிறந்ததாக்கியுள்ளது. அதே சமயம் ரோட்டரியை இன்னும் சிறப்பானதாக்க முடியும் என்று உறுதியாக நம்புகிறேன்.

ரோட்டரியில் சமூக நலத் திட்டங்கள் எல்லாமே சிறப்பாக நடை பெற்று வருகின்றன. ஆனால், உறுப்பினர்களைத் தக்க வைத்தல், மேம்படுத்துதல் ஆகிய




ரோட்டரி என்றாலே இணைப்புப் பாலம்தான். ரோட்டரி சங்கம்தான் அதன் உறுப்பினர்களை உலக அளவிலான சமூகத்துடன் இணைக் கிறது. ஆனால், சங்கத்தின் தலைவர் உத்வேகத்துடன் செயல்படாவிட்டால், சங்கம் சரியாக இயங்காது. சில ரோட்டரி சங்கங்கள் அடுத்த தலைவர்கள் குறித்து கவனம் செலுத் தப்படாததை அது குறித்த செயல்களில் ஈடுபடாததைப் பார்த்திருக்கிறேன். அத்தகைய சங்கங்களால் என்ன பயன் என்று தெரிவதில்லை. சிறப் பாகச் செயல்பட்ட சங்கங்களையும் பார்த்திருக்கிறேன். நல்ல திட்டங்களை மேற்கொண்டுள்ள உறுப்பினர்களுடன் உறவாடிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். தலைவர்கள் என்ற முறையில் நீங்கள் நிறைய பணியாற்ற வேண்டியிருக்கிறது. ஜூலை மாதம் 1ம் தேதி பொறுப்பேற்கும்போது ரோட்டரி எப்படி இருந்ததோ அதை விட சிறந்ததாக ஜூன் 30ம் தேதி நாம் விடைபெற்றுச் செல்லும்போது இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

### பகிர்வோம் பணிகளை

எல்லாவற்றையும் நாமே செய்ய வேண்டும் என்பது பலன் தராது. உண்மையில், தங்களைச் சுற்றியுள்ளவர் கள் இயன்றதையெல்லாம் சாதிப்பதற் குத் தூண்டுகோலாக இருப்பவர்தான் தலைவர். எல்லாவற்றையும் நாமே செய்ய வேண்டிய அவசியமில்லை. இணைந்து செயல்படுவதிலும் பிரச் சினைகளைத் தீர்ப்பதிலும் ரோட்டரியினராகிய நாம் வல்லவர்கள். தலைவர்கள் என்ற முறையில் உங்களது மிகப் பெரிய சொத்து உங்களது உறுப்பினர்களும் அவர்களது திறன்கள், நலன்கள், ஆர்வங்கள் ஆகியவையும்தான். உங்களது உறுப்பினர்களுக்கு எது தூண்டுதலாக இருக்கும் என்பதை அறிவதில் நீங்கள் வல்லவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான், நீங்கள் அவர்கள் சிறந்தவற்றைச் சாதிப்பதற்குத் தூண்டுதலாக இருப்பீர்கள்.

ஒவ்வொருவரும் ஏதாவது வித்தியாசமானவற்றால் உந்தப்பட்டு, வித்தியாசமான திறன்களைக் கொண்டு வருகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் உலகின் சிறந்த மனித நேயம் மிக்கவன் உடையவனாக இல்லாதிருக்கலாம். காரணம், நான் என்னை நல்ல நிர்வாகியாகக் கருதுகிறேன்.

ரோட்டரியின் உள்விவகாரங்களைக் கவனித்தால், ரோட்டரி சங்கங்கள் அமைப்பு சார்ந்த திறன்களைச் சரிவர பயன்படுத்தவில்லையோ எனத் தோன்றுகிறது.

ரோட்டரி சங்கங்கள் சமூகத்தில் செயல்படும்போது எத்தகைய புதுமை, உற்சாகம், அமைப்புக்குரிய திறன்கள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கின்றனவோ அதே மாதிரியானவற்றையே அமைப்புகளுக்குள்ளேயும் கடைப் பிடிக்கவேண்டும் எனக் கருதுகிறேன்.

## ரோட்டரியை வளர்ப்போம்

உறுப்பினர்கள் சேர்க்கை பற்றி நிறைய பேசுகிறோம். கடந்த ஆண்டு, ரோட்டரிக்கென சாதனை இலக்கை நிர்ணயித்தோம். ஆனால், எவ்வளவு பேர் விலகினார்கள் என்பது குறித்து எதுவும் எண்ணிக்கை இல்லை. சிலர் தங்களது எதிர்பார்ப்புக்கு ஏற்ப ரோட்டரி இல்லை என்ற காரணத்தாலே விலகிவிட்டனர். அவர்கள் மட்டும் விலகவில்லை, அவர்களது அனுபவம், திறமை, தலைமைப் பண்பு ஆகியவையும் விலகிவிட்டதாகக் கருத வேண்டும். ஆனால், ஓர் அமைப்பில் இத்தகைய சவால்களை நாம் புதிய உத்தியோடு எதிர்கொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

நம் ஏதாவது செய்ய நினைத்தால், என்னவெல்லாம் சாதிக்க இயலும் என்று பார்க்க வேண்டும். போலியோவையும் விரைவில் ஒழிப்போம். நமது உத்தியோடு கூடிய இலக்கில் முழுக் கவனம் செலுத்தினால், நாம் நல்லவற்றைச் செய்யும் சக்தியாக மாறிவிடுவோம்.

ஆனால், இந்த ஆற்றல் தொடர்வதற்கு, ரோட்டரியை வளர்க்க வேண்டும். உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அந்தப் பணியை ஆற்றுவதற்கு நிறைய கரங்களும் நிறைய பிரச்சினைகளைத் தீர்க்க மூளையும் தேவை. உங்களது உறுப்பினர் அளவே போதும் என்றும் ரோட்டரி வளரும்போது ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் ரோட்டரியினர் கருதலாம். உறுப்பினர் சேர்க்கை என்பது பல பொறுப்புகளில் ஒன்று என்று ரோட்டரி தலைவர் கூறலாம். ஆனால், உறுப்பினர்கள் இல்லாமல், ரோட்டரி இல்லை. மேலும் மேலும் சாதிக்க வேண்டுமானால், ஏற்கெனவே செய்ததையும் கவனிக்க வேண்டும். அதுதான் மக்களுடன் நம்மை இணைப்பது. அதுதான் நமது பலம். நமது சிறந்த வெகுமதியும் ஆகும்.

ரோட்டரி தலைவர்கள் தங்களது சங்கங்களுக்குள் பல்வேறு பின்னணியைக் கொண்ட உற்சாகமாகச் செயல்படும் உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டியை அமைக்க வேண்டும். பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களையும் தலைவர்களையும்




D 3030 DG *ராஜீவ் சர்மா* RIDE *பரத் பாண்டியாவை,* RIPE *மலோனி,* DGE *பாம்ரே,* PDGs *கிஷோர் கேடியா மற்றும் தத்ராத்ரேயா தேஷ்முக், முன்னிலையில் கௌரவிக்கிறார்.*




D 3250 PDG *சந்தீப் நரங்* RIPE *மலோனியை,* RIDE *கமல் சங்வி, சோனல்,* R N *சிங்,* DGE *கோபால் கேம்கா மற்றும் அவிட்டா முன்னிலையில் கௌரவிக்கிறார்.*

ஈடுபடுத்தி, ரோட்டரியை வலுப்படுத்த இது துணை புரியும். அத்தகைய கமிட்டிகள் குறித்து என்னென்ன செய்யலாம் என்பதை அறிய என்ற தளத்தில் rotary.org அறிந்து கொள்ளலாம்.

ஐ.நா. சபையின் 75வது ஆண்டு விழா 2019-20ம் ஆண்டு நடைபெறுகிறது. அதையொட்டி, ரோட்டரி ஐ.நா. மன்றம் மூலமாகவும் உலகுடன் இணைப்பை ஏற்படுத்த வேண்டியுள்ளது. ரோட்டரிற்க்கும் ஐ.நா. சபைக்கும் வரலாற்றுப்பூர்வமான உறவு உள்ளது.

ஆரோக்கியமான, வளமான, நீடித்த உலகைப் படைப்பதில் நாம் உறுதியோடு செயல்படவேண்டுமென்று மார்க் மலோனி பேசினார்.

D 3291ன் புதிய தலைவர், செயலர்களிடம் பேசிய RIDE கமல் சங்வி, நீங்கள் எல்லாம் கூடியிருக்கும் இந்த அறையில் வீரியத்தையும் உற்சாகத்தையும் நான் காண்கிறேன். இந்த உலகை மாற்றுவதற்கு உரிய தனி கவுரவமும் கடமையும் உங்களுக்கென இருப்பதை நீங்கள் உணர்கிறீர்களா? பிறரது வாழ்க்கையில் மகிழ்ச்சியையும், புன்னகையையும் ஏற்படுத்தி, நீடித்த மாற்றத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை வாய்ப்பை ஒரு சிலரே பெறுகிறார்கள். ரோட்டரி தலைவர்கள் தங்களது வாழ்நாளில் கிடைத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஆண்டின் அனைத்து நாட்களிலும் எதைக் கனவு கண்டீர்களோ அதைப் பெரிய அளவில் நினைத்து சாதியுங்கள். நீங்கள்தான் உங்களது ஆளுநர்களின் கண்களாக, கைகளாக, கால்களாகத் திகழ்கிறீர்கள்.

ஆனால், RI தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்ட மார்க் மலோனிக்கும் உங்களது மாவட்ட ஆளுநர்களுக்கும் இந்த ஆண்டு அற்புதமான ஆண்டாக அமைவதற்கு, ஆவேசமாக, சிங்கம், புலியைப் போல் வேகமாகச் செயல்பட வேண்டும். உங்களது கனவுகள் நிறைவேறுவதற்கு அச்சமின்றிப் பணியாற்ற வேண்டும்.

*ரோட்டரி அளவில் நிகழும் எல்லாமே ரோட்டரி சங்க நிலையில் தான் நடைபெறுகின்றன. ரோட்டரி சங்கங்களில் என்ன செய்யப் படுகிறது என்பதை வைத்துதான் முடிவு செய்யப்படும்.*

**RIDE கமல் சங்வி**

பள்ளிச் சிறுவர்களுக்கு நோட்டுப் புத்தகம், பென்சில் அளிக்கும் கால மெல்லாம் மலையேறிவிட்டது. இப்போது பள்ளிக் கூடங்களைக் கட்டித் தரவேண்டும். கனவுகள் பெரிதாகத் தான் இருக்க வேண்டும். உங்களது காலத்தில் இதுவரை செய்யாத அளவுக்கு பெரிய திட்டங்களை ஏற்றுச் செயல்படுத்த வேண்டும். அது மக்களிடையில் நமக்குள்ள புகழை மேலும் அதிகரிக்கும் என்று கேட்டுக் கொண்டார்.

தனது உரையை நிறைவு செய்த அவர், தோல்வியைக் கண்டு அஞ்சாதீர்கள். எல்லோரும் கீழே விழுவார்கள். ஆனால், வீழ்ச்சிக்குப் பிறகு எழுந்து செயல்பட்டால், வெற்றி உங்களைப் பின்தொடரும் என்றார்.

DGE அஜய் அகர்வால் பேசு கையில், இந்த மாவட்டத்தின் கீழ்

# குவிந்த மாலைகள்

இதெல்லாம் நமக்கு சாதாரணமப்பா என்று RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க் மலோனி கூறினார். கோல்கத்தா, அமராவதி ஆகிய நகரங்களில் நடைபெற்ற ரோட்டரி தலைவர், செயலாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகளில் பேசியபோது அவருக்கு உறுப்பினர்கள் மாலைகள் அணிவித்து, மகாராஷ்டிர மரபில் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.

கல்கத்தா மகாநகர் ரோட்டரி சங்கத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு குறித்து கேட்டதற்கு, மார்க் மலோனி, அமெரிக்காவில் ஒரு பிரமுகர் அறிமுகம் மட்டும் செய்யப் படுவார், அவ்வளவுதான். இங்கே கொண்டாடப்படுகிறார். ஊருக்குத் திரும்பியதும் எப்படி வரவேற்பு அளிக்க வேண்டும் என எங்கள் ஆட்களுக்குக் கற்றுத் தரப் போகிறேன். PRID சேகர் மேத்தாவை கல்கத்தா மகாநகரின் பெருமிதம் என்று போற்றியபடி அறிமுகம் செய்துவைத்தார். எங்களது அலபாமா டெக்காடர் ரோட்டரி சங்கத்தில் என்னை அறிமுகம் செய்யும்போது, "ஹே மார்க்" என்பதுடன் சரி, அவ்வளவுதான் என்றார்.

சுசீல் குப்தாவுக்கு முன்பு தான் RI தலைவராக நியமிக்கப்பட்டதாகக் கூறிய மார்க் மலோனி, டெக்காடரில் உள்ள இரு ரோட்டரி சங்கங்களின் சார்பில் இரவு விருந்து அளிக்கப் பட்டது.அது போல் இன்னொரு நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. அவ்வளவுதான். சுசீல் குப்தாவை கவனித்துக் கொண்டே வருகிறேன். அவருக்கு இன்னமும் இந்தியா முழுவதும் பாராட்டு நடத்தப்பட்டு வருகிறது. அவரிடம் ஏராளமான சால்வைகளும், பூங்கொத்துகளும் இருக்கின்றன. அமெரிக்காவை விட நீங்கள் நிறைய செய்கிறீர்கள். அமெரிக்காவில் "மார்க் மலோனி தலைவராகப் போகிறார், தெரியுமா?" என்பார். "நாமும் ஒரு நாள் தலைவராகப் போகிறோம்" என்று இன்னொருவர் சொல்வார், என்றார் மார்க் மலோனி.

நிகழ்ச்சிக்கு அடுத்த நாள் காலையில் கோல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சியில் அவருக்கு மிகப் பெரிய மாலை போடப்பட்டபோது, மிகவும் அசந்து போனார் மலோனி.



RIDE சங்வி, சோனல், RIPE மலோனி, RN சிங் மற்றும் PDG ராக்கேஷ் பிரசாத்.

ஜெய்ப்ரீ




சென்னையில் DG பாபு பேரம் மற்றும் DGE G சந்திரமோகன் RIPE மலோனியை DGN S முத்துப்பழனியப்பன் அவர்களுடன் வரவேற்கிறார்.

## மலோனியும் சென்னை ரோட்டரியும்!

ஜெய்ஸ்ரீ

D 3232ன் PETS/SETS பயிற்சிக் கருத்தரங்கில் RID C பாஸ்கர் பேசினார்.

உலக அளவில் ரோட்டரி அமைப்பு களில் இந்த ஆண்டு மொத்தம் 16,764 பேர் புதிதாக உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டுள்ளனர். அவர்களில் 8,659 பேர் இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இது உலக அளவில் 51 சதவீதமாகும் என்றார் அவர்.

உலகம் முழுவதும் மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட (DRRE) 50 பேர் DGEக்களுடன் இணைந்து இந்த ஆண்டு நடைபெற இருக்கும் சர்வதேச சபையில் (International Assembly) பயிற்சி பெற இருக்கின்றனர். அவர்களை மார்க் மலோனி பாராட்டியதை பாஸ்கர் வரவேற்றார்.

2017-18ம் ஆண்டில் இயக்குநராக நான் பொறுப்பேற்ற போது, ரோட்டராக்ட் பிரதிநிதிகளில் 9 சதவீதம் பேர்தான் பங்கேற்றனர். ரோட்டராக்ட் சங்கங் களின் பலத்தை அறிவதற்கு இந்தப் புள்ளி விவரம் அவசியம். ஆனால், RI அமைப்பிடம் அதற்கான குறிப்பிட்ட படிவமோ, புள்ளி விவரமோ இல்லை. ஆனால், மாவட்ட ஆளுநர்கள் (DGs), மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் (DRRs), மாவட்ட ரோட்டராக்ட் கமிட்டி தலைவர்கள் (DRCCs) ஆகியோருடன் விவாதம் நடத்தியதுடன், பயிற்சித் திட்டமும் நடத்தியதை அடுத்து உறுப் பினர்களின் எண்ணிக்கை 78 சதவீதமாக உயர்ந்தது என்றார் பாஸ்கர்.

இன்று நமது உறுப்பினர்களின் எண்ணிக்கை 100 சதவீதமாக உயர்ந்துள்ளது. RI தலைவர் பார்ரி ரஸ்ஸின், RIPE மார்க் மலோனி ஆகியோரது முயற்சியால், உலக அளவிலான உறுப்பினர்களின் எண்ணிக்கை 18 சதவீதத்திலிருந்து 34 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்தியாவில், 333 ரோட்டராக்ட் சங்கங்கள் கடந்த ஜனவரி 31ம் தேதி வரையில் பட்டய அங்கீகாரம் பெற்றுள்ளன என்றும் பாஸ்கர் குறிப்பிட்டார்.

புதிதாகப் பொறுப்பேற்கும் தலைவர்கள் நடப்பு ஆண்டு இறுதிக்குள் ரோட்டரியினரின் எண்ணிக்கையை இரு மடங்காக உயர்த்த வேண்டும். அது தான் மலோனியின் இலக்கு ஆகும். அது கடினமான சவால் அல்ல. நீங்கள் எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள். உங்களது இலக்குகளை அடைவதற்கு நீங்கள் இணைந்து செயல்படுங்கள் என்றும் அவர் கூறினார்.

PRID P T பிரபாகர் கூறும்போது மலோனிக்கு அபார நினைவாற்றல் உண்டு. நான் இயக்குநராக இருந்த போது, உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் முந்தைய ஆண்டு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை எல்லாம் துல்லியமாக விவரிப்பார் என்று பாராட்டினார்.

கேள்வி நேரத்தின்போது, தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், இளம் ரோட்டரியினரை ஊக்குவிப்பதற்காக சிறப்பு சலுகைத் திட்டத்தை அறிவிக்கலாம் என்று யோசனை கூறினார். அதற்குப் பதிலளித்த மலோனி, சங்கங்களில் கடைப்பிடிக்கப்படும் தாராளப் போக்கு குறித்த ரோட்டரியின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தினார். உலக அளவில் குறிப்பிட்ட பகுதிகளுக்கென்றும், குறிப்பிட்ட வயதினருக்கென்றும் தனியாக கட்டணங்களை நிர்ணயிப் பதற்கு மாறாக அந்தந்த ரோட்டரி சங்கங்கள் தங்களது வசதிக்கு ஏற்ப முடிவு செய்து கொள்ளலாம் என்றார்.

RI அமைப்பில் பெண்கள் உயர் பதவியைப் பெறுவது குறித்து தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விஜயா பாரதி கேள்வி எழுப்பியபோது, ஐந்தாண்டுகளுக்குள் அது நிறை வேறும் என்று பதிலளித்து, இது மார்க் மலோனியின் (தனது) கருத்து. காரணம் இதை என்னால் மட்டும் செயல்படுத்த இயலாது என்றார் மலோனி.

ரோட்டரியில் படிப்படியாகத் தான் தலைவர்கள் வருகிறார்கள். RI தலைவராக வரவேண்டுமானால், RI அமைப்பின் இயக்குநராக இருக்கவேண்டும். தற்போது முன்னாள் இயக்குநர்களாக 14 பெண்கள் இருக்கிறார்கள். அவர்களில் சிலருக்குத் தலைமைப் பதவியில் நாட்டமில்லை. ஒரு சிலர் தங்களது பொறுப்புகளை அண்மையில் நிறைவு செய்து, அனுபவத்தைப் பெற்று வருகின்றனர். தற்போது முன்னாள் இயக்குநர்களாக சுமார் 150 ஆண்கள் உள்ளனர். இந்த ஆண்டு ரோட்டரி போர்டில் ஒரு பெண் கூட இல்லை. நாம் எதுவும் செய்யவில்லை. ஒவ்வொரு மண்டலமும் தனது இயக்குநரைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. அங்கே ஆண்களே இருக்கிறார்கள் என்றார்.

2020-21ம் ஆண்டில் இரு பெண் இயக்குநர்கள் வர இருக்கிறார்கள். அதையடுத்த ஆண்டு 5 பெண்கள் வருகிறார்கள்.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்க நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களை DGE G சந்திரமோகன் வரவேற்றுப் பேசினார். DGN முத்து பழனியப்பன் நன்றி தெரிவித்துப் பேசினார். நிகழ்ச்சியில் பாபு பேரம் உள்ளிட்ட மாவட்ட ஆளுநர்கள் கலந்து கொண்டனர்.

100 ரோட்டரி சங்கங்கள் உள்ளன. அவற்றில் மொத்தம் 4 ஆயிரம் உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 37 சதவீதம் பேர் பெண்கள். இந்த சங்கங்களில் 102 ரோட்டராக்ட் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 50 சங்கங்கள் தீவிரமாகச் செயல்படுபவை என்றார்.

இந்த ஆண்டில் உறுப்பினர்களைத் தக்க வைப்பதே குறிக்கோள் என்று கூறிய அவர், ரோட்டரியில் இளைஞர்களை ஈடுபடுத்த வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். ரோட்டராக்ட் சங்கங்களுக்குப் புத்துயிரூட்ட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த மாநாட்டில் விஜய் ஜலான், சாம் படிபண்ட்லா, ரவி வட்லாமணி, ஜவஹர் வட்லாமணி, தீபக் ஷிகர்புர் போன்ற ரோட்டரியின் மூத்த தலைவர்கள் பயிற்சி அளித்தனர்.

### மூன்று முக்கிய தேவைகள்

D 3030 PETS/SETS அமராவதியில் நடைபெற்றது. ரோட்டரியின் தலைமைப் பொறுப்பை ஏற்பவர்களின் தலையில் பெரிய பொறுப்பு சுமத்தப் பட்டிருக்கிறது. அதை உணர்ந்து செயல்படுங்கள் என்று கேட்டுக்



*ரோட்டரி 'சேவிங் லிட்டில் ஹார்ட்ஸ்' திட்டத்தில் பயனடைந்த ஓர் குழந்தையுடன்* RIPE *மலோனி,* RIDE *சங்வி,* PRID *மேத்தா,* RC *கொல்கத்தா மாநகர தலைவர் சித்ரா அகர்வால்,* Dr R P *விதாவன் மற்றும்* D 3291 DG *முக்குல் சின்ஹா.*

கொண்டார் RID பரத் பாண்டியா. ரோட்டரி அளவில் நிகழும் எல்லாமே ரோட்டரி சங்க நிலையில்தான் நடைபெறுகின்றன. 2019-20ம் ஆண்டின் வெற்றி நாம் எப்படிச் செய்கிறோம் என்பதை வைத்து முடிவு செய்யப்படுவதில்லை. ரோட்டரி சங்கங்களில் என்ன செய்யப் படுகிறது என்பதை வைத்துதான் முடிவு செய்யப்படும்.

சீனாவில் மூங்கில் மரம் முதல் 57 மாதங்களில் வளரவே வளராது. ஆனால், பூமிக்குள் இருக்கும் சத்தினை எடுத்துக் கொள்ளும். பூமிக்குக் கீழே அது தேவையான வளர்ச்சியைப் பெறும். 57வது மாதத்திலிருந்து குறுகிய காலத்தில் சுமார் 80 அடி உயரம் வளரும்.

ஜூலை 1ம் தேதி வரையில் காத்திருந்தால், அது தாமதமாகும். இப்போதே திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

அமெரிக்க கடற்படையில் கடைப் பிடிக்கப்படும், 6Ps - முறையான திட்ட மிடல் மோசமான செயல்பாட்டைத் தவிர்த்துவிடும் (Proper Planning And Preparation Prevents Poor Performance) என்பது அந்த வாசகம் ஆகும். எனவே, எதற்கும் தயாராக இருக்கவேண்டும். நமது ரோட்டரி சங்கங்கள் ஏற்கெனவே சிறந்த பணியாற்றுகின்றன. இன்று காலையில் RIPE மலோனியும் நானும் அமராவதி மிட் டவுண் ரோட்டரி சங்கம் செய்து வரும் சில பணிகளைப் பார்வையிட்டோம் என்றார்.

DGE ராஜேந்திர பாம்ரே திட்டமிட்ட முன்முயற்சிகள் குறித்துக் குறிப்பிட்ட பாண்ட்யா எதையெல்லாம் செய்ய வேண்டும் என்பதை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அவற்றின் மீது இன்றே செயல்படத் தொடங்குங்கள். மேலும், வலுவான குழுவைக் கட்டமைத்துக் கொள்ளுங்கள். ரோட்டரி சங்கங்கள் சுவையான நேரக் கெடுவுடன் கூடிய சிறந்த திட்டமிட்ட கூட்டங்களை நடத்த உறுதிசெய்ய வேண்டும் என்றார்.

### எறும்பு தத்துவம்

எறும்பு எவ்வளவு தடைகள் இருந்தாலும் முயற்சியைக் கைவிடாது. கோடைக்காலத்தில் தனக்குத் தேவையான உணவைத் திரட்டி வைத்துக் கொள்ளும். குளிர்காலத்தில் பாதுகாப்பாக பொந்துகளில் தங்கியிருக்கும். அப்போது சேமித்து வைக்கப்பட்ட உணவை வைத்து சமாளிக்கும்.

எறும்பைப் போல் நம்பிக்கை தளராமல் உற்சாகமாக இருங்கள். பெரிதாகவே எண்ணுங்கள். கனவு காணுங்கள்

இவ்வாறு பாண்ட்யா பேசினார்.

மாவட்ட ஆளுநர் ராஜீவ் சர்மா பேசியபோது, RI தலைவராக இருந்த கல்யாண் பானர்ஜிக்குப் பிறகு 10 ஆண்டுகள் கழித்து, RI தலைவர் ஒருவர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு இந்த மாவட்டம் கொடுத்து வைத்துள்ளது.

DGE பாம்ரே பேசுகையில், இந்த ஆண்டில் அனைவரும் இணைந்து பலரது வாழ்க்கையை மாற்றும் வகையிலான நீடித்த மனிதாபிமான திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும். மாவட்ட ஆளுநர் என்ற முறையில் நான் நல்ல ஆளுகையை அளிக்க வேண்டும். மிகச் சிறந்த சகோதரத்துவத்தை மேம்படுத்த வேண்டும். சமூகத்துக்கு நல்ல பணிகளை ஆற்ற வேண்டும். சிறந்த வாரிசுகளை உருவாக்க வேண்டும். நல்ல எதிர்காலத்தை அமைக்க வேண்டும் என்றார்.

வறட்சியில் சிக்கியுள்ள மாவட்டம் என்பதால், நீர்நிலைகளை மேம்படுத்துவது, கிராமத்தைத் தத்து எடுத்துக் கொள்வது, பள்ளிகளில் கைகழுவு திட்டத்தைச் செயல்படுத்துவது ஆகியவற்றுக்கு முன்னுரிமை தரப்படும் என்று அவர் கூறினார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

2019 HAMBURG

Rotary | BE THE INSPIRATION

# Join the Traditional South Asian Reception

## RI Convention, Hamburg

Invite your global partners who support your service projects.


Bring your Rotary friends to show how Rotary works globally.

Opportunity to meet all the world leaders of Rotary.



RID C. Basker
& Malathi Basker

**We cordially invite you to the traditional South Asian Reception on Saturday, June 1, 2019 at Hotel Grand Elysee Hamburg between 5.00 pm - 7.00 pm**



Chairman - PDG Dr. E.K. Sagadhevan
& Dr. Usha

**Venue: Hotel Grand Elysee** Rothenbaumchaussee 10, D- 20148 Hamburg, Germany. Tel: + 49 40 41412–748

## Registration Fee: INR 5,000 / EUR 65 / US $ 75 per person

Payment can be made by cheque payable at par or DD favouring **E.K. SAGADHEVAN** payable at ERODE, TAMIL NADU and send to:

PDG Dr. E.K. Sagadhevan, Chairman - South Asian Reception
Lotus Hospital, 90, Thayumanavar Sundaram Street, Kollampalayam, Erode - 638 002 Tamil Nadu, India.
Mob: +91 99944 77725   E-mail: pdgdrsaga@gmail.com

# Organisation Development Consultants

WE ADD VALUE TO YOUR EFFORTS
Estd. 22-02-2002

## Hyderabad

**Visit us at : www.odchyd.com**

**Mr P Seshadri**
**Management Consultant**

### Introduces New Services for Micro, Small & Medium Level Enterprises & Start up's on

# ORGANISATION DEVELOPMENT

## - Building Sustainable Organisations

Services could be availed as per need and maturity of the organisation

### BASIC Package
**(3 Months)**
**Professional Fees : Rs 2 Lakhs**

Streamlining Systems / Processes in the organisation to meet business requirements

Organisation Development Plan to be provided for one year w.r.t the following aspects based on assessments

- Customer Focus
- Leadership
- Engagement of People
- Process Approach
- Improvements
- Evidence based Decision Making
- Relationship Management

### SUPREME Package
**(6 Months)**
**Professional Fees : Rs 5 Lakhs**
**(Includes BASIC Package Services)**

Business Excellence Assessments w.r.t

- Leadership
- Strategy Development & Deployment
- People Management
- Resources & Infrastructure Management
- Process Management
- Customers Results
- People Results
- Social Results
- Business Results

Formulating Blue Print for Change Management within the organisation for one year and training assistance in initiating implementation of changes

### PREMIUM Package
**(12 Months)**
**Professional Fees : Rs 9 Lakhs**
**(Includes BASIC & SUPREME Package Services)**

Establishing Integrated Management Systems (based on best practices) with 100+ Key Performance Indicators with focus on organisations :

- Economic Performance
- Environmental Performance
- Social Performance

Preparation of Business Sustainability Report which is useful for accessing finance , global work contracts and improving sustainability initiatives of the organisation.

## Professional Profile of Mr. P Seshadri



A qualified Production & Industrial engineer with management specialisation in Industrial Management from Nagpur University has industrial and consulting experience of more than 28 years in the domains of HRD, TQM and OD with Corporates, MSME's and Start-up's.

Practicing as Management Consultant since 2002, he has evolved his core competencies in three areas which include – Developing Management Systems, Facilitating Business Excellence Practices and Establishing Sustainability Reports for Industries and Institutions.

Active with professional / industrial bodies and social organisations, he has held leadership positions in several of such organisation like QCFI, NIPM, ISTD, IMCI, HDCF, FAPCCI, CII, BNI and Rotary International. His current passion as qualified faculty from Rotary Leadership Institute is strengthening Rotary Movement using several initiatives in Clubs, Communities and Corporates.

**Contact:**

98490 82520

pseshadri29@gmail.com

Rotary PEOPLE OF ACTION

# குஜராத் ரோட்டரி மருத்துவமனையில் குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை

ரஷீதா பகத்



வாப்பி ஹாரியா ரோட்டரி மருத்துவமனையில் இதய அறுவை சிகிச்சை நிபுணர் Dr கல்பேஷ் மாலிக்.



குஜராத் வல்சாத் மாவட்டம் வாபியில் உள்ள ஹரியா ரோட்டரி மருத்துவமனையில் குழந்தைகளுக்கான அறுவைச் சிகிச்சை பிரிவு இயங்கத் தொடங்கியுள்ளது. 200 படுக்கைகள் கொண்ட அந்த மருத்துவமனை சூரத் மும்பை நகரங்களுக்கு இடையில் அமைந்த மிகப் பெரிய மருத்துவமனையாகும். அங்கே குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை (Open Heart Surgery) கால் மூட்டு இணைப்பு சிகிச்சை (Joint Replacement) ஆகியவை உயர்ந்த தரத்துடன் அளிக்கப்படுகின்றன. இங்கு இதய சிகிச்சைப் பிரிவு 18 மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்டது. இங்கு 7 மாதங்களுக்கு முன்பு பணியில் இணைந்த டாக்டர் கல்பேஷ் மாலிக் இத்தகைய சிகிச்சை அளிப்பதற்கு ஆர்வத்துடன் இருக்கிறார்.

இதய அறுவைச் சிகிச்சைத் தொழிலில் 20 ஆண்டுகள் ஈடுபட்டு வரும் டாக்டர் கல்பேஷ் 3,500 குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை அளித்துள்ளார். இந்த மருத்துவமனையில் மட்டுமே 30 குழந்தைகளுக்குச் சிகிச்சை அளித்துள்ளார். இங்கு மொத்தம் 8,400 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

நான் குழந்தைகளுக்கான அறுவைச் சிகிச்சை செய்வதற்குத்தான் பயிற்சி பெற்றுள்ளேன். ஆனால், எல்லோருக்கும் இதய அறுவைச் சிகிச்சை செய்கிறேன். குழந்தைகளுக்கான அறுவைச் சிகிச்சை என்பது சிக்கலானது. அதைக்கையாண்டால் போதும், எந்த வகையான இதய அறுவைச் சிகிச்சையையும், ஏன் பைபாஸ் சிகிச்சையையும் நிகழ்த்திவிட முடியும் என்றார்.

இந்த மருத்துவமனையை வாபியில் ரோட்டரி அறக்கட்டளை (Rotary Charitable Trust) நடத்தி வருகிறது. அந்த அறக்கட்டளையின் தலைவர் ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர் கல்யாண் பானர்ஜியின் அறையில் காத்திருந்தோம்.

இந்த மருத்துவமனையை 1980ம் ஆண்டில் வாபி ரோட்டரி சங்கம் சாதாரண மருந்தகமாக (Dispensary) தொடங்கியது. 24 படுக்கைகளுடன் தொடங்கப்பட்ட இந்த மருத்துவ மனைக்கு 1982ம் ஆண்டு ஹரியா மருத்துவமனை ரூ.7.5 லட்சம் நிதியளித்தது. அது அப்போது பெரிய தொகை. அதையடுத்து மருத்துவ மனைக்கு ஹரியா ரோட்டரி மருத்துவமனை என்று பெயரிடப்பட்டது. இன்று எங்களது மாத கணக்கு ரூ.3 கோடியாகும் என்றார் பானர்ஜி.

மருத்துவமனையின் தலைமை மருத்துவரும் மருத்துவக் கண்காணிப்பாளருமான டாக்டர் S S சிங், இங்கே எந்த நோயாளி வந்தாலும் சிகிச்சை இல்லை என்று கூறுவதில்லை. அது விபத்தில் சிக்கியவரோ சாதாரண சிகிச்சை தேவையோ பணம் இருக்கிறதோ, இல்லையோ சிகிச்சை அளிக்கிறோம். இதுதான் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரே குறிக்கோள் என்று கூறுகிறார்.

மருத்துவமனையில் முழு நேர மருத்துவர்களாக 60 பேரும் வருகைதரும் மருத்துவர்களாக (Visiting Surgeons) 60 பேரும் சேவை புரிகின்றனர். முழு நேர அறுவைச் சிகிச்சை நிபுணர்களும் இருக்கின்றனர். மருத்துவமனையின் அறுவைச் சிகிச்சைப் பிரிவும் அனைத்து வசதிகளையும் கொண்டு சிறப்பாக இயங்குகிறது. வாபி மும்பையிலிருந்து 160 கி.மீ. தொலைவிலும் சூரத்திலிருந்து 120 கி.மீ. தூரத்திலும் உள்ளது.

சூரத்துக்கும் மும்பைக்கும் இடையில் முழுநேர நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் இல்லை. அதை இந்த மருத்துவமனை தான் பூர்த்தி செய்கிறது. ரோட்டரியினரின் அயராத உழைப்பாலும் உள்ளூர் மக்களின் தாராள மனத்தாலும்தான் இந்த மருத்துவமனை வளர்ந்து சேவை புரிந்து வருகிறது என்றார் டாக்டர் சிங்.

இப்பகுதியில் 150 சதுர கிமீ பரப்பில் வசிக்கும் மக்களுக்கு இந்த மருத்துவமனைதான் பெரிதும் உதவி வருகிறது. தொழில்கள் நடக்கும் இடத்தில் முக்கிய சாலையில் அமைந்திருப்பதால், தொழிற்சாலை விபத்துகளில் சிக்கும் பலர் இங்கே சிகிச்சை பெற்றுள்ளனர்.

வாபியில் அரசு மருத்துவ மனை இல்லை. விபத்து உள்ளிட்ட அசம்பாவிதத்தால் பாதிக்கப் பட்டோருக்குச் சிகிச்சை அளிக்க தனியார் மருத்துவமனைகள்

தயங்குகின்றன. ஆனால், நாங்கள் அப்படி பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளிக்கிறோம். அவர்களை உறவினர்கள் கொண்டு வருகிறார்களா, காவல் துறையினர் கொண்டு வருகிறார்களா, விபத்தில் சிக்கியவரை யாரோ தெரியாதவர்கள் கொண்டு வருகிறார்களா யாராக இருந்தாலும் உடனடியாகச் சிகிச்சை அளிக்கிறோம்.

வாபியில் எந்த மருத்துவ மனையிலும் இல்லாத அளவுக்கு முழுமையான இதய அறுவைச் சிகிச்சைப் பிரிவு எங்களது மருத்துவமனையில் இயங்குகிறது. பிற மருத்துவமனைகளில் வருகை தரும் மருத்துவர்கள்தான் (Visiting Cardiologists and Surgeons,) இருக் கிறார்கள். இதய அறுவைச் சிகிச்சை யை (Open Heart Surgery) எங்கள் மருத்துவமனை மட்டுமே அளிக்கிறது என்றார் டாக்டர் சிங்.

பிறந்த சிசுவுக்கோ, குழந்தைக்கோ அறுவைச் சிகிச்சை செய்வதற்கு மும்பையில் கோகிலாபென் திருபாய் அம்பானி மருத்துவமனை நீங்கலாக பல மருத்துவமனைகளில் போதிய வசதிகள் இல்லை. சென்னைக்கோ, பெங்களூருக்கோ, தில்லிக்கோதான் செல்ல வேண்டும்.

பொது வார்டில் தங்கி ஓபன் ஹார்ட் சர்ஜரி பெறும் நோயாளியிடம் மொத்தம் ரூ.1.25 லட்சம்தான் வசூலிக்கிறோம். பெரும்பாலனோர் ஏழைகள் என்பதால், ஆயுஷ்மான் பாரத், முதலமைச்சர் நிவாரண நிதி உள்ளிட்ட அரசு திட்டங்கள் மூலமாகவோ, தொழிலாளர் காப்பீடு, ரயில்வே ஊழியர் காப்பீடு ஆகியவற்றின் மூலமாகவோ கட்டணம் செலுத்தப்படுகிறது.

அரசுத் திட்டங்களின் மூலம் நிதி பெறுவதற்கு காலம் ஆனாலும் நாங்கள் நோயாளியைக் காத்திருக்க வைப்பதில்லை. சிகிச்சையை முடித்துவிடுகிறோம் என்றும் டாக்டர் சிங் கூறினார்.

எட்டு ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள ரோட்டரி மருத்துவமனையில் மிகச் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. எங்களிடம் 40 படுக்கைகளுடன் முழுமையான அவசர சிகிச்சைப் பிரிவு (ICU) உள்ளது. டயாலிசிஸ் சிகிச்சைக்கு 10 இயந்திரங்கள் உள்ளன. கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. முன்பு ரூ.300 வசூலித்து வந்தோம். 2011ம் ஆண்டிலிருந்து இலவசமாக்கி விட்டோம்.

மாதந்தோறும் 400 டயாலிசிஸ் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவர்களில் பெரும்பாலானோர் வேலை இழந்து விடுவதால், குடும்பம் வாழ்வதற்காக அரிசி, கோதுமை, எண்ணெய், பருப்பு எல்லாம் அளித்து உதவுகிறோம். முட நீக்கியல் பிரிவு (Orthopaedic Department) முழுமையான வசதிகளையும் ஆள்பலத்தையும் கொண்டிருக்கிறது. மூட்டு அறுவைச் சிகிச்சைக்கும் முழு வசதி உள்ளது. அதற்கு மிகக் குறைந்த அளவாக ரூ. 99 ஆயிரம் மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. முடநீக்கியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் கபில் பவார் அந்த சிகிச்சையை மேற்கொள்கிறார்.

இந்தியாவில் மூட்டு வலி பலருக்கு இருப்பதற்கு நமது வாழ்க்கை முறையே காரணமாகும். பலர் தரையில் சப்பணம் போட்டு அமர்கிறார்கள். இவையெல்லாம் மூட்டு பிரச்சினையை ஏற்படுத்துகின்றன. மேலை நாட்டவர்களுக்கு அந்தப் பிரச்சினை இல்லை. ஆனால், இடுப்பு வலி அதிகமாக இருக்கும். அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பலர் இதனால் அவதிப்படுகிறார்கள்.

குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு, மூட்டுக்கு அதிக அழுத்தம் தரக்கூடாது. பெண்களுக்கு முதுகு வலி வரும். உடற்பயிற்சிக்கு தகுந்த நேரம் இருப்பதில்லை. கடுமையான வீட்டு வேலையே போதும் உடற்பயிற்சி வேண்டாம் எனக் கருதுகிறார்கள். அது முதுகுக்கு நல்லதல்ல. முதுகு தசை களுக்காகத் தனியாக உடற்பயிற்சி



செய்தால்தான் அது வலுவடையும் என்றார் கபில் பவார்.

டாக்டர் மாலிக் குழந்தைகளின் இதயத்தில் உள்ள வால்வுக்கான சிகிச்சையையும் செய்கிறார். இதயத்தில் ஏற்படும் ஓட்டைக்கும் சிகிச்சை அளிக்கிறார். தனது அனுபவத்தில் நிதி என்ற 19 மாதக் குழந்தைக்கு இதயத்தில் இருந்த ஓட்டையை அடைத்த சிகிச்சைதான் குறிப்பிடத் தக்கது என்றார்.

மருத்துவமனை நடத்தும் முகாம்களில் சோதனை செய்வதன் மூலம் நோயாளிகள் அடையாளம் காணப்படுகிறார்கள். அதைப் போல் சமூக சேவகர்களும் பல நோயாளிகளை அழைத்து வருகின்றனர். அவர்களுக்கெல்லாம் இந்த மருத்துவமனை சிகிச்சை அளிக்கிறது.

80 சதவீதத்துக்கு மேல் இதய நோயாளிகளுக்கு அரசு காப்பீட்டு நிதியிலிருந்து கட்டணம் பெறப்படுகிறது.

இங்குள்ள தொழிலதிபர்கள் வசதி இருப்பதால் சிகிச்சை பெறுவதற்கு மும்பைக்குச் செல்கிறார்கள் என்று பானர்ஜி கூறியபோது குறுக்கிட்ட டாக்டர் மாலிக், மும்பையில் இருப்போர் 300, 400 ஆண்டுகள் வாழ்கிறார்கள் போல! என்று நகைச் சுவையாகக் குறிப்பிட்டார்.

எங்களது மருத்துவர் குழு முழுமையாகவும் வேகமாகவும் பணியாற்றுகிறது. அறுவைச் சிகிச்சை முடிந்த நான்காவது நாளிலேயே நோயாளிகள் வீடு திரும்பிவிடுகிறார்கள். அந்த அளவுக்கு திறமையுள்ள மருத்துவர் குழு இருக்கிறது என்றார் அவர்.

*எங்களது மருத்துவமனையில் கட்டணம் குறைவாக வசூலிக்கப்படுவதால், இழப்பு அதிகம்தான். ஆனால், இறுக்கப் பிடித்து பணியாற்றி வருகிறோம்.*

**PRIP கல்யாண் பானர்ஜீ**



*ரோட்டரி சேரிட்டபிள் ட்ரஸ்ட் அறங்காவலர் ப்ரபுல் த்வானி மற்றும் சான்ட்ரா கல்லூரி முதல்வர் T K புட்டியா அவர்கள்.*

நீங்கள் செய்த அறுவைச் சிகிச்சையிலேயே எது மிகவும் சவாலானது, கடினமானது? என்று கேட்டதற்கு, டாக்டர் மாலிக், சியாமள் மிஸ்ரா என்ற நான்கு வயது குழந்தைக்குச் செய்த அறுவைச் சிகிச்சைதான் சவாலானது. பொதுவாக இதயத்தில் நான்கு அறைகள் இருக்கும். இந்தக் குழந்தைக்கு பிறவியிலிருந்தே இரண்டே அறைகள் இருந்தன. நீலக்குழந்தை எனப்படும் இதயக் கோளாறுள்ள அந்தக் குழந்தை மத்தியப்பிரதேசத்திலிருந்து வந்தது. குழந்தையின் தந்தை மும்பையில் வேலை செய்கிறார். ஆரம்பத்தில் தில்லி AIMS மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். ஆனால், அங்கே 5 ஆண்டு காத்திருக்க வேண்டும் என்று கூறினர். தனியார் மருத்துவமனைக்குச் சென்றால், அங்கே ரூ.4.5 லட்சம் கட்டணம் என்று கூறிவிட்டனர். நான்கு வருடமாக அந்தக் குழந்தையின் சிகிச்சைக்காக பெற்றோர்கள் அலைந்திருக்கிறார்கள். கடைசியில் வாபி மருத்துவமனைக்கு வந்தனர். அதுவரை அக்குழந்தை உயிருடன் இருந்தது ஆண்டவன் கருணை. நாங்கள் காசு வாங்காமல் சிகிச்சை அளித்தோம். மூன்றாம் நாளிலேயே குழந்தை சிரித்தது. உற்சாகமாகி விட்டது. உடம்பும் தேறிவிட்டது. நீலக் குழந்தை இளம் சிவப்பாகிவிட்டது. பாருங்கள் காஸ்மடிக் சர்ஜரி கூட செய்துவிட்டோம். குழந்தையின் நிறமே மாறிவிட்டதே!

மும்பை மருத்துவமனைகளில் கூட ரோட்டரியின் உதவியில் குழந்தைகளுக்கு சிகிச்சை செய்யப்படுகிறது. இங்கே நல்ல


வசதிகள் இருப்பதால், அங்கு வருவோரை இங்கே அனுப்பினால் மூன்றில் ஒரு பங்கு கட்டணத்தில் சிகிச்சை அளிப்போம்.

இதுவரை நடத்திய அறுவைச் சிகிச்சையில் கடவுள் அருளால் ஒரு குழந்தை கூட இறக்கவில்லை என்றார் மாலிக்.

இந்த மருத்துவமனைக்கு தினமும் 500 புறநோயாளிகள் வருகிறார்கள். மாதந்தோறும் ஆயிரம் பேர் அட்மிட் ஆகிறார்கள். வளாகம் முழுவதும் சுத்தமாக இருக்கிறது. சிகிச்சை பெறுவோர் ஏழைகள் என்பதால், சரியாகப் பராமரிக்கிறார்களோ என்று நினைத்து கல்யாண் பானர்ஜி ஆரம்பத்தில் கழிவறைகள் சுத்தமாக இருக்கின்றனவா என்று பார்வை யிடுவார். இப்போது தினமும் 60 பேர் துப்புரவுப் பணி செய்கிறார்கள் என்று டாக்டர் சிங் கூறினார்.

சிலர் அழைத்து வந்த குழந்தைகளைச் சுட்டிக் காட்டிய டாக்டர் சிங், இவர்களுக்கு உதட்டுப் பிளவு, அண்ணப் பிளவு ஆகியவற்றுக்கான சிகிச்சையும் செய்யப்பட்டன. இவையெல்லாம் ஸ்மைல் திட்டத்தின் (SMILE project) கீழ் மேற்கொள்ளப்பட்டன. இந்த சிகிச்சையின் மூலம் லக்கி என்ற இரண்டு வயது குழந்தையோ





PRIP *கல்யாண் பானர்ஜீ மற்றும் மருத்துவமனையின் தலைமை மருத்துவர்* Dr S S *சிங்.*

வைதேகி என்ற மூன்று வயது குழந்தையோ இன்று உற்சாக மாகப் பேசுகின்றனர்.

இதய அறுவைச் சிகிச்சைப் பிரிவில் டாக்டர் மாலிக் செய்த சிகிச்சையினால் ரித்தி என்ற 22 மாதக் குழந்தை, தனேஸ்வரி என்ற 11வயது சிறுமி ஆகியோரது இதயங்களிலும் ஓட்டைகள் அடைக்கப்பட்டு தாய்மார்களும் குழந்தைகளும் உற்சாகமாக இருக்கின்றன என்றார்.

கல்யாண் பானர்ஜி, எங்களது மருத்துவமனையில் கட்டணம் குறைவாக வசூலிக்கப்படுவதால், இழப்பு அதிகம்தான். ஆனால், இறுக்கப் பிடித்து பணியாற்றி வருகிறோம். இப்போது போட்ட பணத்தை எடுத்துவிட்டோம். முன்பு கிடைத்த லாபத்தை வசதி களை விரிவுபடுத்துவதில் முதலீடு செய்துவிட்டோம் என்றார்.

மருத்துவமனையை அடுத்து சாண்ட்ரா ஷ்ராப் நர்சிங் கல்லூரியில்



B.Sc., M.Sc., நர்சிங் படிப்புகள் நடத்தப்படுகின்றன. அதன் கல்லூரி முதல்வராக ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் T K புட்டியா பணியாற்றுகிறார்.

அவர் என்னை அழைத்துக் கொண்டு கல்லூரி வளாகத்தைச் சுற்றிக் காட்டி, இங்கே படிப்பவர்கள் பெரும்பாலும் பழங்குடியினத்தவர் என்று பெருமையோடு குறிப்பிட்டார். 2003ம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரியில் 300 பேர் நர்சிங் பட்டப் படிப்பை முடித்துள்ளனர்.

அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறதா? என்று வாபி ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் பிரபுல் தேவானியைக் கேட்டேன். அவர் ரோட்டரி சங்க அறக்கட்டளையின் அறங்காவலராக இருக்கிறார்.

அதற்கு அவர், வேலை வாய்ப்பா? படித்து முடித்ததும் அவர்களை கோகிலாபென் அம்பானி மருத்துவமனையில் வேலைக்குக் கொத்திக் கொண்டு போகிறார்கள் என்றார். ஆரம்ப சம்பளமே ரூ.20 ஆயிரம். அந்த சம்பளத்தை எங்களால் தர முடிய வில்லை என்று கல்லூரி முதல்வர் புட்டியா கூறினார்.

இங்கு படிக்கும் 169 நர்சிங் மாணவிகளில் 90 சதவீதம் பேர் சேரும்போது ஒரு வார்த்தை கூட ஆங்கிலம் பேச வராது. இங்கே படிப்பை முடித்ததும் சரளமான ஆங்கிலத்தில் பேசுகிறார்கள்.

சில மாணவியருடன் நான் உரையடினேன். அவர்களில் பலர் விவசாயிகள், தொழிலாளர்கள், தொழிற்சாலை ஊழியர்கள் ஆகியோரின் புதல்வியர். அவர்களது புன்னகையும், தன்னம்பிக்கையும் அங்கு நடத்தப்படும் தரமான கல்வியைப் பறை சாற்றுகின்றன.

குஜராத் மாநிலத்தில் முதல் தனியார் சுயநிதி நர்சிங் கல்லூரி இதுதான். நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களையும் சேர்த்தால் ஆண்டுக் கட்டணம் ரூ. 85 ஆயிரம்தான். பல மாணவியர் விடுதியிலேயே தங்கி படிக்கிறார்கள். அதற்கான கட்டணம் பழங்குடியினருக்கு அளிக்கும் அரசு உதவித் தொகையில் பயன்படுத்தப்படுகிறது என்றும் புட்டியா கூறினார்.



புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary PEOPLE OF ACTION

# உதவிக் கரம் நீட்டினோம்

ஜெய்ஸ்ரீ

பதினோரு வயது நிலா தன் பெயரை ஒரு காகிதத்தில் எழுதும்போது அவளது முகம் மலர்ந்தது. இது அவளுக்கு ஒரு பெரிய சாதனை, ஏனென்றால் அன்று RC மேட்டுப்பாளையம், RID 3202 நடத்திய மாபெரும் முகாமில் அவள் செயற்கைக் கரம் பொருத்திக் கொண்டாள். என் மகள் ரொம்ப அறிவாளி. அவளுக்கு பிறவியிலேயே ஊனம். அதையும் மீறி அவள் சைக்கிள் ஓட்டுவாள், வீராங்கனை மாதிரி கபடி விளையாடுவாள், பஞ்சு பொம்மைகள் செய்வதில் கில்லாடி - இதையெல்லாம் ஒரே கையில் செய்வாள் என்று ஆனந்தக் கண்ணீர் வடித்துக்கொண்டு நிலாவின் அம்மா புகழ்பாடும் போது, சரியாக அந்தக் குட்டிப் பெண் இடைமறித்து: எனக்கு இப்போ இரண்டு கைகளும் வந்துவிட்டது, இனி நிறைய சாதிப்பேன் என்று தனக்குப் பொருத்தப்பட்ட கையை பெருமையாகக் காட்டினாள்.

அடுத்த பெஞ்சில் இருந்த கன்னியம்மாள் (70) இந்த முகாமைப் பற்றிக் கேள்விப்பட்டு ஈரோடு அருகேயுள்ள ஒரு குக்கிராமத்தில் இருந்து வந்திருக்கிறார். இரண்டாண்டுக்கு முன்பு தங்கள் வீட்டுக்கு வெளியே தன் மகனுக்கும் வேறுசில இளைஞர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்ட போது அதைத் தடுக்கப் போய் அவருடைய வலது கை வெட்டப்பட்டது. இப்போ நானே சமைத்துக்கொள்ள முடியுமா? என்று தனக்குக் கரத்தைப் பொருத்த உதவிய ரோட்டராக்டர்களிடம் கேட்கிறார். உடனே அதில் ஒருவர் தனது மொபைல் போனில் அவருக்கு ஒரு பயிற்சி வீடியோவை காட்டுகிறார், அந்த வீடியோவில் செயற்கைக் கரம் பொருத்தப்பட்ட ஒரு பெண்மணி சப்பாத்தி மாவு பிசைகிறார், இன்னொரு ஆண் மோட்டர்பைக் ஓட்டுகிறார். இதைப் பார்த்த அந்தப் மூதாட்டி, சற்று வெட்கத்துடன் புன்னகைத்தவாறு, கண்ணில் நம்பிக்கை ஒளியுடன் சொல்கிறார்: ''இந்த வயதில் நான் பைக் எல்லாம் ஓட்ட ஆசைப் படவில்லை. நானே புடவையை கட்டிக் கொண்டு கஞ்சி காச்சினால் போதும் ராஜா. மற்றவர்களிடம் உதவி கேட்க எனக்கு சங்கடமா இருக்கு...,'' என்றார். உடனே இளைஞர்கள் உற்சாகமாக, நீங்கள் அதையும் செய்யலாம், அதற்கு மேலும் செய்யலாம் பாட்டி என்று கூறியபடியே அவரது புதிய செயற்கைக் கரத்தால் கைகுலுக்கும் படி கூறுகிறார்கள். அவரும் சற்று ஆச்சரியத்துடன் அதற்கு இசைகிறார்.

திருவண்ணாமலையை சேர்ந்த ஏழுமலை (45) ஒரு



*LN4 பொருத்திய கன்னியம்மாள் ரோட்டராக்டர்களுடன்.*



DG Dr E K *உமர் (நடுவில்), ரொட்டேரியன்கள் மற்றும்* K V *மோகன்குமார் (வலது),* LN4 *தூதர் (தெற்கு ஆசியா).*

மின்சார ஷார்ட் சர்கியூட் விபத்தில் தனது இரு கைகளையும் ஒரு காலையும் இழந்துவிட்டார். தனக்கு இரு செயற்கைக் கைகளை பொருத்திவிடுமாறு அங்கிருந்த ரோட்டரியினரிடம் கெஞ்சாத குறையாக அவர் கேட்கிறார். நான் எல்லாவற்றுக்கும் என் பெண்டாட்டியை எதிர்பார்க்கணும். அவள் தான் சம்பாதிக்கிறாள், இரண்டு வீட்டில் வீட்டுவேலை பார்க்கிறாள். நானும் குடும்பத்துக்கு ஏதாவது சம்பாதித்துக் கொடுக்கணும்னு விரும்புகிறேன் என்று கண்களில் நம்பிக்கை ஒளியுடன் கூறுகிறார்.

முகாம் நடைபெற்ற மெட்ரோ மெட்ரிகுலேஷன் பள்ளியில் இளைஞர்களும் முதியோர்களுமாக LN 4 செயற்கைக் கரத்தைப் பெறக் காத்திருக்கும் மக்கள் கூட்டம் அலைமோதியது. நீலகிரி மலையடி வாரத்தில் பரந்துவிரிந்த ஒரு வளாகத்தினுள் இருக்கும் இந்தப் பள்ளிக்கூடம் நம் சங்கத்துக்கு பெருமை சேர்க்கிறது. 1975ல் கட்டப்பட்ட இந்தப் பள்ளியில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 2,000 குழந்தைகள் படிக்கிறார்கள். ஏழை மாணவர்களுக்கு கல்வி இலவசம், மற்றவர்களுக்கும் கட்டணத்தில் சலுகை அளிக்கப்படுகிறது.

இந்த முகாமுக்கான ஸ்கிரீனிங் ஒரு வாரத்துக்கு முன்பு நடத்தப்பட்டது. பிறகு RC பூனா டௌன்டவுன், RID 3131, உடன் சேர்ந்து செயற்கைக் கைகளுக்கு ஏற்பாடு செய்தது. பூனாவைச் சேர்ந்த பதினாறு ரொட்டேரியன்கள் 850 LN 4 செயற்கைக் கைகளை அனுப்பிவைத்த பின் தாங்களே மேட்டுப்பாளையம் வந்து அங்குள்ள ரொட்டேரியன்களுக்கு உதவிசெய்தனர். D 3000ன் தலை வருடைய மனைவியான சரளா கண்ணனின் தோழி ருக்மினி யும், ஹைதராபாத்தை சேர்ந்த பிசியோதெரபிஸ்ட் Dr மௌனிகாவும் முன்வந்து சேவைகள் வழங்கினர்.

சங்க தலைவரும் திட்டப்பணித் தலைவருமான Dr அரவிந்த் கார்த்திகேயன் முகாம் நடைபெற்ற இடத்தில் சுற்றிவந்து, சிக்கல் இல்லாமல் பொருத்தல் வேலைகள் நடைபெறுவதை உறுதிசெய்தார். RID 3131ல் Gift of mobility என்ற திட்டத்தின் தலைவரான அனில் சட்டா மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டு தங்களிடம் LN 4 செயற்கை உறுப்புகள் இருப்பதாகத் தெரிவித்தார். ஆரம்பத்தில் எங்கள் இலக்கு, 50 செயற்கை உறுப்புகள் மட்டுமே. ஆனால் அனில் சட்டா எங்களுக்குச் சவால் விட்டார். 200க்கும் மேற் பட்டவர்கள் இருந்தால் செலவுகளை யெல்லாம் நாங்களே பார்த்துக் கொள்வோம் என்றார். உடனே நான் காரியத்தில் இறங்கினேன் என்கிறார்.

L S சித்துராம் இதற்கு திட்ட ஒருங்கிணைப்பாளர். 1,200 ஊனமுற்றோருக்கு ஸ்கிரீனிங் செய்து 750 செயற்கைக் கைகளைப் பொருத்தி சாதனை படைத்தது. சமூக மற்றும் அச்சு ஊடகங்களில் பரவலாக அறிவிப்புச் செய்யப்பட்டதால் இதை சாதிக்க முடிந்தது. விபத்தில் கைகளை

## LN 4 செயற்கைக் கைகள் தூதர்

*தெற்காசிய LN 4 தூதரும், RC பெங்களூர் பிரைம், RID 3190 உறுப்பினருமான K V மோகன் குமார், நாட்டில் LN 4 செயற்கைக் கைகளின் தற்போதைய சூழ்நிலையை விவரித்தார். செயற்கைக் கால்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு பிரபலம் அடைந்துள்ளது என்ற போதிலும், LN 4 செயற்கைக் கைகள் பற்றிய விழிப்புணர்வு இன்னும் சூடுபிடிக்கவில்லை. 2011 கணக்கெடுப்புப் படி, நமது மக்கள் தொகையில் இரண்டு சதவீதம் பேர் மாற்றுத் திறனாளிகள், அவர்களுள் ஐந்து சதவீதத்தினருக்கு மட்டுமே இதுபற்றி தகவல் சென்றடைகிறது. பலருக்கு யாரை அணுகுவது என்றே தெரியவில்லை. ரோட்டரி இந்த செயற்கை உறுப்புகளைப் பொருத்தும் முகாம்கள் மூலம் ஓர் அளப்பெரிய சேவை செய்கிறது. இன்று தேசிய அளவில் 18 நிரந்தர செயற்கை உறுப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன, அங்கே மக்கள் எப்போது வேண்டுமானாலும் வந்து இலவசமாக அந்த உறுப்புகளைப் பொருத்திக் கொள்ளலாம். கைகளைப் பொறுத்தவரை, சுமார் ஐந்து லட்சம் பேர் பல்வேறு காரணங்களுக்காக கைகளை இழந்துள்ளனர் என்று ஒரு குறைந்தபட்ச மதிப்பீடு குறிப்பிடுகிறது. இதில் 14,000 பேரை மட்டுமே நாம் கவனித்துள்ளோம். இது பிரச்சனையின் ஒரு சிறு துண்டு தான் என்கிறார் அவர்.*

*மோகன் குமார் முனைப்பாக நாடெங்கும் LN 4 செயற்கைக் கைகள் பொருத்தும் முகாம்களை ஊக்குவித்து வருகிறார். 2006ல் அவரது சங்கம் சரியான பயிற்சியின்றி செயற்கை உறுப்புகள் பொருத்தும் முகாமை நடத்தியது பற்றி நினைவுகூறுகிறார். நாங்கள் யூடியூப் வீடியோக்களை பார்த்து இதைச் செய்தோம். அடுத்த வருடம் அமெரிக்காவிலிருந்து எலன் மெடோஸ் அறக்கட்டளை குழு இங்கே வந்து செயற்கை உறுப்புகள் பொருத்துவது பற்றி எங்களுக்குப் பயிற்சி அளித்தனர், மேலும் செயற்கை உறுப்புகளைப் பெற்றவர்களுக்கும் அதை எப்படித் திறமையாகப் பயன்படுத்துவது என்று பயிற்சி அளித்தனர். இந்த ஆண்டு "மாபெரும் சாதனை ஆண்டாக" இருந்தது. 2,600க்கும் மேற்பட்டவர்கள் LN 4 செயற்கைக் கைகளைப் பெற்றனர், இந்தியா முழுவதும் உள்ள ரோட்டரிக்கு நன்றி.*

*ஒவ்வொரு முகாமும் தனித்துவமானது. சமீபத்தில் நடந்த நிலம்பூர் முகாமுக்கு, பிறவி ஊனம் உள்ள ஏராளமானவர்கள் வந்தனர். ராஜஸ்தானில் விவசா ய விபத்துகளால் பலர் கைகளை இழந்திருக்கிறார்கள். பொதுவாக, பாதுகாப்பு குறித்து குறைவான விழிப்புணர்வு உள்ள இடங்களிலெல்லாம் முகாம்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்தது. பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கு அதிகக் கவனம் தேவை, என்றார் அவர். இதுபற்றி செய்தி பரப்புதலைப் பொறுத்தவரை, ஒரு சங்கத்தைச் சேர்ந்த ரொட்டேரியன்கள் பள்ளிகளுக்குச் சென்று வரப்போகும் முகாம் பற்றி மாணவர் கூட்டத்தில் அறிவிப்புச் செய்தனர். குறிப்பாக குக்கிராமங்களில் குழந்தைகளே மிகச்சிறந்த செய்தித் தூதர்கள்.*

*இப்படி LN 4 செயற்கைக் கைகள் மிகுந்த பிரபலம் அடைந்துள்ள போதிலும், அதைப் பெற்றவர்கள் சரிவரப் பயன் பெறுவது பற்றி உறுதிசெய்வது இன்னும் தெளிவில்லாமல் தான் இருக்கிறது, அதற்கு அதிகக் கவனம் தேவை. LN 4 குழு, அவ்வாறு செயற்கைக் கைகளைப் பெறுபவர்களுக்கு வேலைவாய்ப்பு வழிகாட்டலும் வழங்குகிறது.*




*ஏழுமலை RC மேட்டுபாளையம் தலைவர் Dr அரவிந்த் கார்த்திகேயன் மற்றும் தலைவர்-தேர்வு Dr விஜய கிரியுடன்.*

இழந்தவர்கள் அல்லது பிறவியிலேயே ஊனமுற்றவர்கள் என எல்லோரும் அன்று சந்தோஷமாகவும் ஆனந்தமாகவும் புதிய செயற்கைக் கரத்துடன், பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி வீட்டுக்குச் சென்றனர்.

முகாமில் கலந்துகொண்ட பலனாளிகள் மற்றும் உதவியாளர்களுக்கு உணவும், பலகாரங்களும் வழங்கப்பட்டன.

முகாமுக்கு வருகை தந்த DG E K உமர், ஏராளமானோர் கலந்துகொண்டதைக் பாராட்டினார். இதேபோல், முந்தைய வாரம் நிலம்பூரிலும் இரண்டு நாள் முகாம் ஒன்று நடத்தப்பட்டது. அது, RC ஸ்பண்டானா பெங்களூர், RID 3190 உடன் சேர்ந்து RC நிலம்பூர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முகாமுக்கு வினோத் பி மேனன் தலைமைதாங்கினார், திலீப் ஒருங்கிணைப்பாளராக இருந்தார். அந் நிகழ்ச்சியில் 400 பேர் கலந்து கொண்டு பலன் பெற்றனர் என்றார் சங்க தலைவர் ஜீஜு தாமஸ். ■



## பிரகாசமான எதிர்காலத்திற்கான நமது வாக்குறிதி

இந்த ரோட்டரி ஆண்டின் கடைசி கால் பகுதியை நெருங்குகிறோம், மேலும் இது நமது வளர்ச்சியை சோதிக்கும் நேரம். கடந்த ஆண்டு ஜனவரி மாதம், பல நிதி திரட்டும் இலக்குகளை நிர்ணயித்தோம்.

நாம் இலக்குகளை அடைந்தது மட்டுமில்லாமல், அவற்றையும் கடந்தும் விட்டோம்.

2017-18 ஆம் ஆண்டில் 1,300 உலகளாவிய மானியங்கள் ஒப்புதல் பெற்றது. அந்த மானியங்கள் கணக்கிடக்கூடிய, நிலையான பலன்களுடன் சர்வதேச திட்டப்பணிகளுக்கு நிதியளித்தது. அவற்றில் சில பச்சிளம் குழந்தைகளைக் காத்தது. சில சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரமான கழிப்பிடங்களை இந்த சமுதாயத்திற்கு கொடுத்தது. வேறு சில வறுமைக்கோட்டிற்குகீழ் வாழ்பவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியது. ஆனால் ஒவ்வொரு டாலரும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது - அந்தத் தாக்கம் நீடித்திருக்கக்கூடியது.

நமது சமுதாய சேவை தொடரும், அது என்றும் நிற்கப் போவதில்லை என்று நமது ரோட்டரி அறக்கட்டளை, எதிர்காலத்திற்கு உறுதி அளிக்கிறது.

இந்த ஆண்டிற்கான நமது அறக்கட்டளையின் இலக்கு நேரடி பங்களிப்பின் வாயிலாக 26.5 மில்லியனும் வாக்குறுதிகளை கணக்கில் எடுத்துக்கொண்டு கூடுதலாக 35 மில்லியனும் உள்ளது. ஆனால் அதுவல்ல நமது நோக்கம். ஒரு நீண்டகால இலக்கும் நமக்கு உள்ளது: அது, 2025 ஆம் ஆண்டில் 2.025 பில்லியனை அடைவது தான்.

நமது அறக்கட்டளையின் மதிப்பை அந்த அளவிற்கு உயர்த்தினால் தான், நமது உலக நிதியத்திற்கு ஆண்டு வருமானம் இருக்கும், அதன்மூலம் வருடந்தோறும் அறக்கட்டளைத் திட்டங்களுக்கு நிதியளிக்க முடியும். இந்த பணம் நிரந்தரமாக நமது அறக்கட்டளையின் மூலம் நீங்கள் ஆதரிக்கத் தீர்மானித்த திட்டங்களுக்குத் தவறாமல் நிதி கிடைக்க வழி செய்யும். நாம் ஒவ்வொருவரும் நமது அறக்கட்டளைக்குப் பங்களித்தால், உண்மையிலேயே நமது பாரம்பரியத்தைக் காப்போம் மற்றும் ரோட்டரி வாக்குறுதிகளை பூர்த்தி செய்வோம்.

ஒன்று கூடி, நமது அறக்கட்டளையை இன்னும் வலுவானதாக மாற்றுவோம், இதனால் இந்த உலகில் மேலும் நிறைய நல்ல காரியங்களை செய்ய முடியும்.



**ரான் D பர்டன்**
TRF அறங்காவலர் தலைவர்



## ஹாம்பர்க் நகரத்தில் விருந்துண்ணலாம் வாங்க!

குண்டுலா மைத்கே



ஜெர்மனியின் ஹாம்பர்க் துறைமுக நகரம் பல நாடுகளின் உணவுகளைச் சுவைப்பதற்கு பெயர் போனது. போர்ச்சுக்கல் நாட்டு உணவு முதல் சீனாவின் சுவையான உணவு வரை அங்கே அனுபவிக்கலாம். எது எப்படியோ எங்கு பார்த்தாலும் கடல் உணவு வகைகள் எக்கச்சக்கம். வரும் ஜூன் 1-5 ரோட்டரி சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதற்காக அந்த நகருக்கு வருபவர்கள் ஹாம்பர்க் நகரில் கிடைக்கும் உணவு வகைகளைத் தவறவிடக் கூடாது.

ஹாம்பர்கில் ஃபிஷ்செரியாஃபென் (Fischereihafen Restaurant) உணவகத்தில் கிடைக்கும் விசேஷ கடல் உணவு வகைகளை ருசிக்க ருசிக்கச் சாப்பிடலாம். நாற்பது வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கிறது அந்த உணவகம். அங்கே கிடைக்கும் இனிப்பும் உப்பும் கலந்த ஈல் சூப்பை அருந்துவதே அலாதி அனுபவம்தான்!

உள்ளூரில் ஆல்ட் ஹாம்பர்கர் ஆல்ஸ்பைஷர் உணவகம் (aalspeicher.de) இன்னொரு குறிப்பிடத் தக்கது. அங்கே சுடப்பட்ட விலாங்கு மீனுடன் (Smoked Eel) முட்டைத் துருவல் (Scrambled Eggs) வதக்கிய உருளைக்கிழங்கு ஆகியவற்றின் சுவையே தனி. அது மட்டுமா விசேஷமாக வறுத்த மீன், உருளைக்கிழங்கு சாலட், அல்லது பொறித்த முட்டை, ஹெர்ரிங் (herring) எனப்படும் ஒரு வகை கடல் மீன், பீட் ரூட், ஊறுகாய் ஆகியவற்றுடன் லபஸ்கவுஸ் (Labskaus) எனப்படும் அந்நாட்டு பாரம்பரிய உணவு வகை என்று ஜமாய்க்கலாம். எல்லாம் சாப்பிட்டுவிட்டு, இறுதியாக பழங்கள், கிரீம் கொண்ட வடக்கு ஜெர்மனியின் rote Grtze எனப்படும் விசேஷமான சிவப்புப் இனிப்புப் பனிக்கூழ் (Red Berry Compote) சுவைக்கலாம்.

**June 1-5 2019 RI மாநாட்டிற்கு பதிவு செய்துகொள்ள: www.riconvention.org இணைய தளத்தை பாருங்கள்.**

©The Rotarian

# பிறருக்கு உதவுதலும் நல்ல பணிகளும் இவரது ரத்தத்தில் ஊறியவை!

ரஷீதா பகத்



ஆஸ்டர் DM ஹெல்த்கேர் மருத்துவமனைக் குழுமம் ஆண்டுதோறும் இரண்டுகோடி நோயாளிகளுக்குச் சி கிச்சைஅளித்து வருகிறது. அதைவிட முக்கியமானது ஆண்டுதோறும் ரூ.50 கோடியை அறப்பணிகளுக்காகச் செலவிடுகிறது. இவ்வளவு செய்தும் இவையெல்லாம் யாருக்கும் தெரியவில்லை.

அதற்கான காரணத்தை ஆஸ்டர் குழுமத்தின் தலைவர் டாக்டர் ஆஸாத் மூப்பன், நாங்கள் செய்யும் நல்ல பணிகளை வெளியே சொல்லிக் கொள்வதில்லை. ஆனால், பில்கேட்ஸ் போல அறப்பணிகள் செய்வோரைப் பார்த்த பிறகு இப்படியெல்லாம் வெளியுலகுக்குத் தெரிவித்தால், மற்றவர்களும் அதைப் பின்பற்றி நல்ல காரியங்களைச் செய்வார்கள் என்பதைப் புரிந்து கொண்டுள்ளோம். காரணம், நம் நாட்டில் இது போல் மிகப் பெரிய அளவில் நல்ல பணிகளைச் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது என்று தெரிவித்தார்.

கோழிக்கோட்டில் உள்ள MIMS பல்நோக்கு மருத்துவ மனையில் டாக்டர் ஆஸாதைச் சந்தித்தோம். கேரளத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் சேத மடைந்த வீடு களுக்கு மாற்றாக சுமார் 500 வீடுகள் வரை கட்டித் தரும் திட்டம் தொடர்பாக ரோட்டரியுடன் அவர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அதற்காக தனது பங்காக பத்து லட்சம் டாலர் (சுமார் ரூ.7.04 கோடி) அளிக்க முன்வந்துள்ளார்.

எனது தந்தை சுதந்திரப் போராட்ட வீரர். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு பல்வேறு சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு வந்தார். எங்களது மூதாதையரிடம் நிறைய நிலம் இருந்தது. தேங்காய், நெல் விளைவித்தனர். அப்போது, ஆட்சியாளர்கள் "மூப்பன்" என்ற பட்டத்தை அளித்தனர். மூப்பன் என்றால் மலையாளத்தில் தலைவன் என்று அர்த்தம் என்றார் அவர்.

குழந்தையாக இருந்தபோது, ஆஸாத் தனது தந்தையின் சமூகப் பணிகளை நேரில் கண்டார். அந்த ரத்தம் ஓடுவதால், எனக்கும் இப்படி சமூகப் பணி செய்யும் பழக்கம் வந்தது போலும். எனக்கு 15 வயது இருக்கும்போது எனது தந்தை இறந்துவிட்டார் என்றார் டாக்டர் ஆஸாத். அவருக்கு 5 சகோதரர்கள். அவர்களில் நான்கு பேர் தொழில் நடத்தி வருகிறார்கள். என் அப்பா மகன்களில் யாராவது ஒருவர் டாக்டர் ஆக வேண்டும் என்று விரும்பினார். அவர் விரும்பியபடியே நான் டாக்டர் ஆனேன். இந்தத் தொழிலை நான் மிகவும் நேசிக்கிறேன்.

ஆஸாதின் நாற்பது ஆண்டுகால நண்பர் அப்துல் ஹமீது. கட்டடக் கலை வல்லுநரான இவர் கோழிக்கோடு மிட் டவுன் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர். ஆஸாத் கோழிக்கோடு ஃபரூக் கல்லூரியில் மாணவர் தலைவராக இருந்தார். எம்.பி.பி.எஸ்., எம்.டி., ஆகிய மருத்துவப் படிப்புகளை கோழிக்கோடு மருத்துவக் கல்லூரியில் முடித்தார். அவருக்கு இன்னமும் ஃபரூக் கல்லூரியில் தொடர்பு உண்டு. பழைய மாணவர்கள் வயநாடு மலைபகுதியில் அண்மையில் விடுமுறையைக் கொண்டாடினர் என்றார் அப்துல் ஹமீது.

கோழிக்கோட்டில் தான் மருத்துவராகவும் மருத்துவத் துறையின் ஆசிரியராகவும் பணியாற்றியதாக டாக்டர் ஆஸாத் தெரிவித்தார். பிறகு, இரண்டாண்டுகள் துபாயில் பணியாற்றச் சென்றேன். பிறகு, அங்கேயே தங்கிவிட முடிவு செய்தேன். முப்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. துபாயில் ஒரு மருத்துவ மனையைத் தொடங்கவும் சில நண்பர்கள் யோசனை கூறினர். அங்கே இருந்தபோதுதான் இப்படி வளர்ச்சி யை அடைந்தேன். கடவுள்தான் நமக்காக எல்லாமே செய்கிறார் என நம்புகிறேன். நாம் அவர் காட்டிய வழியில் போக வேண்டியதுதான் என்றார் டாக்டர் ஆஸாத்.

அவரது மருத்துவப் பணி வளைகுடா உள்பட 9 நாடுகளில் 308 மருத்துவ நிலையங்களாக விரிவடைந்துள்ளது.

வெளிநாட்டில் பணியாற்றுவது அவருக்கு எப்படி இருந்தது?

ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டம்தான்! வேலை சூடு பிடிக்க நேரமாகும். என் அதிர்ஷ்டம் வெளிநாட்டிலிருந்து வருவோரை அரவணைக்கும் நாடான துபாய்க்குப்

*பணத்தை விட தங்களது நேரத்தையும் உழைப்பையும் அளித்துள்ளனர். ரோட்டரியின் பணிகளைப் பாராட்டுகிறேன். அவர்கள் பராமரிக்கும் கணக்கு வழக்குகள் சீரானவை.*



*ஆஸ்டர் மருத்துவ குழுமத் தலைவர் ஆஸாத் மூப்பன், மனைவி நஸீரா மற்றும் மகள்கள் ஸிஹாம், அலிஷா மற்றும் ஸீபாவுடன்.*

போனேன். வேறு நாட்டுக்குப் போயிருந்தால் என்ன ஆயிருக்குமோ தெரியாது. சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான மக்களோடு இருந்தால், பாதி வேலை முடிந்துவிட்டது என்று நம்புபவன் நான். பின்னர் கடவுள் நமக்கு வாய்ப்பு அளிப்பார். ஆனால், கட்டாயம் கடினமாக உழைத்தாக வேண்டும். வேறு கேள்வியே இல்லை என்றார் ஆஸாத்.

சமூகப் பணி தாராளம் குறித்து கூறும்படி கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர் வளைகுடாவுக்குப் பயணம் செல்வதற்கு முன்பே சமூகப் பணிகளில் ஈடுபட்டதாக குறிப்பிட்டார். அங்கே வாரத்தில் ஒரு நாள் எந்த வித கட்டணமும் வசூலிக்காமல் சிகிச்சை அளிப்பேன். அந்த சமயத்தில் முதுநிலை மருத்துவம் படித்த டாக்டர்கள் துபாயில் ஏராளமானோர் இருந்தனர். ஆரம்பத்திலிருந்தே சமூகப் பணி, அறப்பணிகளில் ஈடுபடுவது வழக்கமாக இருந்தது. கடவுள் என்னைப் போன்றவர்களுக்கு உடல் நலம், பொருளாதாரம், கல்வி, நல்ல குடும்பம், பதவி, பரிசு, கவுரவம் என எதிலும் ஒரு குறையும் இல்லாமல் செய்கிறார் என நம்புகிறேன். எனவே, சமூகத்துக்கு நாம் செய்ய வேண்டியது கடமை என்றார் ஆஸாத்.

தனது சொத்தில் 20 சதவீதத்தை அறப்பணிகளுக்காக ஒதுக்கியுள்ளது குறித்து அவரிடம் கேட்டதற்கு,



ரக்ஷிதா பகத்

*"தனது குடும்பத்தை, நாட்டை, உலக மக்களை மிகவும் நேசித்தவன், அனைவரிடமும் நல்லதையே காண விரும்பியவன்" என்று என் கல்லறையில் பதிவு செய்வதை விரும்புகிறேன்.*

அது சிறிய தொகைதான். காரணம், மீதியை மனைவி, மூன்று புதல்வியருக்காக வைத்திருக்கிறேன். ஆனால், எனது நேரத்தில் 80 சதவீதத்தை அறப்பணிகளுக்காகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளேன் என்று ஆஸாத் கூறினார்.

உங்களது சமூக அறப்பணிகளுக்குக் குடும்பத்தினர் ஆதரவு அளிக்கிறார்களா?

நிறைய ஆதரவு தருகிறார்கள். குறிப்பாக மனைவி எனது செயல் களுக்குத் துணையாக இருக்கிறாள். எல்லோரும் எனது சமூகப் பணிகளுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என் குடும்பத்தில் மூன்று புதல்வியர், நான்கு பேரக் குழந்தைகள். ஒரு விதத்தில் பார்த்தால், என் வீட்டில் என்னைப் பார்த்தால், மகளிர் விடுதியின் வார்டனைப் போல் தெரிவேன். இன்னொரு குட்டிப் பாப்பா வீட்டில் தவழப் போகிறது என்றார். (இந்த நேர்காணலை அளித்த அதே தினத்தில் அவருக்குப் பேரக் குழந்தை பிறந்தது!)

கேரளத்தில் வீடுகள் கட்டும் திட்டத்தில் ரோட்டரியுடன் இணைந்தது ஏன் என்று கேட்டபோது, டாக்டர் ஆஸாத் அதற்காகவே 10 லட்சம் டாலர் ஒதுக்கி வைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

உலகில் மக்களுக்காகப் பாடுபடும் அமைப்புகளில் ரோட்டரி தான் உயர்ந்து நிற்கிறது. பெரிய மனிதர்கள், தெரிந்த உள்ளூர் மக்கள், ரோட்டரி மாவட்ட ஆளுநர்கள், ரோட்டரி முன்னாள் தலைவர்கள் போன்றோர் நிறைய செய்திருக்கிறார்கள். பணத்தை விட தங்களது நேரத்தையும் உழைப்பையும் அளித்துள்ளனர். அது என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. ரோட்டரியின் பணிகளைப் பாராட்டுகிறேன். ரோட்டரியின் பணி வெளிப்படைத் தன்மை கொண்டது. அவர்கள் பராமரிக்கும் கணக்கு வழக்குகள் சீரானவை. நிறைய சாதகமான விஷயங்கள் உள்ளன. ரோட்டரியுடன் இணையும் சிந்தனை வந்ததற்கே கோழிக்கோடு மிட் டவுண் ரோட்டரி நண்பர்களான டாக்டர் ராஜேஷ் சுபாஷ், அப்துல் ஹமீது போன்றவர்கள்தான் காரணம் என்றார்.

இது வெறும் தொடக்கம்தான். ஆப்பிரிக்கா, பிலிப்பின்ஸ் போன்ற நாட்டில் உள்ளவர்களுக்கும் ரோட்டரியுடன் இணைந்து இன்னும் பல சேவைகளைச் செய்ய நினைக்கிறேன் என்றார்.

# ஆஸாத், ஒரு பார்வை



**ஓய்வெடுத்தல்:** ஓய்வுக்காக நான் எதையும் நாடுவதில்லை. படுத்தவுடன் ஐந்து நிமிடம் கூட ஆகாது, உடனே தூங்கிவிடுவேன். இதுதான் என் மனைவி கூறும் புகார். நல்ல தூக்கம் இயற்கையாகவே வரும். அதுதான் எனக்கு நல்ல ஓய்வு தருகிறது.

**படிப்பது:** எனக்குப் படிப்பதில் விருப்பம் உண்டு. சில தத்துவ நூல்கள், சில வரலாற்று நூல்களைப் படிப்பேன். ஆன்மிக விஷயங்கள் குறித்து எழுதுவதில் நிறைய நாட்டம் உண்டு. இப்போது நான் எக்கர்ட் டோலி (Eckhart Tolle) எழுதிய “இப்போதைய சக்தி: ஆன்மிக மேம்பாட்டுக்கான வழிகாட்டி (The Power of Now: A guide to Spiritual Enlightenment) என்ற ஆங்கில நூலைப் படித்து வருகிறேன். அதை நீங்கள் படிக்க வேண்டும். அத்துடன், மேலாண்மையியல், குறிப்பாக மனித ஆற்றல் மற்றும் நிதி மேலாண்மை ஆகியவை குறித்த நூல்களையும் படிப்பேன். காரணம், நான் மேலாண்மையியலில் முறையாகப் பயிற்சி பெற்றவன் அல்ல. நான், தொழிலதிபராகியுள்ள ஒரு டாக்டர்.

**பொழுதுபோக்கு:** தொலைக் காட்சியில் விளையாட்டுகளை, குறிப்பாக கிரிக்கெட்டை ரசிப்பேன். பெரும்பாலும் இந்தியப் படங்களோ, மேலைநாட்டுப் படங்களோ குடும்ப கதையுள்ள திரைப்படங்களைப் பார்ப்பேன்.

**உடற்பயிற்சி:** தினமும் யோகா சனம் செய்கிறேன். 30- முதல் 40 நிமிடம் வரை நடக்கிறேன். தியானம் செய்கிறேன். காலையில் 5 மணிக்கே எழுந்திருக்கிறேன். 9 மணி வரையில் எனக்கான நேரம். படிப்பது, பயிற்சி கள் உள்பட எல்லா வேலைகளையும் செய்து முடிக்கிறேன்.

**உணவு:** பெரும்பாலும் சைவ உணவு தான் சாப்பிடுகிறேன். எப்போதாவது மீன், முட்டை மாதிரி அசைவம் சாப்பிடுவேன்.

**நகரம்:** நியூஸிலாந்து. அந்நாட்டின் இயற்கைச் சூழல்தான். அழகான நாடு அது. நியூஸிலாந்தில் விஷப்பாம்புகள் கிடையாது என்பது தகவல்.

**லட்சியக் கனவு:** “தனது குடும்பத்தை, நாட்டை, உலக மக்களை மிகவும் நேசித்தவன், அனைவரிடமும் நல்லதையே காண விரும்பியவன்” என்று என் கல்லறையில் பதிவு செய் வதை விரும்புகிறேன். அதிர்ஷ்டவசமாக பலருக்கு உதவி செய்யும் தொழிலை மேற்கொண்டுள்ளேன்.

டாக்டர் ஆஸாத் மூப்பனை நீண்டகாலமாக நன்கு அறிந்த டாக்டர் சுபாஷ், டாக்டர் ஆஸாத் சொல்வதை விட செயல்படுவதில்தான் அதிகம் ஈடுபாடு காட்டுவார். தனது அலுவல் அறையிலிருந்து வேலை முடிந்து புறப்படும்போது, தனது குழுவின் ஒவ்வொருவரையும் தனித்தனியாக கவனிப்பார். தனித்தனியாகப் பேசுவார். எந்த நல்ல காரியத்தையும் உடனுக்குடன் செய்வதில் குறியாக இருப்பார் என்றார்.

அப்துல் ஹமீது, தனது தொழிலில் வெற்றி பெற்றவர் என்பதை விட மிகச் சிறந்த நல்ல மனிதர் என்பதுதான் குறிப்பிடத் தக்கது. நல்ல நகைச்சுவை உணர்வும் உள்ளவர். தனது குறிக்கோளில் தெளிவான பார்வையும் அடையும் திறமையும் கொண்டவர். தனது குழுவில் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து பணிகளை ஒதுக்கிய பின் மூக்கை நுழைக்க மாட்டார். அப்புறம் குடும்பத் தினருடன் நேரம் செலவிடுவார் என்றார். அவரது அனுதாபமும் இரக்கமும் சாதி, மதம், மொழி, நாடு ஆகிய எல்லா எல்லைகளையும் கடந்தவை. எந்த இடமானாலும் அவருக்கு மனித இனம் ஒன்றுதான் என்றார் ஹமீது.

முப்பது ஆண்டுகளாக மருத்துவ சேவையில் இருந்து வருகிறார் டாக்டர் ஆஸாத். சாதாரண டாக்டராகப் பணி தொடங்கினேன். இன்று 9 நாடு களில் 20 ஆயிரம் பேர் பணிபுரியும் நிறுவனங்களை நடத்தி வருகிறேன். இது பொது நிறுவனம். MIMS மருத்துவ மனைக்கு தனியாக MIMS அறக்கட்டளை இருக்கிறது. அதுவே, அறப்பணிகளுக்காகத் தனியாகச் செலவிடுகிறது. அறப்பணிகளுக்காக மட்டும் ஆண்டுதோறும் மொத்தம் ரூ.50 கோடி செலவிடுகிறோம். வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் லாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை இந்தியாவில் அறப்பணிகளுக்காகச் செலவிடுகிறோம். நான் இந்தியன் என்பதால் இங்குள்ள அறப்பணிகளில் ஈடுபடுகிறேன் என்றார்.

சிரியாவில் அகதிகளுக்காக மருத்துவ முகாமை டாக்டர் ஆஸாத் நடத்தி வருகிறார். சோமாலியாவில் பஞ்சத்தால் வாடுவோருக்கு ஆண்டுதோறும் மருத்துவ உதவிகளுடன் உணவு அளித்து உதவுகிறார். 100 குழந்தைகளின் இதய அறுவைச் சிகிச்சைக்காக கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் கடந்த ஆண்டு நடத்திய நிகழ்ச்சியில் அவருடன் இணைந்தோம் என்றார்.

இந்தியாவை உள்நாட்டிலிருந்தும் பார்க்கிறீர்கள். துபாய் போன்ற வெளிநாடுகளிலிருந்தும் பார்த்திருப்பீர்கள். இந்தியாவின் எதிர்காலம் பற்றி?

இந்தியா அடுத்த 10, 20 ஆண்டுகளில் உலகின் கவனத்தை ஈர்க்கும் நாடாகப் போகிறது என்பதை அறிவீர்கள். இப்போதே தொடங்கி விட்டது. உலகில் முன்னேறிய நாடுகளில் முதல் மூன்று வரிசைகளில் இந்தியா இடம் பெறப் போகிறது. சில நாடுகள் வல்லரசுகளாகி வருகின்றன. அவற்றில் மையத்தில் இந்தியா இடம்பெறப் போகிறது. எப்போது என்பதுதான் கவனிக்க வேண்டியது. அதற்கு நம்மை நாமே தயாராகிக் கொள்ள வேண்டும். நமது குழந்தைகள்





தலைமைப் பண்பை ஏற்க தயாராக வேண்டும். நமது நாட்டின் பண்டைய பாரம்பரிய ஞானம், பல்வேறு மதங்களின் மகான்கள், ஞானிகள் வாழ்ந்த நம் நாடு ஆன்மிக, ஞானத் தலைமையை உலகுக்கே அளிக்கும். நமது பாரம்பரியம், வரலாறும் அதற்கான திறனை அளிக்கும். இவற்றுக்கு மேலாக இளஞர்கள் பலம் உள்ளது. நமக்கான நேரம் வந்துவிட்டது என்று நெகிழ்வோடு குறிப்பிட்டார் ஆஸாத்.

அதே சமயம் நாம் கொஞ்சம் தாமதித்துவிட்டோம். என்னிடம் சிலர் நான் எவ்வளவு காலம் வாழ விரும்புகிறேன் என்று கேட்டார்கள். அதற்கு, நான், இந்தியா 2050ம் ஆண்டில் உலகில் முன்னேறிய நாடாக முதல் அல்லது இரண்டாவது இடத்தில் இருப்பதைப் பார்ப்பதற்காகவே நூறாண்டு வாழ விருப்பம் என்று பதிலளித்தேன் என்றார் ஆஸாத்.

ஆஸாதுக்கு குழந்தை நல அறுவைச் சிகிச்சை, பின்தங்கிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு மருத்துவப் பயிற்சி அளிப்பது, டயாலிசிஸ் மையங்கள் நடத்துவது உள்படப் பல்வேறு மருத்துவ நலப்பணிகளில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அவை ஒரு புறம் இருக்க இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகளைக் கட்டித் தருவது உள்ளிட்ட ரோட்டரியின் பணிகளிலும் அவருக்கு ஈடுபாடு உண்டு.

அப்படியானால் டாக்டர் ஆஸாத் மூப்பன் ரோட்டரியில் வெறும் கவுரவ உறுப்பினராக இருப்பதற்கு மாறாக ஏன் முழு நேரமாக இணையக் கூடாது?

அதற்கு அவர் புன்னகையுடன், இதுவரை சில மருத்துவ மற்றும் கல்வி அமைப்புகளைத் தவிர எந்த அமைப்பிலும் இணைந்து பணியாற்றியதில்லை. ஆனால், இப்போது (கேரளத்தில் வீடுகள் கட்டித் தருவதன் மூலம்) ரோட்டரியின் கூட்டாளியாகியிருக்கிறேன். அதை முன்னெடுத்துச் செல்ல இருக்கிறேன் என்றார்.

வீடுகள் கட்டும் பணியில் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து ஆஸ்டர் ஹெல்த்கேர் குழுமம் மேற்கொள்ளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் டாக்டர் ஆஸாத் மூப்பன் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் RID C பாஸ்கர் கலந்து கொண்டார்.

அவர் பேசுகையில், ஆஸ்டர் குழுமத்துடன் இணைந்து செயல்படும் இப்பணி குறித்து RI போர்டுக்கும் TRF அறங்காவலர்களின் கவனத்துக்கும் கொண்டு சொல்வேன் என்றார்.

டாக்டர் ஆஸாத் மிகச்சிறந்த மனிதர். தனது சொத்தில் 20 சத வீதத்தை ஏழைகளின் நலனுக்கான அறப்பணிகளுக்காக அளித்துள்ளார். அத்துடன் தனது பொன்னான நேரத்தில் 80 சதவீதத்தை இலவச மருத்துவ உதவி, ஆலோசனை, ஆப்பிரிக்கா, பிலிப்பின்ஸ், வங்க தேசம் ஆகிய நாடுகளின் மருத்து வர்களுக்கான பயிற்சிகள் ஆகிய பணிகளில் ஈடுபடுத்தப் போவதாகக் கூறியுள்ளார். அத்துடன் RI உள்ளிட்ட அமைப்புகளுடன் இணைந்து செயல் படுவதிலும் ஆர்வம் காட்டுகிறார். இதுதான் ரோட்டரி அமைப்பு நாடும் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் கூட்டுப் பணியாகும் என்றார்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# எல்லை கடந்த கார் பயணம்

V முத்துகுமரன்

ரோட்டரியின் பெருமை மிகு குறிக்கோள்கள் இப்போது இமயமலையின் உச்சியையும் அடைந்தது, இந்தியா, நேபாளம் மற்றும் பூடான் நாடுகள் வழியாக 7,800 கி.மீ. தூரத்தை கார் பயணம் செய்து கடந்திருக்கிறார்கள், RID 3131ன் 10 வெவ்வேறு சங்கங்களைச் சேர்ந்த 22 உறுப்பினர்கள், இந்த கிளர்ச்சியூட்டும் பயணத்தில் பரபரப்பையும் துடிதுடிப்பையும் அனுபவித்துள்ளனர்.

PDG சுபோத் M ஜோஷி தலைமையில் ரொட்டேரியன்கள் ஏழு கார்களில் பயணித்தனர், செல்லும் வழியெல்லாம் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த கார்களில் WinS, புவி வெப்பமயமாதல், போலியோ ஒழிப்பு மற்றும் உறுப்புத் தானம் போன்ற ரோட்டரியின் முக்கியப் பிரச்சாரங்கள் குறித்த ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்தது. இந்த இமயமலைப் பயணத்தை பன்வேலில் இருந்து DG சைலேஷ் பலேகர் தொடங்கிவைத்தார், சுமார் 600 கி.மீ., தூரத்தைக் கடந்த பிறகு, முதல் நிறுத்தமாக இந்தூரில் தங்கினர். PDG சஞ்ஜீவ் குப்தா தங்குவதற்கு சௌகரியமான ஏற்பாடுகளைச் செய்தார் மற்றும் ஒரு பிரத்யேகமான கூட்டத்தில் பயணம் செய்தவர்களை DGN கஜேந்திர நரங் வாழ்த்தினார்.

பரேலியில் ஒரு பிசியோதெரபி மையத்திற்கும் ஜெய்பூர் காலணி உற்பத்தி மையத்திற்கும் ரொட்டேரியன்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

**ஒரு பிரமாண்ட வரவேற்பு**

நேபாளத்தில் உள்ள கட்டா சவுக்கியில் RC தங்காதி (RID 3292) ரொட்டேரியன்கள் சுற்றுப்பயணம் செய்தவர்களுக்கு உற்சாகமான வரவேற்பைக் கொடுத்தனர். இந்திய ரொட்டேரியன்களை நேபாளத்தின் மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் மாயா பாத் தங்காதியில் நடைபெற்ற பிரத்யேகமான நிகழ்ச்சியில் வரவேற்றார். புத்வாலில் மருத்துவ மனை, கேத் லேப், MRI மையம் மற்றும் டயாலிசிஸ் துறை போன்றவற்றில் உள்ளூர் சங்கம் செயல்படுத்தும் சுமார் ரூ.10 கோடி மதிப்புள்ள மருத்துவ திட்டப்பணிகளைப் பார்வையிட இந்த பிரதிநிதிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பிறகு இந்தப் பயணம் பல்பா, பொகரா வழியாக காத்மண்டு நோக்கி தொடர்ந்தது, பிறகு ஒரு மலையில் அமைந்துள்ள மனகாம்னா கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்தனர். காத்மண்டுவில் PDG கேசவ் கன்வார் இவர்களை வரவேற்றார், பிறகு அதிகாலையில் அங்கிருந்து எவரெஸ்ட் உச்சியைப் பார்க்க ஒரு விமானத்தில் பறந்தனர். “உலகத்தில் இருந்து போலியோவை ஒழிப்பதிலும் நீர் மூலமாகப் பரவும்




*PDG சுபோத் ஜோஷி (இடது) மற்றும் குமார் விதாதே, RC பூனே அடப்ஜர், பூடானில் மிக உயரத்தில் இருக்கும் வாகன சாலையில்.*

நோய்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதிலும் ரோட்டரி பணியாற்றிக்கொண்டிருக்கும் சிறந்த பணியைப் பரப்புவதற்கு இந்தக் கார்பயணம் ஒருவிதத்தில் உதவிகரமாக இருக்கும். இந்த பயங்கரமான நோயிலிருந்து தங்களையும் தங்கள் குழந்தைகளையும் பாதுகாக்க மக்களிடையே விழிப்புணர்வையும் இது ஏற்படுத்துகிறது,'' என்றார் DGN ராஜீப் போக்ரேல், RID 3292.

பசுபதிநாதர் கோவில் தரிசனத்தை முடித்தபிறகு அவர்கள் இடஹரிக்குச் சென்றனர், அங்கே அவர்களுக்கு ரோட்டராக்டர்கள், இசை நடனத்தின் மூலம் கண்களுக்கும் செவிக்கும் விருந்தளித்தார்கள்.

RC புனே சவுத் சங்கத்தைச் சேர்ந்த சுதான்ஷு கோரே ஆதரவற்ற சிறுமியின் ஒரு வருட படிப்பு செலவுக்கு ரூ.12,000 நன்கொடை அளித்தார். இந்தியாவிற்குத் திரும்பு கையில், டார்ஜிலிங் வந்து சேர்ந்தனர், DGN சுபாசிஸ் சேட்டர்ஜி தங்குவதற்கு ஏற்பாடுகளை செய்தார்.



## பனி போர்த்திய பிரதேசம்

பூடானில் ஃபுயன்ட்சோலிங் மற்றும் பாரோ வழியாகச் செல்லும் போது, மைனஸ் 7 டிகிரியில் முழுவதும் பனி போர்த்திய சாலையில் கார் ஒட்டியது அவர்களுக்கு ஒரு பரபரப்பான சாகசமாக இருந்தது. புனகாவில் நடைபெறும் சில சேவைத் திட்டப்பணிகளைப் பார்வையிட இந்த ரொட்டேரியன்கள் அழைத்துச் செல்லப்பட்டனர், மதிய உணவு சாப்பிட்ட பிறகு, வாட்டர் ராஃப்டிங் செய்ய ஆரம்பித்தனர். ஜெலேபில் இருந்து இந்தக்குழு இந்தியாவிற்குள் நுழைந்தது. வங்கதேச எல்லையில் இந்திய இராணுவம் அவர்களுக்கு சிற்றுண்டி அளித்தனர். சிலிகுரியில் ஒரு இரத்தவங்கித் திட்டப்பணியை அவர்கள் பார்வையிட்டனர்.

தான்பாத்தில் ஒரு அட்டகாசமான வரவேற்பை RIDE கமல் சங்வி ஏற்பாடு செய்திருந்தார். DGN ராஜன் கங்கோத்ரா, PDGகள் சந்தீப் நாரங் மற்றும் சஞ்சய் கெம்கா போன்றோரும் கலந்துக்கொண்டனர்.



*ஸ்முருதி மற்றும் ஸ்ருஷ்டி, ஜோஷியின் மகள்கள், அவர்களது தாயார் ஸ்நேஹா நேப்பாலத்தில் உள்ள பசுபதிநாத் கோவிலில்.*

## இறுதிச் சுற்று

ராய்ப்பூரில் பயண உறுப்பினர்களை PDGகள் மற்றும் DG நிகிலேஷ் திரிவேதி அழைத்தார். 20 நாள்கள் கழித்து நாக்பூரில் இந்த கார் பயணம் நுழைந்தது.

இந்தபூர் செல்லும் வழியில் பிக்வான், குர்கும்ப் மற்றும் புரந்தர் போன்ற ரோட்டரி சங்கங்கள் அவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்தனர். மற்றும் மாபெரும் இறுதிச்சுற்று லோனி, ஹடாப்சர் அருகே ஒன்பது சங்கங்களுடன் நடந்தது, DG பாலேகரந்த், DGN ரேஷ்மி வினய் குல்கர்னி ஒரு பிரமாண்டமான வரவேற்பு நிகழ்ச்சி யை நடத்தினர்.

இந்த மாபெரும் சாகசப் பயணத்தைப் பற்றி கூறுகையில், "ஒரு ரோட்டரி தளத்தின் மூலம் நமது அண்டை நாடுகளுக்கு சென்றது ஒரு அற்புதமான அனுபவம். இந்த கார்பயணத்தின் மூலமாக பிரபலமான நிறைய ரோட்டரி பணிகளை வெளிக்காட்ட முடிந்தது, எல்லைகளையும் தாண்டி ரோட்டரியின் எண்ணங்களை பகிர்ந்துகொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது,'' என்று பயணத்தின் தலைவர் PDG ஜோஷி கூறுகிறார்.■

# உங்கள் ரோட்டரி பற்றி அறிந்துக் கொள்ளுங்கள்

*உங்களது சந்தா தொகையை ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பு எப்படிப் பயன்படுத்துகிறது?*

*உலகில் மாற்றத்தை ஏற்படுத்தவும் மற்றவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் தேவையான வழிமுறைகளை அளித்து உங்களது திறனையும் அனுபவத்தையும் மேம்படுத்துவதற்கு ரோட்டரி இன்டர்நேஷனல் ஈடுபட்டு வருகிறது. நீங்கள் செலுத்தும் சந்தாக்கள் அவை செயல்படுவதற்கு உதவுகின்றன. அதற்கு ரோட்டரி இன்டர்நேஷனல் அளிக்கும் சில வழிகள் இதோ:*

**சவால்: எனது ரோட்டரி சங்கம் வளர வேண்டியுள்ளது.**
**RI அமைப்பு எப்படி உதவ முடியும்:**
உறுப்பினர்களாக வரக் கூடியவர்களை, புதிய உறுப்பினர்களுடன் தற்போதைய உறுப்பினர்கள் தொடர்பில் இருப்பதற்கும் ரோட்டரி சங்கத்தை வளர்ப்பதற்கும் தேவையான தகவல்களை rotary.org/membership என்ற தளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**உறுப்பினர்களாக வரக் கூடியவர்களுடன் எங்களது ரோட்டரி சங்கம் தொடர்பில் இருப்பதற்கு விரும்புகிறது.**
ரோட்டரியில் ஆர்வமுள்ளவர்கள் ரோட்டரி சங்கங்கள், ரோட்டரி மாவட்டங்கள் ஆகியவற்றையும் இணைப்பதற்கு RI அமைப்பு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான வழிமுறைகளின் மூலம் பாலமாக அமைந்துள்ளது. அது குறித்து அறிந்து கொள்ள இணையம்: rotary.org/membership.

**நான் ஊரை விட்டு ஊர் மாறுகிறேன். புதிய ரோட்டரி சங்கம் பற்றி அறிய விரும்புகிறேன்.**
உங்களுக்கு எது பொருத்தமான ரோட்டரி சங்கமோ அதில் இணைவதற்கு, Club Finder on rotary.org இணையதளத்தை தேடுங்கள். அல்லது உங்களது திறன் பேசியில் (smartphone) Club Locator என்ற செயலியைப் பதிவிறக்கிக் கொள்ளுங்கள். ரோட்டரி சங்கத்தை மாற்றிக் கொள்வதற்கு இணையங்கள்: my.rotary.org/member-center/member-relocation

**ரோட்டரியனாகப் பணியாற்ற ஒரு சிறந்த நபரை எனக்குத் தெரியும்.**
அத்தகைய நபரை உங்களது சங்கத்திலோ வேறு ரோட்டரி சங்கத்திலோ இணையும்படி கேட்டுக் கொள்ளுங்கள். அவரைப் பற்றிய விவரங்களை my.rotary.org/ member-center/member-referral பதிவு செய்யுங்கள்.

**எங்கள் சங்கத்தின் ஒரு சிறந்த திட்டப்பணியைப் பற்றி மக்களுக்குக் கூற விரும்புகிறேன்.**
உங்கள் செயல்பாடுகளைப் பற்றி நல்ல புகைப்படங்களுடன் rotary.org/showcase என்ற இணையதளத்தில் பதிவிடுங்கள்.

**மானியம் பெற விண்ணப்பித்தால், அது எந்த நிலையில் உள்ளது என**

---

Grant Center *குறித்து கவலை வேண்டாம். மேலோட்டமாகப் பார்க்கும்போது கடினமாகத் தோன்றும். ஆனால், எளிதில் பயன்படுத்தலாம்.*

**சாலி ப்ளாட்**
மரியெட்டா மெட்ரோ ரோட்டரி, ஜார்ஜியா.

---



*பாக்சிஸ்தானில் ரோட்டரியின் போலியோ ஒழிப்புத் திட்டம்.*



*இந்திய பள்ளி ஒன்றில் ரோட்டரியின் உதவியுடன் குழந்தைகளுக்கு புதிய இருக்கை வசதி.*

**அறியவும் நான் விரும்புகிறேன்.**
ரோட்டரி மானியம் பெறுவது குறித்து அறிந்து கொள்ள rotary.org/our-programs/grants என்ற தளத்தை அணுகலாம். அனைத்து மொழிகளிலும் தகவல் கிடைக்கும்.

**எனது சமுதாயத்தில் உள்ள மக்கள் எங்களது சங்கத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்புகிறேன். அதற்கு என்ன செய்ய வேண்டும்?**
உங்களது ரோட்டரி சங்கத்தின் பணியின் மூலம் ஏற்படும் நற்பலன்கள் குறித்த நிகழ்ச்சிகளை அறிவதற்கான வழிகளை ரோட்டரி சங்கத்தின் மக்கள் செயல் இயக்கம் (People of Action campaign) அளிக்கிறது. தகவல் பரிமாற்றம், உள்ளூர் நிகழ்வுகளுக்கான யோசனைகள், சமூக ஊடக விளம்பரங்கள், விடியோ மூலமான விளம்பரத்துக்குத் தேவையான தகவல்கள், வழிகாட்டுதல்கள் ஆகிய வற்றை அறியலாம். மேலும் அறிய இணையதளம்: rotary.org/brandcenter.

*உறுப்பினர்கள் குறித்த* Manage Membership Leads *பக்கம் அற்புதம்! நான் ஏற்கெனவே ரோட்டரி உறுப்பினராகும் ஆர்வமுள்ள நான்கு பேரை இணைத்துவிட்டேன். அவர்கள் அடுத்த மாதம் எங்களது ரோட்டரி சங்கத்துக்கு வருகிறார்கள்.*

**சாண்டி ஸ்பிரிங்ஸ்**
சாண்டி ஸ்பிரிங்ஸ், ஜார்ஜியா

**எங்கள் சங்கத்தில் ஒரு திட்டத்திற்கு சிறந்த யோசனை வைத்துள்ளோம். உலகளாவிய நிதியுடன் கூடிய ரோட்டரி கூட்டாளியைத் தேட வேண்டும்.**
ரோட்டரி சங்கத்தின் பக்கங்களை அறிவதற்கு ideas.rotary.org என்ற தளத்தை அணுகுங்கள். ரோட்டரி சங்கம் மற்றும் மாவட்ட ரோட்டரி தலைவர்கள் தங்களுக்குக் கூட்டாளிகள் வேண்டுமானால் தேவையான பக்கத்தை உருவாக்கிக் கொள்ளலாம்.

**உள்ளூர் அளவில் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ரோட்டரி தொடர்பான விவரத்தை அறிய விரும்புகிறேன்**
ரோட்டரி மற்றும் உங்களது ரோட்டரி சங்கம் குறித்த விழிப்புணர்வை, தகவலை உடனடியாகப் பெறுவதற்கு shop.rotary.org என்ற தளத்தை அணுகவும்.

*நாங்கள் வர்த்தக அடையாள பிரசாரத்தை* (Branding Campaign) *பணிக்குழுக்களின் விடியோக்கள்* (People of Action videos), *பின்னணி சுவரொட்டிகள்* (Backlit Posters), *சமூக ஊடகங்கள்* (Social Media) *மூலம் சான்டியாகோ சர்வதேச விமான நிலையத்தில் மேற்கொண்டோம். அது மிகப் பெரிய வெற்றி தந்தது.*

**ஸ்காட் கார்**
சான்டியாகோ டௌன்டவுன் ரோட்டரி சங்கம்

**ரோட்டரியிடம் எனது தனிப்பட்ட விவரங்களை அளிப்பது பாதுகாப்பானதா என அறிந்துகொள்ள விரும்புகிறேன்.**
நமது உறுப்பினர்களின் தனிப்பட்ட விவரங்களைப் பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் வைத்திருக்க வேண்டும் என்ற சட்டத்தை ரோட்டரி உறுதியாகக் கடைப்பிடிக்கிறது. ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தனிப்பட்டோர் குறித்த கொள்கையை my.rotary.org/privacy-policy என்ற தளத்தில் அறிந்துகொள்ளுங்கள்.

©The Rotarian

# RIPE மார்க மலோனியின் இந்திய விஜயம்




*RIPE மார்க் மலோனி, DGN ஷபீர் ஷகீர், அஷ்வினி. DGE ராஜேந்திர பாம்ரே, RIDE பரத் பாண்டியா, D 3030 DG ராஜீவ் சர்மா, PDG கிஷோர் கேடியா, DGND ரமேஷ் மெஹர் மற்றும் PDG மகேஷ் மோகால்கர் அவர்களுடன்.*

*கொல்கத்தாவில் D 3250வின் PETSல் PRID சேகர் மேத்தா, RIDE கமல் சங்வி மற்றும் சோனலுடன்.*










**மேலே:** RIDE *பாண்டியாவுடன்* RIPE *மலோனி.*
**கீழே:** RIDE *சங்வி, சோனல் மற்றும்* D 3250 *வின் மூத்தத் தலைவர்களுடன்* RIPE *மலோனி*









**இடது:**
D 3030 DGN *ஷபீர் ஷகீருடன்.*

**இடது கீழே:**
RIன் 2019-20 *தீம் சாக்ஸ் அணிந்துக்கொண்டு* RIDE *பாண்டியா.*

**மேலே:**
D 3030*வின் விருந்தோம்பலில்* RIPE *மலோனி,* RIDE *பாண்டியா மற்றும்* DGE *பாமரே.*














**மேலிருந்து:**
*பூபனேஷ்வரில் ரோட்டரியினருடன்* RIPE *மலோனி.*

RID C *பாஸ்கர்,* DGE G *சந்திரமோகன்,* PRID P T *பிரபாகர் மற்றும்* D 3232 *ரோட்டராக்டரகளுடன் சென்னையில்* RIPE *மலோனி.* DRRE *செந்தில் மணியும் உடன் உள்ளார்.*

DGE *பாமரே,* RIDE *பாண்டியா மற்றும்* D 3030 2019-20 *சங்கத்தலைவர்களுடன்* RIPE *மலோனி.*

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# வடகிழக்கு மாநிலங்களு



ரஷீதா பகத்

அந்தச் சிறுவர்களின் முகத்தில் மகிழ்ச்சியையும் கண்களில் புன்னைகையையும் பார்க்கலாம். அவர்கள் மணிப்பூர் மாநிலம் சூரச்சந்தப்பூர் மாவட்டம் கோமுன்னும் கிராமத்தில் உள்ள லைஸன் நட்புப் பள்ளி (Lyzon Friendship School) மற்றும் அதே மாவட்டத்தின் சிங்கட் மகிழ்ச்சி இல்லம் (Happiness Home) ஆகியவற்றைச் சேர்ந்த சிறுவர்கள்தான்.

லைஸன் நட்புப் பள்ளிக்கு கட்டடங்கள் உள்ளிட்ட வசதிகளுக்காக பெங்களூரு ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த D ரவிசங்கர் ரூ.40 லட்சம் உதவியிருக்கிறார்.

சிங்கட் மகிழ்ச்சிப் பள்ளியை இன்னொரு கொடையுள்ளம் கொண்ட சகோதரர் ராமா நடத்தி வருகிறார்.

இந்த இரு இல்லங்களிலும் வசிக்கும் சிறுவர்கள், பிரான்சிஸ்கன் க்ளாரிஸ்ட் காங்கிரகேஷன் சபையின் (Franciscan Clarist Congregation - FCC) சகோதரிகள் நடத்தும் மெர்சி இல்லத்தில் வசிக்கும் சிறுவர்கள் என சுமார் நூறு சிறுவர்கள் HIV, எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது வேதனையான உண்மை.

மணிப்பூர் போதைப் பொருள் புழக்கத்துக்குப் பெயர் போனது. ஊசி மூலம் போதைப் பொருளை உடலுக்குள் செலுத்துவதால், HIV, எய்ஸ்ட் தாக்கு தலுக்கு அவர்கள் ஆளாகிறார்கள்.

வடகிழக்கு மாநிலப் பகுதிகளுக்கு ஏதாவது தொண்டு புரிய வேண்டும் என்று ரவிசங்கர் விரும்பினார். சன்பேர்ட் அறக்கட்டளையின் முதன்மை செயல் அலுவலர் கர்னல் கிறிஸ்டோபர் ரெகோவுடன் வடகிழக்கு மாநிலப் பகுதிகளில் பயணம் செய்ததை அடுத்து இந்த எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. சன்பேர்ட் அறக்கட்டளை வடகிழக்கு மாநிலப் பகுதிகளில்

---

*அப்பகுதியின் முந்தைய தலைமுறையினர் வன்முறை, பிரச்சினைகளைத்தான் பார்த்தனர். அடுத்த தலைமுறையுடன் இணைந்து செயல் படுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.*

---

# க்கு நம்பிக்கை ஒளி!



குழந்தைகளின் கல்வி, மக்கள் நலம் ஆகியவற்றுக்கு உதவி வருகிறார். அங்குள்ள மகிழ்ச்சி இல்லத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி கழிப்பறை கட்டித் தர உதவினார்.

கோமுன்னும் கிராமத்திற்குப் பள்ளிக்குக் கட்டடம் கட்டித் தருவதற்கும் ஐஜெய்ராங் கிராமத்தில் மாணவர் விடுதிக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்தவும் ரவிசங்கர் ஒரு கோடி ரூபாய் அளித்துள்ளார்.

குழந்தைகளுக்காக இந்த நலப்பணிகளுக்கு உதவும்படி நான் பணியாற்றும் ஹரா வீட்டுவசதி நிறுவனத்தைச் சேர்ந்த BSN ஹரியிடம் கேட்டுக் கொண்டேன். அவர் நீ எதைக் கேட்டாலும் தருகிறேன் என்றார். அதற்கு நான், “அப்படிச் செய்யவேண்டாம். அந்த இடத்திற்குச் சென்று நேரடியாகப் பார்வையிடுங்கள். அவர்களது தேவை என்ன என்று அறிந்துகொண்டு, அதற்கேற் முடிவெடுங்கள்” என்றேன். அதையடுத்து, கழிவறைகளைக் கட்டித் தருவதற்காக ரூ.11.2 லட்சம் அளிக்க முன்வந்துள்ளார் என்று ரவிசங்கர் கூறினார்.

கர்னல் ரெகோ, மகிழ்ச்சி இல்லத்தைச் சேர்ந்த சகோதரர் ராமா பற்றி கூறும்போது, அவர் HIVயால் பாதித்த குழந்தைகளை அரவணைத்துப் பாதுகாக்கத் தொடங்கியதாகக் கூறினார். HIV பாதித்த குழந்தைகளையும், ஆதரவற்ற குழந்தைகளையும் தன் குடும்பத்தில் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து காப்பாற்றும் எண்ணம் கொண்டதாகக் கூறினார். அதையடுத்து தனது சொந்த வீட்டையே ஆதரவற்றோருக்கான இல்லமாக அமைத்துள்ளார் அவர், என்றார்.

### அவர்களின் கனவுகள்

அந்த இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றோம். வண்ணப் பூக்களை ஏந்திய சிறுவர், சிறுமியரின் முகத்தில் மகிழ்ச்சி. அங்கே இருபதைத் தொடாத இரு சகோதரிகள். டைமண்ட், ரூபி என்று இரு ரத்தினங்களின் பெயர்கள் கொண்டவர்கள்தான்! அவர்களுக்கு தம்பி உண்டு. மணிப்பூர் பாரம்பரிய உடைகளை அணிந்தபடி அவர்களில் 19 வயது ரூபி கூறினாள்:

எங்களது தாய் 2012ம் ஆண்டு இறந்து விட்டார். தந்தையோ 2018ம் ஆண்டு இறந்துவிட்டார். நானும் என் தம்பியும் நோய்க்கு மருந்து சாப்பிடுகிறோம். ஆனால், தங்கை சாப்பிடுவதில்லை. ஆறு வருடங்களாக இந்த இல்லத்தில் வாழ்க்கை



*ஒரு மணிப்பூர் சிறுவன் தன் உணவை தானே சமைத்துக் கொள்கிறான்.*







*கர்னல் கிரிஸ் ரெகோ மற்றும் RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் தலைவர் D ரவிசங்கருடன் பெண்கள் சுய உதவிக்குழு உறுப்பினர்.*



*ஓடையை கடந்து பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள்.*

சுமுகமாக இருக்கிறது என்றாள். முகத்தில் எந்தவித உணர்வும் இல்லை. ஆனால், விமானப் பணிப்பெண்ணாக வேண்டும் என்ற லட்சியக் கனவை மட்டும் கூறினாள். டைமண்ட் ஆடை அலங்காரக் கலைஞராக வேண்டும் என்றாள்.

இங்கே மகிழ்ச்சி இல்லத்திலும் மெர்சி இல்லத்திலும் இருக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் HIV தாக்கம் இல்லை. அவர்களுக்கு யாரும் இல்லாததால், இங்கே ஆதரவற்ற குழந்தைகளாக இருக்கின்றனர்.

பாதிக்கப்பட்டோருக்கும், மருந்து கிடைக்காதவர்களுக்கும் மருந்து அளிக்கி றோம் அத்துடன், புதிய, மேலும் நல்ல மருந்துகளும் வரவழைக்கப்படுகின்றன. குழந்தைகள் இங்கே, ஆடிப்பாடி உற்சாகமாக இருக்கிறார்கள் என்று கர்னல் ரெகோ கூறினார்.

மெர்சி இல்லத்தின் பொறுப்பாளராக இருக்கும் FCC நிறுவனத்தைச் சேர்ந்த சகோதரி ஆனி பொருன்னோனில், இங்குள்ள மருத்துவமனையில் நர்சாகப் பணியாற்றியபோது, 1996ம் ஆண்டு இந்தப் பணி தொடங்கப்பட்டது. அப்போது நாங்கள் நான்கு பேர்தான் இருந்தோம். குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத் தந்தோம். நோய்த்தடுப்புப் பணியையும் மேற்கொண்டோம் என்றார். இதற்கு முன் 1980ம் ஆண்டு போலியோ தடுப்புப் பணியில் அவர் ஈடுபட்டதை நினைவுகூர்ந்தார். அந்தக் காலத்தில் சொட்டு மருந்தினைப் பாதுகாப்பாக வைக்க பிளாஸ்கில் ஐஸ் கட்டிகளைப் போட்டு எடுத்துச் சென்றதாகக் குறிப்பிட்டார் ஆனி.

1996ம் ஆண்டு அங்கே இனக் கலவரம் ஏற்பட்டதை அடுத்து, போதைப்

பொருள் புழக்கம் அதிகரித்தது. போதைக்கு அடிமையான பலருக்குச் சிகிச்சை அளித்தோம். அவர்களில் பலருக்கு HIV தாக்கம் இருந்தது தெரியவந்தது. கணவனை இழந்த பெண்கள் அவர்கள் மூலம் HIV பாதிப்புக்கு ஆளாயினர் என்றார் அவர்.

சிறுவர்கள் HIV தாக்கத்துக்கு ஆளாகி, சிறிய வயதிலேயே இறப்பதைக் கண்டு கன்னியாஸ்திரிகள் கவலைப்படுகிறார்கள். அதனால், அவர்களுக்கு ஆதரவளிக்கிறார்கள். இந்த இல்லத்தில் தற்போது 50 குழந்தைகள் தங்கியிருக்கின்றனர். நல்ல காலம் எல்லோரும் HIVயால் பாதிக்கப்படவில்லை.

FCCன் 180 கன்னியாஸ்திரிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு மாதந்தோறும் அலவன்ஸ் தரப்படுகிறது. அதிலிருந்து ஒவ்வொருவரும் ரூ.200 அளித்து, மெர்சி ஹோம் நடத்தப் பயன்படுத்துகிறார்கள். உள்ளூர் மக்களும் உதவுகிறார்கள். இன்று காலையில்தான் ஒரு பெண்மணி ரூ.2000 நன்கொடை அளித்துள்ளார். கர்னல் ரெகோ நடத்தும் சன்பேர்ட் டிரஸ்ட் குழந்தைகளுக்குப் பால், முட்டை, சத்தான உணவுக்காக மாதந்தோறும் ரூ.10 ஆயிரம் வழங்குகிறது என்றார் ஆனி.

கர்னல் ரெகோ 60 போர்வைகளும் பெட் ஷீட்களும் கர்ல்-ஆன் நிறுவனத்திடமிருந்து நன்கொடையாகப் பெற்று வழங்கினார்.

## சுய உதவிக் குழந்தைகள்

அந்தக் கிராமத்துக் குழந்தைகள் கல்வி பெறுவதற்காகச் செயல்பட்டதை ரெகோ நெகிழ்ச்சியான சம்பவமாக நினைவுகூர்ந்தார்.

வடகிழக்கு மாநிலப் பகுதிகளில் குழந்தைகளுக்குப் பள்ளி சென்று படிப்பதில் ஆர்வம் உள்ளது. ஆனால், அதற்காகப் படும் அவதிதான் அதிகம்.

பல கிராமங்கள் மலைப் பகுதிகளில் அமைந்துள்ளன. ஒரு கிராமத்தில் 40 குடிசைகள் இருந்தால், இன்னொரு கிராமத்தில் 60 குடிசைகள் இருக்கும். அதனால், ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு பள்ளியை நடத்த முடியாது. அதனால், மத்தியப் பள்ளி தொடங்கப்பட்டது. ஆனால், அருகில் உள்ள சிறுவர்கள் அங்கே படிப்பதற்காகச் செல்வது மிகவும் கடினமானது. மலைகளில் சாகசப் பயணம் போல் நடக்கவேண்டும், ஓடைகளைக் கடக்க வேண்டும், பல சமயம் மழை பெய்யும், வழியெங்கும் சேறும் சகதியும் இருக்கும். அதன் பிறகே பள்ளிக்குச் செல்ல முடியும் என்றார் ரெகோ.

அதற்காக, சிறுவர்களுக்காக பள்ளிக்கு அருகிலேயே ஒரு மாணவர் விடுதியை அமைப்பதும் இயலாது. அதற்கு வாழைப்பழம் விற்று பிழைப்பு நடத்தும் அவர்களால் கட்டணம் செலுத்த முடியாது. அதன் விளைவாக சுய உதவிக் குழந்தை (Self-help Kid) என்ற திட்டம் உருவானது. பள்ளிக்கு அருகில் உள்ள ஒரு குடிசை தேர்ந்தெடுக்கப்படும். அதில்

*அந்தக் காலத்தில் சொட்டு மருந்தினைப் பாதுகாப்பாக வைக்க பிளாஸ்கில் ஐஸ் கட்டிகளைப் போட்டு எடுத்துச் செல்வோம்.*

***சிஸ்டர் ஆனி பொருனோனில்***



*அஸ்ஸாமில் நடந்த இந்திய சூப்பர் லீக் கால்பந்து போட்டியில் குழந்தைகளையும், கர்னல் ரெகோவையும் வரவேற்கும் ஜான் ஆப்ரஹாம்.*





குழந்தைகளுக்கு இடம் அளிக்கப் படும். பெரும்பாலும் அவர்கள் அக்கிராமத்தில் வசிக்கும் சகோதரர்களாக இங்குள்ள அவர்களுக்கு இருப்பர். குடிசையில் சமையலறையில் இடமளிக்கப்படும். அக்குழந்தைகளின் பெற்றோர்களுக்கு வாடகை தர வசதி இருக்காது. குடிசையின் உரிமையாளருக்கு அரிசி, பருப்பு, காய்கறி ஆகியவற்றை வாடகையாக அளிப்பர். குழந்தைகளுக்குக் கொஞ்சம் பணம் தருவர். குழந்தைகள் காசை வைத்துக் கொண்டு உருளைக்கிழங்கு, வெங்காயம் வாங்கலாம். ஓடையில் மீன் பிடித்து, இவற்றை வைத்து அவர்களே தங்களுக்குத் தேவையான உணவைச் சமைத்துச் சாப்பிட்டு, பள்ளிக்குச் செல்வர்.

**மேலிருந்து:** *மணிப்பூரின் பாரம்பரிய உடையில் அப்பகுதிப் பெண்கள்.*

*ஐஜெராங் விடுதியின் 75 லீட்டர் தண்ணீர் தொட்டி திறப்பு விழாவில் கர்னல் ரெகோ, D ரவிசங்கர், அவர் பார்ட்னர் B S N ஹரி, சுனந்தா ஹரி மற்றும் பவோலா ரவிசங்கர்.*

### உள்ளூர் மக்களின் கோரிக்கை

குழந்தைகள் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அந்தக் கிராமத்தினருக்கு இருக்கிறது. கர்னல் ரெகோ ராணுவப்

பணியில் இருந்தபோது ஒரு நாள் மணிப்பூரில் ஒரு கிராமத்திலிருந்து வேண்டுகோள் வந்தது. ரெகோ செய்து வரும் சமூகப் பணிகளை அறிந்ததால் அவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

இம்பாலிலிருந்து 80 கி.மீ தொலைவில் உள்ள ஐஜெராங் என்ற இடத்தைச் சேர்ந்த பள்ளிச் சிறுவர்களுக்காக விடுதி கட்ட வேண்டும் என்ற வேண்டுகோள் அது. அந்த இடத்துக்குச் சாலை வழியாகச் செல்லவேண்டுமானால், 3 மணி நேரத்துக்கு மேல் ஆகும். அந்தக் கிராமமோ அடர்ந்த காட்டுப் பகுதியில் இருக்கிறது. அவரது உயிருக்கு ஆபத்தும் உள்ள இடம் அது. ராணுவ அதிகாரி என்பதால், அவருக்கு ஒரு வேளை தீவிரவாதிகள் வலை விரித்திருக்கக் கூடும்.

ஒரு ராணுவ அதிகாரியிடம் அவர்கள் இப்படி வேண்டுகோள் விடுப்பது வியப்பானது. இதைப்பற்றி கர்னல் ரெகோ கூறுவதாவது: உள்ளூர் மக்கள் சிலர் பாதுகாப்பு அளிக்க முன்வந்தனர். கிராமத்துக்குச் சென்றேன். அங்கே கிராமத் தலைவர் விடுதிக்கு நிலம் வழங்குவதாக உறுதி அளித்ததுடன் எல்லா வகையிலும் உதவுவதாகவும் கூறினார். இருந்தாலும் ஆபத்து அதிகம் என்பதால், மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருந்தது. யாருக்கும் முன்னே தெரிவிக்காமல்தான் செல்லவேண்டும். ஏன் என் டிரைவருக்குக் கூட எங்கே செல்கிறோம் என்று தெரியாது. அடர்ந்த கிராமத்தில் செல்லும்போது, எங்கிருந்து துப்பாக்கிக் குண்டு வந்து தாக்குகிறது என்று கூடத் தெரியாது. கிராமத்தினர் நிறைய உதவினர். விடுதி கட்டுவதற்கு நிலம், மரம் எல்லாம் அளித்தனர். கிராமத்துச் சிறுவர் பட்டாளம் எங்கிருந்தோ கஷ்டப்பட்டு கற்களைக் கொண்டுவந்தனர். அசாம் ரைபிள் படையினர் இம்பாலிலிருந்து சிமெண்ட், கட்டுமானப் பொருட்களை லாரியில் கொண்டுவந்தனர். ஒரு பிரிகேடியர் கூரைக்காக 300 பெயிண்ட் செய்யப்பட்ட தகர ஷீட்களை அளித்தார்

பலரிடமிருந்து உதவி கோரி கர்னல் ரெகோ 45 குடும்பங்களே உள்ள கிராமத்தில் 2014ம் ஆண்டு பிப்ரவரியில் பணியைத் தொடங்கினார். ஆறு மாதத்தில் விடுதி அமைந்துவிட்டது. உடலுழைப்பு அளித்த கிராமத்தினருக்கு ஊதியமும் தரப்பட்டது. கிராமத்தினர் பரம ஏழைகள். ஆண்டு முழுதும் தேவைப்படும் உணவுக்காக பாடுபடுகிறார்கள். பஞ்சம் வந்தால், வாடுவார்கள் என்றார் ரெகோ.

விடுதி கட்டித் தயாரானதும் அங்கே 45 சிறுவர்கள் தங்கினர். தங்களது உணவை அவர்களே சமைத்தனர். பிறகு, நன்கொடையாளர்களை அணுகினர். நாங்கள் சமையலறை, டைனிங் ஹால் எல்லாம் அமைத்துத் தந்தோம். எனது வகுப்புத் தோழர் சூரிய சக்தி வசதிக்கு ஏற்பாடு செய்தார். அந்த சூரிய சக்தியால் ஒளிரும்



*ஐஜெராங் விடுதி முன் கர்னல் ரெகோவுடன் குழந்தைகள்.*

விளக்குகளில் அவர்கள் படிக்கிறார்கள். இவை தவிர, ஒருவர் அவர்களுக்கு கிட்டார் இசைக் கருவியையும் இன்னொருவர் கம்ப்யூட்டரும் அளித்தனர். இப்போது அந்த இடம் மகிழ்ச்சியாலும் இசையாலும் நிரம்பி வழிகிறது.

இச்செய்தி எல்லா இடத்திலும் பரவியது. சுய உதவிக் குழந்தைகளாக இருந்து விடுதியில் தங்கிப் படிப்பதில் மேலும் பலர் ஆர்வம் காட்டினர். அடுத்த ஆண்டு விடுதியில் தங்கும் சிறுவர்களின் எண்ணிக்கை 150 ஆக உயர்ந்தது என்றார் ரெகோ.

## குழந்தைக் கடல்

துரதிர்ஷ்டவசமாக மூன்றாவது ஆண்டு, 2016ம் ஆண்டு அங்குள்ள ஒரு கிராமத்தில் நிலநடுக்கம் தோன்றியதால் கிராமத்தினர் வேறு இடத்துக்குக் குடி பெயர நேர்ந்தது. அதனால், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 60 சிறுவர்கள் அந்த விடுதியில் தஞ்சம் புகுந்தனர். விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கை 247 ஆக அதிகரித்தது.

மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்ததைப் பள்ளி நிர்வாகம் ஆட்சேபித்தது. இப்படி மாணவர்கள் பலர் தங்கினால், இடமில்லாமல் போகும். அவர்களால் எங்கே நிம்மதியாகப் படிக்க முடியும்? என்று கேட்டனர். ஆனால், கிராமத்தினரோ அதை ஏற்கவில்லை. சிறுவர்கள் பள்ளிக்குச் சென்று படிக்காமல் போனால், ஆயுதம் ஏந்தி தீவிரவாதிகளாகும் அபாயம் உள்ளது என்று கூறினர். மேலும், கழிவறை, தண்ணீர் பிரச்சினை பற்றியெல்லாம் கவலைவேண்டாம். அங்கே தங்கிப் படித்தால் போதும் என்று கூறிவிட்டனர் என்று கர்னல் ரெகோ கூறினார்.

வழக்கமான விடுதியைப் போலே இந்த மலைப்பகுதி கிராமத்தில் கட்டித் தருவது இயலாது. 60 பேருக்கு ஒரு விடுதி கட்டலாம். ஆனால், மலைவாழ் பழங்குடியினருக்கு வசதி ஏது? ஒரே படுக்கை விரிப்பு, ஒரே போர்வை போதும் பலர் சமாளித்துக் கொள்வர். அதனால், 60 பேருக்குக் கட்டப்பட்ட விடுதியில் 150 பேர் வரையில் தங்குகிறார்கள். இதைச் சமாளிக்க மீண்டும் கையேந்தினேன். நண்பர்களின் உதவியோடு மூங்கில் பயன்படுத்தி, மேலும் சிறுவர்கள் தங்கிப் படிக்கும் வகையில் விடுதியை விரிவாக்கம் செய்தோம். இதைப் பார்த்த அசாம் ரைபிள் படைப் பிரிவு அனைத்து உதவிகளையும் செய்தது. அதுதான் உள்ளூர் மக்களுக்கு இந்திய ராணுவம் உதவுவதற்கு இதுதான் சிறந்த வழி என்பதைப் போல் இருந்தது என்றார்.

ஆனால், தண்ணீர் பற்றாக்குறை பெரிய பிரச்சினை ஆகிவிட்டது. அதைத் தீர்க்க ரவிசங்கர் கைகொடுத்தார். அங்கே, ரூ.6 லட்சம் செலவில் 75 ஆயிரம் லிட்டர் தண்ணீரைத் தேக்கி வைக்க குடிநீர்த் தொட்டியை அமைக்க அவர் உதவினார். அடுத்து, சிறுவர்களுக்கு இயற்கையான உணவுக்காக பக்கத்தில் உள்ள சிரிய நிலம் தேவைப்பட்டது. அதற்கு ரவிசங்கர், நான்கு லட்ச ரூபாய்க்கான காசோலையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்து உதவினார்.

## அவநம்பிக்கையைத் துடைத்தெறிந்து..

மணிப்பூரில் வேலைவாய்ப்பு மிகக் குறைவு. சிலர்தான் இந்தியாவின் இதர பகுதிகளில் ஏதாவது வேலையில் சேருகிறார்கள். அப்படி வேலைவாய்ப்பு கிடைக்காதவர்கள் தீவிரவாதிகளாகிவிடுகிறார்கள். அங்கே பணம் கிடைக்கிறது. ஏன், தீவிரவாத இயக்கத்தில் அந்தஸ்து கூட கிடைக்கிறது. வேறு சிலர் மியான்மர் எல்லைக்குச் சென்று போதைப் பொருள் கடத்தல், ஆள் கடத்தல் ஆகியவற்றில் ஈடுபடுகிறார்கள். குற்றச் செயல்களைச் செய்கிறார்கள். எல்லாவற்றுக்கும் வேலைவாய்ப்பு இல்லாமையும் வறுமையும்தான் காரணம். இந்தக் கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைக்க குழந்தைகளுக்கான கல்வி அவசியமாகிறது என்றார் ரெகோ.

வடகிழக்கு மாநிலப் பகுதிகளை இந்தியாவின் இதர பகுதி கவனத்தில் கொள்வதில்லை, அக்கறை காட்டுவதில்லை என்ற எண்ணத்தை




*பெங்களூரில் இன்ஃபோஸிஸ் நிறுவனத்தில் மணிப்பூர் சிறுவர்கள்.*

மாற்றுவதற்கு, இந்தக் குழந்தைகளுக்குக் கல்வி கிடைப்பதற்காக நாட்டின் இதர பகுதியினரின் உதவியை கர்னல் ரெகோ நாடினார். ஒரு குழந்தை படித்துவிட்டு வேலைக்குப் போனால், தான் சார்ந்த குடும்பத்தையே முன்னேற்றும் ஆற்றலைப் பெற்றுவிடுகிறது என்றார் ரெகோ.

கர்னல் ரெகோ மிஜோரமில் பணியாற்றி பிறகு மணிப்பூரில் பணியாற்றினார். அப்போது உள்ளூர் மக்களுடன் பழகிய பிறகுதான் அவர்களது கோபம், ஆத்திரம், வெறுப்பு ஆகியவற்றுக்கான காரணம் தெரியவந்தது. அதையடுத்து, அசாம் ரைபிள் படையின் உதவியோடு மணிப்பூரைச் சேர்ந்த 35 பள்ளி மாணவர்களை பெங்களூருக்கு அழைத்துச் சென்றார். அப்போதுதான் அவர்களுக்கு இந்தியாவின் மற்ற பகுதியைப் பற்றித் தெரியவந்தது. அது அவர்களுக்கு ஓர் அற்புதமான அனுபவமாக அமைந்தது. அவர்களை இன்ஃபோசிஸ் வளாகத்துக்கு அழைத்துச் சென்றோம். அவர்கள் குதிரை சவாரியை அனுபவிக்க ராணுவத்தினர் ஏற்பாடு செய்தனர்.

பயணம் முடிந்தபோது, அவர்களில் ஒரு மாணவி, "எங்களது மக்கள் ஏன் முட்டாள்களாக இருந்தார்கள் என்பது புரியவில்லை. பெங்களூரு நகரமும் இந்தியாதான். இந்த மலைகள், நதிகள், கடல் எல்லாமும் என்னுடையவை என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். நான் எங்கேயும் செல்லலாம், வசிக்கலாம். பிறகு ஏன் அந்த சின்ன இடத்தை எங்கள் மக்கள் விரும்புகிறார்களோ?" என்றாள். அப்பகுதியின் முந்தைய தலைமுறையினர் வன்முறை, பிரச் சினைகளைத்தான் பார்த்தனர். அடுத்த தலைமுறையுடன் இணைந்து செயல் படுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது என்றார் ரெகோ.

*ஒரு சிறுவன் படித்துவிட்டு, வேலைக்குப் போனால், அவனால் குடும்பத்தை வறுமையிலிருந்து மீட்க முடியும். 15 ஆண்டுகள் கழித்து, அதுதான் நிலைத்த தன்மையாகும் என்கிறார் அவர்.*


***கர்னல் கிரிஸ் ரெகோ***

## நிலைத்தன்மை

இந்தப் பள்ளியையும் மாணவர் விடுதியையும் எப்படி தொடர்ந்து பராமரிக்கப் போகிறீர்கள் என்று பலர் என்னைக் கேட்கிறார்கள்.

பரம ஏழைகள் வசிக்கும் இடத்தில் தொண்டு புரியும்போது, அவர்களிடம் கட்டாயமாக வசூலிப்பது என்ற பேச்சே இல்லை. சில சமயம் உறுதியாக இருக்கவேண்டும் என்று முயன்றதுண்டு. கட்டணம் செலுத்தாமல் அனுமதியில்லை என்று உத்தரவிட்டோம். அப்படிச் செய்தபோது, இரண்டு மூன்று சிறுவர்கள் படிப்பைக் கைவிட்டனர். அவர்களில் ஒரு சிறுவன் மெக்கானிக் வேலைக்குப் போய்விட்டான். இது எனக்கு உறுத்தலாக இருந்தது. இவர்கள் ஏழை விவசாயிகளின் குழந்தைகள் எனவே, அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் 80 சதவீதம் வரையில் உதவுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைப் புரிந்துகொண்டேன் என்று ரெகோ கூறினார்.

நிலைத்த தன்மை என்பதற்கு உண்மையில் வேறு அர்த்தம் என்று கூறிய அவர், ஒரு சிறுவன்



*அலியஸ்கர் ஜன்ஜாலி ஐஜெராங் பள்ளியில் குழந்தைகளுடன்.*

படித்துவிட்டு, வேலைக்குப் போனால், அவனால் குடும்பத்தை வறுமையிலிருந்து மீட்க முடியும். 15 ஆண்டுகள் கழித்து, அதுதான் நிலைத்த தன்மையாகும் என்கிறார் அவர்.

வடகிழக்கு மாநிலங்களில் உள்ள நலிந்த பிரிவினருக்கு கட்டடம், கம்ப்யூட்டர், பாய் படுகைகள் எனப் பல்வேறு வகையில் உதவ வேண்டிய அவசியம் உள்ளது என்று அவர் வலியுறுத்தினார். அத்துடன் அவர்கள் ரூ.250 கல்விக் கட்டணம் செலுத்துவதற்கும் சிரமப்படுபவர்கள்.

ரெகோவின் சில விடியோ காட்சிகளை அவரது ஃபேஸ் புக்கில் பார்த்த 35 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பார்த்துள்ளனர். விஜயலட்சுமி போடோர் என்பவர் உதவ முன் வந்துள்ளார். அப்படிப்பட்டவர்கள் ஆண்டுமுழுவதும் எங்களுடன் இருந்தால் போதும், இளைஞர்களும் எதிர்மறைச் சிந்தனைகளைத் தூக்கி எறிந்துவிடலாம்.

அந்த விடுதியில் படிக்கும் மாணவர்கள் தங்குவதுடன் அப்பகுதியினருக்கு மருத்துவ மையத்தை அமைத்தல், இயற்கை விவசாயப் பணி ஆகியவற்றுக்கும் வழியேற்படுத்தப்படும் எனறார்.

ரெகோவின் சன்பேர்ட் அறக்கட்டளைக்கு அரசும் இந்திய ராணுவும் உறுதுணையாகின்றன. நாங்கள் அரசியல், சமய இதர நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. இந்நிலையில், ரவிசங்கர் போன்றோர் தேவதை போன்றவர்கள் என்றார்.

## நம்பிக்கையை வளர்ப்போம்

சன்பேர்ட் டிரஸ்ட் மூன்றாண்டுகள் தீவிரமாக சேவையாற்றிய பிறகு இப்போது மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்துள்ளனர். அப்படி நம்பிக்கை பெறுவது எளிதல்ல. காரணம், அவர்கள் எப்போதும் துப்பாக்கிச் சத்தம், வன்முறை ஆகியவற்றைத்தான் பார்த்துவந்தனர். நாங்கள், “உங்களுக்கு உதவுதற்காகவும் உங்களுடன் இணைந்து பணியாற்றவும் வந்திருக்கிறோம். எங்களுக்கு வேறு நோக்கம் ஏதுமில்லை. தங்களது குழந்தைகள் படிக்கவும், தங்குவதற்கு விடுதி வசதியையும் அளித்து உதவுகிறார்கள் என்பதைப் பார்த்தபின் நெருங்கி வந்துவிட்டனர். குறிப்பாக மனித நேயத்துடன் பணியாற்றுவதைப் பார்த்த பிறகு நெருக்கம் அதிகரித்து விட்டது.



*பாரம்பரிய மூங்கில் நடனம் புரியும் மணிப்பூர் பெண்கள்.*

பாங்க் ஆப் அமெரிக்காவின் கீழ் இயங்கும் மெர்ரில் லின்ச் நிறுவனத்தின் துணைத் தலைவர் அலியாஸ்கர் ஜன்ஜாலி தனது கார்ப்பரேட் பணியைத் துறந்துவிட்டு ஐஜெராங் பள்ளிக்குத் தலைவராக பொறுப்பேற்றுள்ளார். பம்பாய் IITயில் M.Tech. முடித்து விட்டு, பிரிட்டனில் உள்ள கிளாஸ்கோ பல்லைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற சோனால் சேத்தியா ஏராளமான வேலைவாய்ப்புகளை உதறித் தள்ளி சிங்கட் பள்ளியின் தலைவராகியுள்ளார். பிட்ஸ் பிலானியில் பட்டம் பெற்ற அஸ்வதி கோரக்பூர் IITயில் முதுநிலைப் பொறியியல் படித்த பிபின் தானே ஆகியோர் அசாம் மஜுலியில் உள்ள பள்ளியை நடத்துகிறார்கள்.

கர்னல் ரெகோ 21 பேர் பட்டம் பெறுவதற்கு உதவியுள்ளார். அவர்களில் மூன்று பேர் டாக்டர்கள், ஒருவர் வழக்கறிஞர், MBA படித்தவர், ஹோட்டல் மேலாண்மை படித்தவர்.

இப்படிப் பட்டம் பெறும் ஒவ்வொரு வரும் நாங்கள் ஆற்றும் பணிக்குத் தூதுவராக இருக்கின்றனர். எங்களது பணி வாய்மொழியாகப் பரவி வருகிறது. இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியைச் சேர்ந்த யாரோ ஒருவர் உங்களது குழந்தைகளின் கல்விக்காக உதவுகிறார்கள் என்பதை இப்பகுதி மக்களுக்கு உணர்த்துகிறோம். கிராமத்தினர் மூலமாகவும், சுய உதவிக் குழுக்களின் துணையோடும் விடாமல் இப்பணிகளை ஆற்றி வருகிறோம். நாங்கள் ராணுவத்துக்குத் தகவல் கொடுக்கிறோமோ என்றும் அவர்களது நிலங்களையும் காட்டையும் அபகரித்துக் கொள்வோமோ என்றும் அவர்களிடையே இருக்கும் அச்சத்தையும் போக்குகிறோம். இந்தக் கிராமம் முழுவதும் எங்களுடன் இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் எங்களது சன்பேர்ட் அறக்கட்டளை விரிவடைந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு நூறு கிராமங்களில் 23 பகுதிகளைச் சேர்ந்த 2,300 குழந்தைகளுக்கு நாங்கள் உதவுகிறோம்.

ஆனால், எனது மனைவி மைர்னா, குழந்தைகள் ராகுல், ரேஹா ஆகியோரது ஆதரவு இல்லாமல் இது எதுவுமே நிறைவேறியிருக்காது. எங்களது குழந்தைகளுக்கு என் மனைவி மைர்னா பெங்களூரில் பாடம் நடத்தி வருகிறார் என்றார் ரெகோ.

ரவிசங்கர் பேசுகையில், பதற்றம் நிறைந்த இப்பகுதி மக்களின் நல்லெண்ணம், நம்பிக்கை ஆகியவற்றை சன்பேர்ட் அறக்கட்டளை பெற்றிருக்கிறது. வடகிழக்கு மாநிலங்களில் அமைதி, நிலைத் தன்மை, வளர்ச்சிக்காக இதனை இந்தியாவின் இதர பகுதிகளில் வசிக்கும் மக்களும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

படங்கள்: ரஷீதா பகத் மற்றும் ரயன் லோபோ (சன்பேர்ட் டிரஸ்ட்)

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary PEOPLE OF ACTION

# இலங்கை குழந்தைகளுக்கு ரோட்டரியின் இனிய பரிசு!

ரோட்டரி செய்திக்குழு

இலங்கையில் உள்ள அந்த மருத்துவமனை அங்குள்ள 60 லட்சம் பேருக்குச் சேவை புரிந்து வருகிறது. 600 தாய்மார்களின் உடல் நலனைப் பார்த்துக் கொள்கிறது. தினமும் 40 முதல் 70 குழந்தைகள் பிறக்கின்றன.

2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் தேதி ஏற்பட்ட சுனாமியில் பல கட்டடங்கள் சேதமடைந்தன. அவற்றில் காலே பகுதியில் உள்ள மஹாமோதரா மகப்பேற்று மருத்துவமனையும் (Mahamodara Maternity Hospital) ஆழிப் பேரலையில் அழிந்துவிட்டது. பாதிக்கப்பட்ட அப்பகுதியில் கொழும்பு ரோட்டரி சங்கம் தனது தொண்டினை விரிவு செய்துள்ளது.

1940ம் ஆண்டு முதல் இயங்கி வந்த அந்த மருத்துவமனை இப்போது பயன்பாட்டுக்கே இல்லாமல் ஆகிவிட்டது. தெற்கு இலங்கையில் பெண்களின் பிரச வத்துக்குச் சரியான மருத்துவமனை இல்லை. இதர மருத்துவமனைகள் அனைத்திலும் காயமடைந்தவர்களால் நிரம்பியிருந்தது. தாய்சேய் நலம் இரண்டாம் பட்சமாகிவிட்டது. ரோட்டரி சங்கம் வரும் வரையில் அதைப் பற்றி யாரும் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

கொழும்பு ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த PRIP K R ரவீந்திரன், PDG கெர்ஸ்டின் தோவார்ட்டு டன் (Kerstin Thowart) தொடர்பு கொண்டார். ஜெர்மனியைச் சேர்ந்த தோவார்ட் விடுமுறையைக் கழிக்க இலங்கை வந்திருந்தார். அவர் மூலமாக ஜெர்மனியில் உள்ள 200 ரோட்டரி சங்கங்கள், 13 மாவட்ட ரோட்டரிகளுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. அதையடுத்து ஜெர்மனியைச் சேர்ந்த 6000 ரோட்டரியினர் மொத்தம் 15 லட்சம் ஐரோப்பிய யூரோ பிரசவ கிளினிக் கட்டுவதற்காக வழங்கி உதவினர். இத்திட்டம் ஆறு நாடுகளில் ஆயிரக் கணக்கான ரோட்டரியினரிடம் பரவியுள்ளது. இதில் தி ஹெல்மட் கோல் ஃபவுண்டேஷன் (The Helmut Kohl Foundation), TRF ஆகிய நிறுவனங்களும் ஈடுபட்டு, இலங்கையில் ரோட்டரி சங்கத்தின் நல்ல பணிக்காக கட்டடம் கட்டி உதவ முன்வந்தன.

சுனாமி தாக்கி 15 ஆண்டுகளாகி விட்டன. மருத்துவமனையில் ரோட்டரியின் சமூக சேவை ஆர்வம் ஈடுபாடு தடைப்படாமல் தொடர்கிறது என்று கொழும்பு ரோட்டரி உறுப்பினர் சேனக அமரசிங்க கூறினார். இவர்



PRID மற்றும் (RID 3220) முன்னாள் மாவட்ட ஆளுநராகவும் (PDG) இருந்தவர்.

இன்று காலேயில் அந்த பிரசவ மருத்துவமனை ரோட்டரியின் 2.5 கோடி இலங்கை ரூபாயில் 20 கட்டடங்களுடன் இயங்கி வருகிறது. 27 பிரசவ வார்டுகள், 8 அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், சிசுக்களைப் பராமரிக்க 9 படுக்கைகள் என மருத்துவமனை இயங்கி வருகிறது. ரோட்டரி நிதியுடன் ஜெர்மனி தனியார் நிறுவனத்திடமிருந்து 12.88 கோடி இலங்கை ரூபாய் கிடைத்துள்ளது. TRFலிருந்து இலங்கைக்கு ரூ.12 கோடி உதவி கிடைத்துள்ளது.

ஜெர்மனி கொடையாளர்கள் நிதியுதவியுடன் நிறுத்திவிடவில்லை. அந்த மருத்துவமனைக்கு டாக்டர்கள், நர்சுகளைக் குழுவை நான்கு முறை அனுப்பி, காலே மருத்துவமனையில் உள்ளவர்களுக்கு நவீன உபகரணங்கள் குறித்தும், இதர திறன்கள் குறித்தும் பயிற்சி அளித்துள்ளனர். அதைப்போல் ஜெர்மனிக்கும் இலங்கை டாக்டர்கள், பணியாளர்கள் அழைத்துச் செல்லப் பட்டு மகப்பேறு நலம், குழந்தை நலம் சார்ந்த பயிற்சியளித்துள்ளனர்.



பிறந்த சிசுக்களின் செயற்கை சுவாசக்கருவிகள் (Neo Natal Ventilators) சிசு அடைகாப்புக் கருவி (Infant Incubators) உள்ளிட்ட பல கருவிகள் காலே மருத்துவமனைக்கு கடந்த பிப்ரவரி 12ம் தேதி அளிக்கப் பட்டுள்ளன. நிகழ்ச்சியில் இலங்கை சுகாதார அமைச்சகத்தின் அலுவலர்கள், கொழும்பு ரோட்டரியினர், ரோட்டரி முன்னாள் மாவட்ட ஆளுநர் கெர்ஸ்டின் தோவார்ட் ஆகியோர் இருந்தனர்.

ரோட்டரி சங்கத்தாலும் ஜெர்மனி உள்ளிட்ட உலக ரோட்டரி அமைப்புகளின் உதவியாலும் இலங்கையின் தென்பகுதியில் உள்ள ஏராளமான குழந்தைகள் உயிர் வாழ்கிறார்கள்.■



*Rtn புபூடு டி சோய்சா, கொழும்பு ரோட்டரி சங்கத் தலைவர் குமுடு வர்ணகுலசூர்யா, PDG சேனக அமரசங்க, Rtn மொஹமத் அலி மற்றும் PDG கெர்ஸ்டின் தோவார்ட், இலங்கை சுகாதார அதிகாரிகளுடன்.*

# முகலாய சக்கரவர்த்தி ஜஹாங்கீர்: ஒரு புதிய பரிமாணம்

ராபின் குப்தா

பார்வதி சர்மா சமீபத்தில் வெளியிட்ட ஜஹாங்கீரின் வாழ்க்கைச் சித்திரம் ஒரு செவ் விலக்கிய அந்தஸ்தைப் பெற்றது, ஜஹாங்கீர் மீது இருக்கும் பிம்பத்தை இவர் முற்றிலுமாக மறுக்கிறார், ஜஹாங்கீர் ஒரு பலவீனமான மனிதன், கலை மீது காதல் கொண்ட சிறந்த குடிகாரன், ஒரு வலிமைவாய்ந்த மனைவியால் கட்டுப்படுத்தப்பட்டவர் போன்றவாறு வரலாற்றில் ஜஹாங்கீர் குறிப்பிடப்படுகிறார், ஆனால் உண்மையைச் சொல்லப் போனால் தன் ஆரவாரமான வாழ்நாள் முழுவதிலும் மிகச்சி றந்த இலக்கையும் வலிமையையும் கொண்டவர் என்று இந்த புத்தகத்தில் விவரிக்கப்படுகிறார். பட்டத்து இளவரசர் பதவிக்கு போட்டி வந்தபோது, அரசர் அக்பரின் முன்னிலையிலேயே ஒரு போட்டி அரசவையை அமைத்தார். உண்மையிலே வெல்லவே முடியாத மேவார் ராணாக்களின் இராஜ விசுவாசத்தை அடிபணிய வைத்து வெற்றிபெற்ற முதல் முகலாய அரசர் ஜஹாங்கீர் தான், அக்பர் கூட செய்யாத ஒரு வீரதீர செயல் இது.

நான்காவது முகலாயச் சக்கரவர்த்தியான ஜஹாங்கீர் பெரும்பாலான விஷயங்களில் முகலாய சாம்ராஜ்ஜியத்திற்கு மையப்புள்ளியாக விளங்கினார், இது போன்ற ஒரு காலம் இதுவரையும் இல்லை இனிமேலும் வரப்போவதில்லை என்று இதைப்பற்றி சொல்வார்கள். அனைத்தும் ஆடம்பரமாகவும் பிரம்மாண்டமாகவும் கட்டுப்பாடு இல்லாமலும் இருந்தது. கட்டடக் கலையின் ஜொலிப்பிலிருந்து அதன் கலை இசையின் மேன்மை வரை; இதுவரை இல்லாத அளவுக்கு ஒழுக்கநெறி மற்றும் கொடுமையிலிருந்து முன்னெப்போதும் இல்லாத அளவு மதிநுட்பமும் சகிப்புத்தன்மை வரையும்; செழிப்பிலிருந்து சீரழிவு கொண்டுசென்றது போன்றவற்றை கணக்கில் கொண்டால், உலக வரலாற்றில் ரோம் பேரரசும் முகலாயப் பேரரசும் ஒன்றை யொன்று சளைத்ததில்லை.

முகலாயர்களைப் பெருமையாகப் பேசுவதற்கு முக்கிய காரணமே ஜஹாங்கீர் தான் என்று இதுவரை யாரும் காணாத கோணத்தில் வெளிப்படுத்தியிருப்பது எழுத் தாளரின் புத்திகூர்மையைக் காட்டு கிறது. ஜஹாங்கீர் ஒரு மதி நுட்பம் கொண்ட அரசர், மனசாட்சிக்கு கட்டுப்பட்ட ஒரு நிர்வாகி, சமூக அமைப்புகளையும் தான் ஆட்சி செய்யும் இடத்தில் தன்னைச் சுற்றி நிகழும் சமூக மாற்றங்களையும் கூர்ந்து கவனிப்பவர், இயற்கையை ஒரு குழந்தையின் பேரார்வத்துடன் அணுகி இரசித்த ஒரு மனிதர், என்று வெளிப்படுத்துகிறார் சர்மா. வரலாற்றில் மாபெரும் அரசர் களில் ஒருவராகத் திகழ்ந்தவரை குறைவாக மதிப்பிட்ட வரலாற்றுப் பிழையை சர்மா எழுதிய ஜஹாங்கீரின் வாழ்க்கைச் சித்திரம் புத்தகம் திருத்துகிறது.

அழகுணர்ச்சியைத் தவிர்த்து, பேரரசர் ஜஹாங்கீரின் ஆட்சி காலத்தில் பேரரசின் ஆண்டு வருமானம் பார்வதி சர்மாவைப் பொறுத்து 56 மில்லியன் பவுண்ட் ஸ்டெர்லிங் என்று சொல்லி திணற டிக்கிறார். அதே காலக்கட்டத்தில் ஆங்கிலேய அரியாசனத்தில் இருந்தவரின் வருமானத்துடன் ஒப்பிடுகையில், ஆங்கிலேய கருவூலத் திலிருந்து அரை மில்லியன் பவுண்ட் ஸ்டெர்லிங் தான் கிடைத்தது. முகலாய சாம்ராஜ்ஜி யத்தின் வருமானம், நிலையான இந்தியாவின் வளம் மற்றும் நேர்த்தியான ஆட்சிமுறையை எடுத்துக்காட்டுகிறது. அனைவருக் கும் தெரிந்த மதுவுக்கு அடிமை யானது பண்பட்ட அழகுணர்ச்சி யைத் தவிர்த்து, சமயச் சார்ப்பற்ற ஒரு ஆளுமையாக ஜஹாங்கீர் விளங்கினார்.



ஜஹாங்கீர் இயற்கையின் அழகிலிருந்து ஆழ்ந்த அமைதியை பெற்றுக்கொண்டார். மலர்ந்த அரளிப்பூக்கள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கு வழியாகப் பயணிக்கையில், அனைத்து அரளிப்பூக்களையும் கொண்டு தங்களின் தலைப்பாகையை அலங்கரிக்குமாறு அனைவருக்கும் உத்தரவிட்டார். தங்கள் தலைப் பாகையை அலங்கரிக்காதவர்களின் தலைப்பாகை பறிக்கப்படும். மற்றொரு இயல்பிற்கு புறம்பான மனநிலையில், ஒரு கையில் ஒரு டஜன் குட்டி மீன்களைப் பிடித்து, அவற்றின் மூக்குகளில் முத்துக்களை வைத்து மறுபடியும் தண்ணீரிலேயே விட்டுவிட்டார்.

சர்மாவின் புத்தகத்தில், ஒழுக்கநெறி மதுப்பழக்கம் போன்றவற்றிலிருந்து ஜஹாங்கீர் மீண்டு வந்தது தவிர, முகலாய பேரரசின் மேம்பட்ட அழகியலைப் பற்றி கருத்துக்களையும் வழங்கி யுள்ளார்: அது, ஷேக் சலீம் சிஷ்தி, மரணத் தருவாயில் உள்ளபோது, பேரரசர் அக்பரிடம் சொல்லி மியான் தன்செனை அழைத்து வந்து தர்பாரி ராகத்தைப் பாட சொன்னார், ஏனென்றால் சொர்க்கத்தில் கூட இந்த அழகான குரலை கேட்கப் போவதில்லை என்று கவலைப்பட்டதாக ஆசிரியர் நம்மிடம் கூறுகிறார். ■

# தெற்காசிய ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்தின் செய்தி

### TRF நிதி அளிப்பதில் முதல் 5 மாநிலங்கள் 31-1-19 வரை:

| Zone | District | Total Contribution in US $ |
|---|---|---|
| 5 | 3190 | 1,527,296 |
| 4 | 3141 | 1,205,412 |
| 5 | 3131 | 452,401 |
| 4 | 3150 | 435,441 |
| 4 | 3012 | 327,241 |

### மானிய அறிக்கை காலவரம்பு

நிலவையுலுள்ள அனைத்து மானியத் திட்டங்களுக்கும் மார்ச் 31, 2019 வரையிலான செயல்பாடுகளுக்குரிய இடைக்கால அறிக்கைகளை மே 31, 2019 தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும், அதன் பிறகு மானிய அறிக்கைக்கான காலவரம்பு கடந்துவிடும். மேலும், மார்ச் 31, 2018 தேதியுடன் முடியும் காலகட்டத்துக்கான பல மானியத் திட்டங்களுக்கு இன்னும் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்று எமது பதிவுகள் காட்டுகின்றன. அத்தகு சங்கங்கள்/மாவட்டங்கள் அவர்களின் சர்வதேசக் கூட்டாளர்களிடமிருந்தும் புதிய மானிய விண்ணப்பங்களை அறக்கட்டளை ஏற்றுக்கொள்ளாது.

**Supporting documents to be submitted in originals to the Foundation along with online report submission:**

| Reporting Documentation | Interim Report | Final Report |
|---|---|---|
| Submit report online | Yes | Yes |
| Upload bills/invoices/receipts | NA | Yes |
| Upload Undertaking | NA | Yes |
| Upload beneficiary information | NA | Yes |
| Original hard copies required of following documents | | |
| Original Utilisation Certificate & Receipts/payment statement | Yes | Yes |
| Bank Statement in original/certified true copy | Yes | Yes |
| Refund, if any | NA | Yes |

### CSR நிதியளித்த உலகளாவிய மானியத் திட்டங்கள்

TRF (இந்தியா) தற்போது 36 CSR நிதியளித்த உலகளாவிய மானியத் திட்டங்களை நடத்துகிறது, மற்றும் நான்கு மானியத் திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட பெருவணிக நிறுவனத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஏற்கனவே மூடப்பட்டுவிட்டது.

### புதுப்பிக்கப்பட்ட முக்கிய அன்பளிப்பு வழிகாட்டல்கள்:

உத்தரவின் பேரிலான அன்பளிப்பை அல்லது பெயரிட்ட அறக்கட்டளை நிதியை நிறுவுவதற்கான செயல்முறை பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது:

- நன்கொடையாளர்/ அன்பளிப்புக் கோருபவர் அன்பளிப்புத் தகவல்களை (கீழ்க்கண்ட அட்டவணையில் விளக்கப்பட்ட படி) பகிர்ந்துகொள்ள வேண்டும், இது அன்பளிப்பு ஒப்பந்தத்தைத் தயாரிக்க எமது அன்பளிப்பு நிர்வாகக் குழுவுக்கு உதவும்.

| Directed Gifts | Named Endowment Gifts |
|---|---|
| **Fund Name, Donor Name, Membership ID, Amount, Area of Focus, District** | **Fund Name, Donor Name, Membership ID, Amount, Gift Designation/Type, District** |

- நன்கொடையாளர் கையொப்பமிட்ட அன்பளிப்பு ஒப்பந்தத்தை பெரிய அன்பளிப்புகளின் பிராச ஸிங்கிற்கான முன்மொழியப்பட்ட நன்கொடையுடன் சேர்த்து எமது அலுவலக முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
- கையொப்பமிட்ட இறுதி அன்பளிப்பு ஒப்பந்தம், அன்பளிப்பு ID-யுடன் சேர்த்து நன்கொடையாளர்/ அன்பளிப்புக் கோருபவரின் பதிவுகளுக்காக அவர்களுக்கு வழங்கப்படும்.

இந்த முழு செயல்முறையும் பூர்த்தியாவதற்கு 10-12 பணி நாட்கள் எடுக்கும், மேலும் உத்தரவின் பேரிலான அன்பளிப்பு ID எங்கள் சிஸ்டத்தில் தோன்றுவதற்கு மேலும் ஐந்து பணி நாட்கள் எடுக்கும். உங்களிடம் ஓர் உலகளாவிய மானியத் திட்ட விண்ணப்பம் காத்திருப்பில் உள்ளது என்றால், தயவுசெய்து முன்கூட்டியே உத்தரவின் பேரிலான அன்பளிப்புச் செயல்முறையை துவக்கிவிடவும்.

### ஜனவரி 2019 சங்க இன்வாய்ஸ்

இந்தியாவில் உள்ள சங்கங்கள் அவர்களின் ஜனவரி இன்வாய்ஸில் கூறப்பட்டது போல் "வங்கி/மின்னணுப் பணமாற்றம்" மூலம் இணையவழி கட்டணம் செலுத்தலாம்; முந்தைய இன்வாய்ஸில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் இப்போது பொருந்தாது, எனவே கட்டணம் சென்றடையாமல் போக வாய்ப்புள்ளது.

### ரோட்டரி ஃபவுன்டேஷனுக்கு (இந்தியா) நன்கொடை

வருமான வரிச் சட்டத்தின் கீழ் ரோட்டரி ஃபவுன்டேஷனுக்கு (இந்தியா) கொடையளிக்கும் நன்கொடையாளர்கள் அனைவரும் தங்கள் நன்கொடைப் படிவத்தில்/கடிதத்தில் தங்களுடைய நிரந்தரக் கணக்கு எண்ணை தெரிவிப்பது அல்லது PAN அட்டையின் ஸ்கேன்-செய்யப்பட்ட பிரதியை எங்களுக்கு அனுப்புவது அவசியம்.

### விருதுகள்

விருதுகள் பற்றியும், இதை யாரெல்லாம் பரிந்துரைக்கலாம் என்பது பற்றியும் மேலும் அறிந்துகொள்ள, இந்த வலைத்தளத்தை பாருங்கள்: *https://my.rotary.org/en/learning-reference/learn-topic/awards*

### வீடியோ

நாம் யார், நமது இலட்சியப் பணிகள், 2019 இன்டர்நேஷனல் அசெம்பிளி சொற்பொழிவுகள் போன்ற பல்வேறு தலைப்புகளில் ரோட்டரி வீடியோக்களை *http://video.rotary.org/* மற்றும் *https://vimeo.com/rotary* வலைத்தளங்களில் பார்க்கலாம்.■



# கதகளி - கதை சொல்லும் நாட்டியம்!

*கதகளி என்பது இந்தியாவின் வளமான பாரம்பரிய நாட்டியக் கலை. பண்பாட்டின் வரிசையில் அதற்குத் தனி இடம் உண்டு. கலைஞர்கள் தங்களது உடல் அசைவுகளின் மூலம் நாடகம் கலந்து கதையை அழகாகச் சொல்லும் உன்னதமான கலை என்று புகழ்மிக்க மலையாளக் கவிஞர் ஐயப்ப பணிக்கர் வருணிக்கிறார்.*



இந்தியப் பாரம்பரியத்தின் அனைத்து நாட்டிய முறைகளிலும் ஏதாவது ஒரு கதையை அழகுபடக் கூறுவதற்கு எண்ணற்ற வழிமுறைகளைக் கையாள்வது அவற்றின் உள்ளே அமைந்துள்ள இயற்கையான அழகாகும். எல்லாமே நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள இலக்கணத்தின்படி வகுக்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு நாட்டிய பாணியிலும் தனக்கென்று தனிப் பண்புகள் அமைந்திருக்கும்.

கதகளி நாட்டியத்தில் பொதுவான அலங்காரத்தை விடக் கூடுதலான அலங்காரம், ஜோடனை, மிகையான ஒப்பனை ஆகியவை இன்னும் மேன்மையை அதிகரிக்கும். கதகளி கேரளத்தில் பிறந்த நாட்டிய வகை. இதர சாஸ்திரீய நாட்டிய வகைகளைப் போல் அல்லாமல் ஆலயங்களில் மட்டும் நிகழ்த்தப்படாமல் வெளியே மேடைகளில் நிகழ்த்தப்பட்டு வருகிறது. ஆண்கள் மட்டுமே இந்த நாட்டியத்தை நிகழ்த்திவந்தனர். பண்டைய தென்னிந்திய போர்க்கலை, தடகள ஆட்டத்தின் கூறுகள் இடம்பெற்றிருக்கும். அழகான இசை, நாட்டியம், நாடகம், இலக்கியம் ஆகியவை கலந்திருக்கும். இதற்கான ஒப்பனை வித்தியாசமானது, விரிவான ஆடை அணிகலன் ஆகிய அலங்காரத்துடன் கூடியது. வண்ணமயமான முக ஒப்பனைகள் இதில் முக்கிய இடம் வகிக்கும்.



கதகளி என்ற சொல்லைப் பிரித்தால், கதை மற்றும் நாட்டியம் என்ற பொருளைத் தரும். கதகளி முழுமையான நாட்டியக் கலையாக உருவானது 17ம் நூற்றாண்டில். ஆனால், இதன் தோற்றம் கி.பி. 1ம் நூற்றாண்டில் நிகழ்த்தப்பட்டு வந்த கூடியாட்டம் அல்லது கூத்தியாட்டம் என ஆய்வுகள் கூறுகின்றன. சங்க காலத்தின் பண்டைய கூத்து நாட்டியத்தின் கூறுகளையும் பழைய வடமொழி நாடகங்களின் கூறுகளையும் உள்ளடக்கியது. மானுடப் பாரம்பரியம் கண்டும் உணர்ந்தும் போற்றும் பாரம்பரியத்தின் தலை சிறந்த படைப்பு (Masterpiece of the Oral and intangible Heritage of Humanity) என்று யுனெஸ்கோ (UNESCO) அதிகாரபூர்வமாக அங்கீரித்துள்ளது.

மேலைநாட்டு இசையும் நாடகமும் கலந்த நாட்டிய வகையான ஒபரா வகை நாட்டியத்துக்கு இணையானது கதகளி நாட்டியம். அதில் இரவு தொடங்கி அதிகாலை வரையில் புராணம், இலக்கியம், இதிகாசக் கதையை நிகழ்த்துவதாகும். இடையிடையே பார்ப்போருக்கும் கலைஞர்களுக்கும் களைப்பு தீர சுவையான காட்சிகளும் இடம் பெற்றிருக்கும். ஒரு காலத்தில் பல இரவுகள் இந்தக் கதகளி நாட்டிய நாடக நிகழ்ச்சி நடைபெறும். அண்மைக் காலத்தில் சுருங்கி, ஒரே இரவில் தொடங்கி முடிந்துவிடும். பொதுவாக ராமாயணம், மகாபாரதம், பாகவத புராணம் ஆகியவற்றிலிருந்து கதைகள் எடுத்து நாட்டியம் வடிவமைக்கப்படும். இதற்கு ஆட்டகதா (Attakatha) என்று பெயர். இந்த ஆட்டகதா சம்ஸ்கிருதமயமான மலையாளத்தில் எழுதப்பட்டது. அதை நிகழ்த்தும் போது, நாடக பாவமும் வசனமும் தெளிவாகப் புரிந்துவிடும். பொதுவாக கதகளி நாட்டியம் ஆலயத்தின் வெளியே திறந்த வெளியில்தான் நிகழ்த்தப்படும். பிறகு நிலை மாறி ஆலயத்திற்குள் இதற்கென கூத்தம்பலம் (Kuttampalam) என்று தனி அரங்கம் அமைக்கப்பட்டு, நிகழ்த்தப்படுவது தொடங்கியது. அரங்கில் எந்த அலங்காரமோ நாடக செட்களோ போடப்பட்டிருக்காது. ஒரே ஒரு கலை விளக்கு (Kalivilakku) மட்டும் ஒளிவீசிக் கொண்டிருக்கும். மின்சாரம் இல்லாத காலத்தில் அந்த விளக்கு இரவு முழுவதும் எரியும். இப்போதும், நாட்டியக் கலைஞர்களின் முகபாவத்தை மிக அழகாக வெளிப்படுத்துவது இந்த விளக்குதான்!

கதகளி நாட்டியத்தின் அடையாளம் ஆகார்யா (Aharya) எனப்படும் விரிவான முக ஒப்பனை, உடையலங்காரம், தலையலங்காரம் ஆகியவை கொண்ட வடிவமைப்பாகும். முகத்தை பிரம்மாண்டமாகக் காட்டுவதற்கான வண்ணப் பூச்சு ஆகிய ஒப்பனைகளுக்கு நான்கு மணி நேரம் ஆகும். நாடகம் முடிந்து அவற்றைக் கலைப்பதற்கே இரண்டு மணி நேரம் ஆகும். இந்த ஒப்பனையை மேற்கொள்ளும் கலைஞருக்கு சௌத்திக்காரன் (Chouttikkaran) என்றுபெயர். பயிற்சி அளிப்பதிலும், கலை நிகழ்த்துவதிலும்

இவர்தான் மிக முக்கியமானவர். நாடகம் தொடங்குவதற்கு முன் கலைஞர் தரையில் படுத்திருப்பார். அவர் முகத்தில் ஒப்பனை, வண்ணப்பூச்சு ஆகியவை போடப்படும். அவ்வாறு ஒப்பனை செய்வதற்கும் சில இலக்கணங்கள் உள்ளன. ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் ஏற்ப ஒப்பனை அமையும். அதனால், பார்வையாளர்கள் நடிகர்கள் அணியும் ஒப்பனையை வைத்தே அவரது கதாபாத்திரத்தைப் புரிந்து கொண்டு ரசிப்பர். தேவர், அசுரன், துறவி, மகான், பக்தன், விலங்கு என கதா பாத்திரத்தைப் புரிந்து கொள்ளலாம். அது மட்டுமின்றி, சில வண்ணங்களுக்கும் உணர்வு களுக்கும் கூட தொடர்பு உண்டு. பல்வேறு குணங்களுக்கு ஏற்ப வண்ணம் உண்டு. இளம் பச்சை நிறம் சிருங்காரம், காதல் ரசத்தைக் காட்டும். சிவப்பு கோபத்தை வெளிப்படுத்தும். மஞ்சள் வியப்பைக் குறிக்கும். கதகளியில் நடிகரின் கதாபாத்திரத்தைக் காட்ட இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட வண்ணம் பயன்படுத்தப்படும்.

கதகளியில் பிரதான வண்ணங்களைக் கொண்டு ஏழு வகையான ஒப்பனை வகைகள் கையாளப்படுகின்றன. இந்த வண்ணங்கள் அரிசி மாவு, காய்கறிச் சாறுகள் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. ராமர், விஷ்ணு, கிருஷ்ண பரமாத்மா, சிவன், அர்ஜுனன் போன்ற கடவுள்

வேடம் பூண்டோர் பவழ வண்ண உதட்டுச் சாயமும் உடலில் பச்சை வண்ணமும் பூசியிருப்பர். அதைப் போல் முகத்தைப் பிரம்மாண்டமாகக் காட்டுவதற்காக தாடையில் தடித்த காகிதம் ஒட்டப்பட்டிருக்கும். ராவணன், ஹிரண்யகசிபு, துச்சாதனன், துரியோதனன் போன்ற தீய கதாபாத்திரங்களைச் சித்திரிக்க சிவப்புச் சாயம் பயன்படுத்தப்படும். வேடர்கள், காட்டுவாசிகள் போன்ற இடைநிலை பாத்திரங்களுக்கு கறுப்பு வண்ணம் பூசுவார்கள். பேய்கள் மற்றும் துரோகிகள் போன்ற கதாபாத்திரங்களுக்கு கறுப்பும் சிவப்பும் கலந்த வண்ணமும் பூசப்படும். சில பாத்திரங்களின் மீசை அரிவாள் போல் வளைந்திருக்கும். சிலரது மூக்கில் வெள்ளை நிற குமிழ் போன்ற பொருள் பொருத்தப்பட்டிருக்கும். இவையெல்லாம் வித்தியாசமான அமானுஷ்யர்களைக் காட்டும். இந்த ஒப்பனை கதி (Kathi) என அழைக்கப்படுகிறது. அரக்கர்கள், ராட்சதர்களாகத் தோன்றுவோருக்கு வாயைத் துருத்திக் கொண்டு கோரைப் பற்கள் வெளியே பொருத்தப்பட்டிருக்கும். துறவியர், மதத் தலைவர்கள், பெண்கள், எளியவர்களைக் காட்டுவதற்கு மஞ்சள் ஆடை அணிவிக்கப்படும். அதைப் போல் மிதமான மஞ்சள், காவி, ஆரஞ்சு நிறம் நல்லொழுக்கம் மிக்கவர்கள், சீதை, துரோபதை, மோகினி போன்ற உயர்ந்த பெண்களைச் சித்திரிக்கும். பெண் வேடத்தில் வரும் ஆண்களுக்குத் தலையில் செயற்கையாகக் கொண்டை அமைக்கப்படும். வில்லன், எதிர்மறை பாத்திரங்கள், பேய்கள் போன்றவற்றுக்கும் சில விசேஷ கதாபாத்திரங்களுக்கும் தாடி அமைக்கப்படும். சிவப்புத் தாடி தீயவர்களுக்கு, வெள்ளைத் தாடி ஹனுமான் போன்ற மகான்கள், துறவியருக்கு, கறுப்புத் தாடி இதர சிறப்பானவர்கள்.

ராமாயணத்தில் வரும் ஜடாயு, கருடன் போன்றவற்றுக்கென தனி அமைப்பு உண்டு. அந்தந்த கதாபாத்திரங்களுக்கு ஏற்ப முகப் பூச்சு, தலைப்பாகை ஆகியவை அமைக்கப்படும். இப்படி ஒப்பனைகள், அலங்காரங்கள் நடிகர்களைக் கதா பாத்திரங்களாகவே மாற்றிவிடும்.

கதகளி கலை குருகுல வழிக் கல்வி முறையில் காலம் காலமாகத் தொடர்ந்து வருகிறது. பல நூற்றாண்டுகளாக தலைமுறைகளைக் கடந்து வந்தது. ஆனால், 20ம் நூற்றாண்டில் அழிவின் விளிம்பில் இருந்தபோது, மலையாளக் கவிஞர் வள்ளத்தோள் நாராயண மேனனும் முகுந்த ராஜாவும் அதற்குப் புத்துயிர் அளிக்க கேரள கலா மண்டலத்தை 1927ம் ஆண்டில் நிறுவினர். அதற்கு கொச்சி மாமன்னர் 1933ம் ஆண்டு நிலத்தை ஒதுக்கினார். சேறுதுருத்தி கிராமத்தில் இதற்காக ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டது. கேரள அரசின் கலாசாரத் துறையின் நிதியுதவியில் உயர் கலை நிறுவனமாக அது இயங்கத் தொடங்கியது. 2007ம்



ஆண்டு அதற்கு கலை பண்பாட்டு நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்ற நிலைக்கு கேரள அரசால் உயர்த்தப்பட்டது. கலா மண்டலத்தில் புகழ்பெற்ற கதகளி நாட்டியக் கலைஞர்களான ராமன்குட்டி நாயர், கிருஷ்ணபிரசாத், வாசு பிஷாரோடி, கேசவன் நம்பூத்ரி, கவுங்கல் சத்துண்ணி பணிக்கர் ஆகியோர் பயின்றுள்ளனர்.

பரம்பரை பரம்பரையாக கதகளி நாட்டியத்தை ஆண்களே நடத்திவந்தனர். அதற்கு ஸ்திரீ வேஷம் என்று பெயர். பெண்கள் வேடத்தையும் ஆண்களே ஏற்று நடத்தினர். எனினும் அது மிகச் சிரமமாக இருந்தது. உடல்மொழி, உடல் கட்டமைப்பு ஆகியவற்றுக்கு ஆண்கள் கடும் பயிற்சி எடுக்க வேண்டியிருந்தது. கதகளியில் பெண்கள் ஈடுபடுவது மரபை மீறும் செயலாகவே பல ஆண்டுகள் இருந்தது. திருப்பூணித் துறையைச் சேர்ந்த கார்த்யாயினி என்பவர்தான் கதகளி நிகழ்த்திய முதல் பெண் என்று அறியப்படுகிறது. அவர் கதகளியை நிகழ்த்தியதை அடுத்து, அந்த ஊரில் தற்போது அனைத்து பெண்களுக்கான கதகளி குழு இயங்கி வருகிறது.


அதையடுத்து மிருணாளினி சாராபாய் கதகளி நாட்டியத்தை இந்தியாவிலும் உலகின் பல நாடுகளிலும் பிரபலப்படுத்தினார். அவர் குரு தகழி குஞ்சு குருப்பின் சீடர் ஆவார். மிருணாளினி அகமதாபாத் நகரில் 1949ம் ஆண்டு தர்ப்பணா நிகழ்கலை அகாதமியை நிறுவி ஏராளமானோருக்கு கதகளி நாட்டியத்தைக் கற்பித்து வந்தார். டாக்டர் கனக் ரீலே தனது 7 வயதில் குரு பாஞ்சாலி பணிக்கரிடம் கதகளி கற்றார்.

அதே சமயம் பெண்களுக்கு இது கடினம் என்றும் கூறுகிறார்கள். கதகளி நாட்டியக் கலைஞர் சசி கலா, கதகளியை நிகழ்த்துவதற்குப் பெண்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எங்களது குடும்பம் ஆசாரமானது. நான் இந்த நாட்டியம் கற்பதை எனது தாத்தா பாட்டி விரும்பவேயில்லை. என் தந்தை மட்டுமே ஆதரித்தார். அவர்தான் மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று கூறி எனக்கு ஊக்கமளித்தார். கடுமையாக உழைத்தேன் என்றார் சசிகலா.



கதகளி நம் பாரம்பரியத்தில் ஊறி விட்டது. ஆனால், சில நாட்டியக் கலைஞர்கள் சோதனை முறையில் பிற நாட்டுக் கதைகளைப் புகுத்தி புதுமை செய்ய முயல்கிறார்கள். சதானம் பாலகிருஷ்ணன் கிரேக்க படைப்பாளியான யூரிபிடெஸ் (Euripides) எழுதிய ஹீலே (Hela), ஷேக்ஸ்பியரின் ஒத்தல்லோ (Othello) போன்ற கதைகளை கதகளி வடிவில் அமைத்து வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளார். நோ (Noh) எனப்படும் ஜப்பானிய நாடக வடிவத்திற்கும் கதகளிக்கும் சில ஒற்றுமைகள் இருப்பது வியப்பளிக்கிறது. நோ வகை நாட்டியத்திலும் ஆண்களே பெண் வேடம் அணிந்து நடிப்பர். இரண்டு வகை நாட்டியங்களிலும் ஒப்பனைகள், அலங்காரம், ஆடை அணிகலன்கள் அதிகமாக அணிவிக்கப்படும். கதகளி போல பிரும்மாண்டமான வெளிப்பாடு நோ நாட்டிய வகையிலும் உண்டு.

பிரபல எழுத்தாளர் அருந்ததி ராய் எழுதிய சிறு விஷயங்களின் கடவுள் (The God of Small Things) கூறுவதைப் போல், அதில் கதை தொடங்கியதா என்பது முக்கியமல்ல. காரணம், கதைகளின் ரகசியம் அதில் ரகசியம் இல்லை என்பதைக் கதகளி கலை பல ஆண்டுக்கு முன்பே கண்டறிந்து கலைவடிவம் பெற்றுள்ளது. ஒரு முறை கேட்டால், மீண்டும் கேட்கத் தூண்டுவதே சிறந்த கதை. எங்கே நுழைந்தாலும் அங்கே தங்க முடியும். சாகசம், மாயாஜாலமெல்லாம் காட்டி ஏமாற்றுவதும் இல்லை என்கிறார்.



*மிருணாளினி சாராபாய் கதகளி நாட்டியத்தை இந்தியாவிலும் உலகின் பல நாடுகளிலும் பிரபலப்படுத்தினார்.*

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# புற்றுநோய் சிகிச்சைக்காக மூன்று வாகனங்கள்

ரோட்டரி செய்திக் குழு

RID 3141 RC பாம்பே பாந்த்ரா ரோட்டரி சங்கம், பட்டேல் இன்டக்ரேட்டட் லாஜிஸ்டிக்ஸ் மற்றும் (ஜெய்ப்பூர்) செயிண்ட் சேவியர்ஸ் பள்ளியின் முன்னாள் மாணவர் சங்கம் போன்றவற்றுடன் இணைந்து டாடா மெமோரியல் ஹாஸ்பிட்டலுக்கு (TMH) ரூ.63 இலட்சம் மதிப்புள்ள மூன்று வாகனங்களை நன்கொடையளித்துள்ளது, இதன் மூலம் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பல்வேறு இரத்த வங்கிகளில் இருந்து இரத்தத்தைச் சேகரிக்க மருத்துவமனை ஏற்பாடு செய்துள்ளது.



Rtn *மஸ்ரூர் அலி* TMH *அதிகாரி ஒருவரிடம் ஒரு வாகனத்தை ஒப்படைக்கிறார்.*

குறிப்பிட்ட நேரத்திற்குள் இரத்தம் பல்வேறு பாகங்களாகப் பிரிக்கப்படுவதை அவர்கள் உறுதி செய்கிறார்கள், இதன்மூலம் இரத்தத்தை அதிகமாக சேகரிக்க முடிகிறது, என்று இந்த சங்கத்தின் மூத்த உறுப்பினரும் பட்டேல் இன்டக்ரேட்டட் லாஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தின் இயக்குனரு மான சையது K ஹுசைன் கூறுகிறார்.

மேலும் ஜனவரி 2017 முதல் டிசம்பர் 2018 வரை 344 இரத்த தான முகாம்கள் மற்றும் 21 தட்டணுக்கள் தானம் செய்வதற்கான பதிவு முகாம்கள் போன்றவற்றை அனைத்து உபகரணங்கள் உள்ள இரத்தவங்கி வேன்களின் உதவியுடன் இந்த மருத்துவமனையால் நடத்த முடிந்தது என்று சொல்கிறார், 2016-17 ஆண்டில் சங்கத்தின் தலைவராக இருந்த மஸ்ரூர் அலி. சமீபகாலம் வரை சுமார் 28,880 இரத்த யூனிட்டுகள் சேகரிக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 35,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் பலனடைந்தார்கள், இரத்தத்தை முகாம்களில் இருந்து மருத்துவமனைக்கு சரியான நேரத்தில் கொண்டுவந்தது, குறைவான வெப்பநிலையில் பராமரித்தது மற்றும் ஏற்கனவே சேகரிக்கப்பட்ட இரத்தத்தை தரம் கெடாமல் பார்த்துக்கொண்டது போன்றவைதான் இதற்கு காரணம், என்று சொல்கிறார் TMH சேர்ந்த ஜான்சன் லூகோஸ்.

இந்த வசதியைப் பற்றி அறிந்துகொள்ள எங்களை அழைத்துச் சென்ற போது, புற்றுநோய் சிகிச்சைக்காக இங்கே வரும் நோயாளிகளை TMH மென்மையாக நடத்தும் விதம் எங்களைக் கவர்ந்தது, என்கிறார் ஹுசைன். புற்றுநோயாளிகளுக்கு இரத்தம் ஏற்றுவதற்கு தினசரி 90 யூனிட்டுகள் இரத்தம் தேவைப்படுகிறது, ஆனால் இதை வெறும் ஒரு வாகனத்தை வைத்துக் கொண்டு பூர்த்தி செய்வது என்பது சிரமமானது என்று மருத்துவர்கள் கூறினர்.

ஒரு வருடத்தில் TMH, 6,300 பெரிய அறுவைச் சிகிச்சைகளை செய்கிறது, இவை அனைத்திற்கும் இரத்தம்/ தட்டணுக்கள் ஏற்றுவது அவசியமாக இருக்கிறது. இரத்தக் குறைபாடு என்பது ஒரு நீண்டகால கவலையாக இருந்தது, இது உடனடியாக இரத்தம் தருபவர்கள் மற்றும் நோயாளிகளின் குடும்பம்/நண்பர்கள் போன்றவர்களின் மூலம் ஈடு செய்ய முடியவில்லை. இரத்தத்தின் தரத்தைப் பராமரிப்பதற்கு இங்கே கட்டாயமான விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகிறது, அத்துடன் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த மருத்துவமனைக்கு மேலும் இரு வாகனங்கள் தேவைப்பட்டது.

அவர்கள் நன்கொடையளித்த முதல் வாகனம் அற்புதமாக இருந்தாலும், இரத்தம் பிரிக்கப்பட வேண்டியிருப்பதால், இந்த வாகனம் மருத்துவ மனைக்கு 6 மணிநேரத்தில் திரும்பவேண்டிய கட்டாயம் இருக்கிறது; எனவே மேலும் இரு வாகனங்கள் தேவைப்படுகிறது.

மீண்டும் இந்தக் குழு இணைந்து மீதப்பணத்தைத் திரட்டி, இந்த மருத்துவமனைக்கு மற்றும் இரு வாகனங்களை நன்கொடையளித்தனர்.■



RC *பாந்த்ரா குழுவினர்.*

# மார்பக புற்று நோயிலிருந்து பெண்களைக் காக்கும் தானே ரோட்டரி

ரோட்டரி செய்திக் குழு

மக்களிடையே மார்பக புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி, சுயபரிசோதனையை எளிதாக செய்துக்கொள்ள, RC தானே, RID 3142, ஒரு நவீன முகாம் நடத்தியது. இந்த முகாமிற்கு 'பேயர் இந்தியா' நிறுவனம் கைக் கோர்த்துக் கொண்டது.

ஏறத்தாழ 275 மகளீர் இந்த முகாமிற்கு வந்து பயனடைந்தனர். மார்பக சுய பரிசோதனை செய்துக் கொள்ள பெங்களூரைச் சேர்ந்த 'மைக் கிளினிக்' (My Clinic) என்ற நிறுவனம் ஒரு புதிய கையடங்கு கருவியை உறுவாக்கியுள்ளது. இதனைக் கொண்டு பத்தே நிமிடத்தில் பெண்கள் தங்களை பரிசோதித்துக் கொள்ளலாம் என்று சங்கத் தலைவர் அஜய் கேல்கர் கூறினார். இப்படி பரிசோதித்து, ஒன்பது பெண்களுக்கு மார்பகத்தில் கட்டி இருப்பது முகாமில் கண்டறியப்பட்டது. அவர்களுக்கு மேலும் சிகிச்சையளிக்க இச்சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இக்கருவி 5 mm உள்ள சிறிய கட்டியைக் கூட கண்டறிந்து விடுமென கேல்கர் கூறினார். தற்போது இக்கருவி பெங்களூரில் My Clinic ல் உள்ளது. பரிசோதனையின் விலை ரூ.900/- மட்டும்.■




## ஷிரோல் மருத்துவமனைக்கு டயாலிசிஸ் இயந்திரங்கள்

மகாராஷ்டிரா கோலாபூர் மாவட்டத்தில் உள்ள ஜெய்சிங்பூர் BA பிர்னாலே மருத்துவமனைக்கு மூன்று டயாலிசிஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டது, RC சென்ட்ரல் செஸ்டர் கவுன்டி, RID 7450, அமெரிக்கா, மற்றும் TRF உடன் இணைந்து ஒரு உலகளாவிய மானிய திட்டத்தின் கீழ் RC ஷிரோல், RID 3170 ஏற்பாடு செய்யப்பட்டது.

ஷிரோல் மேயர் (அமர் சிங் பாட்டில்) மற்றும் ஜெய் சிங்பூர் மேயர் (நீதா மானே) மற்றும் சங்க உறுப்பினர்களின் முன்னிலையில் DG ஆனந்த் குல்கர்னி மற்றும் இணை-கூட்டாளி ரொட்டேரியன் வசந்த் பிரபு ஆகியோர் மருத்துவமனைக்கு வழங்கினர்.■



Wordsworld

# தோற்றத்தைப் பார்த்து எடைபோடாதீர்கள்!

சந்தியா ராவ்

*பிரபல ஹிந்தி நடிகர் அக்ஷய்குமாரின் மனைவியும் பிரபல எழுத்தாளருமான ட்விங்கிள் கன்னாவின் நூலைப் படித்தால், நமது அகந்தை சிதறிப் போகும். அவரது எழுத்துகள் அப்படிப்பட்டவை. சுவையானவை, உணர்வுபூர்வமானவை, அதே சமயம் நுட்பமானவை.*




பொதுவாக எந்தப் புத்தகத்தையும் என்னைக் கவரும் வகையில் இருந்தால் ஒழிய அதன் அட்டையைப் பார்ததோ, தோற்றத்தை வைத்தோ மதிப்பிடுவதில்லை. லட்சுமிபிரசாத் என்ற மேதை (The Legend of Lakshmi Prasad) ஆங்கில நூலைப் படிக்க எடுத்தபோது, முடிக்கிற வரையில் கீழே வைக்கமுடியவில்லை. அதுதான் நூலாசிரியரின் தனித் திறமை.

பழைய ஹிந்தி நடிகர்கள் ராஜேஷ் கன்னா, டிம்பிள் கபாடியா வின் மகள் என்ற முறையில் ட்விங்க்கிள் கன்னாவை எல்லோரும் அறிவர். அப்போது நடித்துக் கொண்டிருந்தபோது, அதிகம் எழுதியதில்லை. அக்ஷய்குமாரை மணந்து குடும்ப வாழ்க்கை என்று அமைந்த பிறகு இப்போது மீண்டும் பிரபலமாகி வருகிறார். ஆனால், எழுத்தாளராகப் பிரசித்தி பெற்றுவிட்டார். டைம்ஸ் ஆப் இந்தியா நாளேட்டில் கட்டுரைகள் எழுதி வருகிறார். வலைப்பூவில் எழுதுகிறார். அவரது எழுத்துகள் அழகான நடையுடன் கூடியவை, துணிச்சலான கருத்துகளைக் கொண்டவை. அவரது பார்வைகள் அரசியல் ரீதியிலானவை, மதி நுட்பம் கொண்டவை.

2015ம் ஆண்டில் அவர் எழுதிய முதல் புத்தகம் திருமதி ஃபன்னிபோன்ஸ் (Mrs Funnybones) வெளியானது. அதில் அவர் கொஞ்சம் உங்களைப் போன்றவர், நிறைய என்னைப் போன்றவர் (She's just like you and a lot like me) என்ற குறிப்பும் இடம்பெற்றிருந்தது. அந்த நூல் ஹெலென் ஃபீல்டிங் (Helen Fielding) எழுதிய பிரிகெட் ஜோன்ஸ் நாட்குறிப்பு (Bridget Jones's Diary) என்ற பாணியில் அமைந்திருந்தது. அதை முழுமையாகப் படித்து அனுபவித்தேன்.

நூலைப் படித்த போது ட்விங்கிள் கன்னா தன்னையே வருணித்துக் கொண்டதாக சில வரிகளைப் புரிந்து கொண்டேன். ஓரிடத்தில், பாலிவுட்டில் இருந்த போது, அவரது தலை மீது கனமான தடி அவரது தலையில் மீது விழுந்தது. நல்ல காலமாக அவர் தலையைத் தாழ்த்திக் கொண்டதால் காயமில்லாமல் உயிர் தப்பித்தார் என்ற வரி வருகிறது.

நம்மில் பலர் கூரை மீதிருந்து கூச்சல் போடுவது இருக்கட்டும், எத்தனை பேருக்கு இப்படி தனது பிழையை ஏற்றுக் கொள்ளும் துணிவு வரும்?

புத்தகத்தை என் தாயாரிடம் திருமதி ஃபன்னிபோன்ஸ் (Mrs Funnybones) புத்தகத்தைப் படிக்கக் கொடுத்தேன். அவர் புத்தகத்தைப் புரட்டிப் படிப்பார். வேகமாக குறுக்கெழுத்துப் போட்டியை முடித்துவிடுவார்.

ட்விங்கிளின் புத்தகத்தை நானே நீண்ட நாட்கள் வாசிக்க நினைக்க வில்லை. நூலாசிரியர் ட்விங்கிள் கன்னா தனது பெயரை நேசிக்கிறாரா என்று யோசிக்கிறீர்களா, இந்த வரிகளைப் படியுங்கள்:

எனது குழந்தையை என் அம்மா வீட்டுக்கு எடுத்துச் செல்லப் போகிறேன். அவள் அங்கே என்னிடம் செய்வது போல மற்றவர்களிடமும் விஷமம் செய்யட்டும். அங்கே போனேன், ஹனி என்ற தனது நெருங்கிய தோழியுடன் அமர்ந்திருந்தார். அவர்கள் பப்பிள் என்ற தங்களது நண்பரை அழைத்துக் கொண்டிருந்தனர். ஹனி, பப்பிள், டிம்பிள். பெயர்களில் எதுகை மோனை இருக்கிறது பார்த்தீர்களா?

லட்சுமிபிரசாத் என்ற மேதை (The Legend of Lakshmi Prasad) என்ற நூல் 2016ம் ஆண்டு வெளியானது. அடுத்து 2018ம் ஆண்டு பைஜாமாக்கள் மன்னிக்கப்படுகின்றன (Pyjamas are Forgiving) புத்தகம் வெளியானது. நான் இத்தகைய புத்தகங்களை அமேஸான் வலைதளம் மூலம் வாங்கினேன். அத்துடன், அமிதாப் மகள் ஸ்வேதா பச்சன் நந்தா எழுதிய சொர்க்க கோபுரங்கள் (Paradise Towers) நூலையும் வாங்கினேன். புத்தகம் எழுதுவதில் இது பாலிவுட் பெண்களின் காலம்போலும். ஆனால், புத்தகம் வந்ததும், அலமாரியில் தஞ்சமடைந்துவிடுகிறது. அவ்வளவுதான்!

சில தினங்களுக்கு முன்பு விடுமுறை சமயத்தில் ட்விங்கிள் கன்னாவின் புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். அதைப்

படித்ததும் என்னைக் கொக்கி போட்டு இழுத்துவிட்டது. எழுத்து அபாரம்! விறுவிறு என்று இருந்தாலும் அபத்தமில்லை. சுய பிரதாபம் இல்லை. நெகிழச் செய்கிறது.

லட்சுமிபிரசாத் என்ற மேதை (The Legend of Lakshmi Prasad) புத்தகம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. மனிதர்களைப் பற்றி அழகாக, ஆழமாக உண்மையாக விசாலமாக அவர் எழுதியிருக்கிறார். ஒன்றும் தெரியாமல் இப்படி எளிமையாக எழுத முடியாது. அதில் மூன்று சிறு கதைகள் இடம்பெற்றுள்ளன. அவை எல்லாம் குறு நாவல்களைப் போல் இருக்கின்றன. கருத்துகள் எல்லாம் வித்தியாசமானவை. கதா பாத்திரங்களும், நிகழிடங்களும் புதுமையானவை. அவர்கள் அனைவரும் தங்களது குரலாகவே நூலில் ஒலிக்கிறார்கள்.

இந்த நூல் கோயம்புத்தூரைச் சேர்ந்த அருணாசலம் முருகானந்தம் என்ற சமூக ஆர்வலரைப் பற்றியது போல இருந்தது. அவர் ஏழைப் பெண்களும் வாங்கிப் பயன்படுத்தும் வகையில் விலை மலிவான சானிடரி நாப்கின்களைத் தயாரித்தவர். அந்த நாப்கின்களை நலிந்த பிரிவுப் பெண்களே குறைந்த விலையில் தயாரித்துக் கொள்ளலாம்.

ட்விங்கிள் கன்னாவின் புத்தகத்தைப் படித்த பிறகு, ஒரு முறை தொழில்நுட்ப, பொழுது போக்கு, வடிவமைப்பு மாநாட்டில் (TEDx) ஆற்றிய உரையைக் கேட்டேன். அதைக் கேட்டு என் கண்களில் நீர் வழிந்தது. கூட்டத்தில் இருந்தவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டே இருந்தாலும், என் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. அவரது மன நிலையையும் அவரது பணிகளையும் ட்விங்கிள் கன்னா தனது நூலில் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்.


அதைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஒரு புனித மண்ணிலிருந்து வந்த சானிடரி மனிதர் (The Sanitary Man From A Sacred Land) என்று வருணிக்கிறார். மூன்று சிறிய கதைகளும் படிக்க சுவையாக உள்ளன. திருமதி ஃபன்னிபோன்ஸ் (Mrs Funnybones), லட்சுமிபிரசாத் என்ற மேதை (The Legend of Lakshmi Prasad) ஆகிய இரண்டு நூல்களும் ஹிந்தி மொழியிலும் எழுதி வெளியாகியுள்ளன.

ட்விங்கிள் கன்னாவின் புத்தகம் தான் ஹிந்தி திரைப்படமான Padman உருவானதற்கு அடிப்படைஎன்று உணர்ந்தேன்.

பீரியட், முடிவுறும் வார்த்தை (Period. End of Sentence) என்ற 26 நிமிட நேரம் ஓடும் இந்தப் படத்தைப் பற்றி தி ஹிந்து இதழில் (ஜனவரி 23) இந்திய கிராமத்தில் உருவான குறும்படம் ஆஸ்கர் விருது பெறு கிறது என்று எழுதப்பட்டுள்ளது. இப்படம் முருகானந்தம் உருவாக் கிய இயந்திரத்தைக் கொண்டு உத்தரப்பிரதேச கிராமத்தில் உள்ள பெண்கள் சானிடரி நாப்கின்களைத் தயாரிப்பதை சித்திரிக்கிறது அந்தப் படம்.

இதுபோன்ற கதைகள் மேலும் மேலும் கதைகளை உருவாக்குகின்றன. ட்விங்கிள் கன்னாவுக்கு ஆன்டான் டி செயின்ட் எக்ஸுபரி (Antoine de Saint&Exupry) இயக்கி குட்டி இளவரசி (The Little Prince (Le Petit Prince in French)) என்ற பிரெஞ்சு நாவல் பிடிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். அது குழந்தைகளுக்கான புத்தகம் என்பதை விட அன்பு, தனிமை ஆகியவற்றை உருவகப்படுத்தும் புத்தகம் ஆகும்.

குழந்தைகளின் புத்தகங்களுக்கு உரிய மதிப்ப அளிக்கப்படுவதில்லை என்பதால், இந்தக் கருத்து முக்கியமானது. அதைப் போல் ட்விங்கிள் ஓர் இதழுக்கு அளித்துள்ள பேட்டியும்.







பிரெட்ரிக் பேக்மேன் (Fredrik Backman) எழுதிய ஓவே என்ற ஒரு மனிதன் (A Man Called Ov) போன்ற புத்தகங்கள் எனக்குப் பிடிக்கும். காரணம் அதுமாதிரியெல்லாம் என்னால் எழுத முடியாது.

பிரபல எழுத்தாளர்களின் படைப்புகளையெல்லாம் படித்திருக்கிறேன். அவற்றின் பெயரையெல்லாம் என்னால் கூற முடியாது. அதே சமயம் என் படைப்பை நினைத்து திருப்தி அடைவேன் என்கிறார் ட்விங்கிள்.

அவரது மூன்றாவது புத்தகம் பைஜாமாக்கள் மன்னிக்கப்படுகின்றன (Pyjamas are Forgiving) கேரளத்தில் உள்ள ஆயுர்வேத கிளினிக் (Residential Ayurvedic) பற்றியது. ஆனால், அது லட்சுமிபிரசாத் நாவலைப் போல் ஈர்க்காவிட்டாலும் யதார்த்தமாக இருக்கிறது. அடுத்து அவர் எழுதும் புத்தகத்தை ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறேன். இதுவரை அவரது புத்தகத்தைப் படித்திருக்காவிட்டால், படியுங்கள்.

திருமதி ஃபன்னிபோன்ஸ் நாவலில் வருவதைப் போல், முட்டாள் காற்றை மோப்பம் பிடித்தபடி நடந்து கொண்டிருப்பான். புத்திசாலி புத்தகத்தில் மூழ்கி களித்திருப்பான்! என்று கூறலாம்.

புத்தகம் படிக்க வாழ்த்துகள்!

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

## Membership Summary

As on February 1, 2019

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,709 | 206 | 40 | 232 | 199 |
| 2982 | 68 | 3,042 | 151 | 65 | 117 | 53 |
| 3000 | 128 | 5,349 | 505 | 232 | 679 | 199 |
| 3011 | 81 | 3,469 | 725 | 47 | 115 | 25 |
| 3012 | 89 | 3,606 | 799 | 53 | 131 | 56 |
| 3020 | 76 | 4,021 | 224 | 54 | 466 | 349 |
| 3030 | 91 | 4,903 | 604 | 78 | 324 | 166 |
| 3040 | 95 | 2,087 | 230 | 33 | 135 | 142 |
| 3053 | 68 | 3,055 | 541 | 9 | 57 | 96 |
| 3054 | 128 | 6,252 | 1,084 | 77 | 324 | 475 |
| 3060 | 102 | 4,302 | 552 | 59 | 131 | 141 |
| 3070 | 103 | 3,114 | 323 | 45 | 164 | 58 |
| 3080 | 79 | 3,373 | 269 | 73 | 226 | 109 |
| 3090 | 77 | 1,971 | 64 | 36 | 39 | 122 |
| 3100 | 78 | 1,930 | 117 | 11 | 78 | 146 |
| 3110 | 115 | 3,798 | 321 | 25 | 52 | 104 |
| 3120 | 75 | 3,197 | 387 | 31 | 63 | 52 |
| 3131 | 131 | 5,454 | 1,204 | 94 | 310 | 90 |
| 3132 | 96 | 3,846 | 394 | 38 | 214 | 151 |
| 3141 | 95 | 5,588 | 1,327 | 110 | 271 | 84 |
| 3142 | 95 | 3,484 | 646 | 73 | 204 | 64 |
| 3150 | 95 | 3,552 | 357 | 60 | 248 | 109 |
| 3160 | 72 | 2,535 | 148 | 24 | 48 | 81 |
| 3170 | 126 | 5,695 | 615 | 56 | 346 | 164 |
| 3181 | 77 | 3,435 | 314 | 51 | 265 | 111 |
| 3182 | 84 | 3,345 | 256 | 27 | 278 | 95 |
| 3190 | 127 | 5,031 | 682 | 124 | 368 | 52 |
| 3201 | 142 | 5,360 | 345 | 93 | 134 | 49 |
| 3202 | 130 | 5,042 | 262 | 76 | 444 | 47 |
| 3211 | 139 | 4,431 | 282 | 6 | 97 | 128 |
| 3212 | 99 | 4,081 | 312 | 95 | 284 | 142 |
| 3231 | 78 | 3,249 | 255 | 48 | 216 | 305 |
| 3232 | 117 | 4,793 | 758 | 113 | 347 | 82 |
| 3240 | 88 | 3,099 | 393 | 44 | 163 | 168 |
| 3250 | 101 | 3,919 | 699 | 58 | 216 | 176 |
| 3261 | 73 | 2,651 | 354 | 8 | 105 | 43 |
| 3262 | 90 | 3,403 | 418 | 37 | 77 | 76 |
| 3291 | 147 | 3,721 | 721 | 82 | 135 | 600 |
| **India Total** | **3,769** | **147,892** | **17,844** | **2,285** | **8,103** | 5309 |
| 3220 | 71 | 1,997 | 286 | 76 | 204 | 73 |
| 3271 | 85 | 1,456 | 245 | 51 | 19 | 15 |
| 3272 | 145 | 2,570 | 367 | 50 | 38 | 38 |
| 3281 | 203 | 5,626 | 820 | 221 | 94 | 188 |
| 3282 | 148 | 4,269 | 488 | 114 | 48 | 42 |
| 3292 | 117 | 4,570 | 697 | 121 | 127 | 113 |
| **S Asia Total** | **4,538** | **168,380** | **20,747** | **2,918** | **8,633** | **5,778** |

*Source: RI South Asia Office*

ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தா
செலுத்தும் வழிகள்:

*இப்போது நீங்கள்*
ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தாவை
*ஆன்லைன் மூலமும் செலுத்தலாம்.*
*எங்கள் வங்கி விவரம்:*

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank<br>SB Account |
| Branch | : | Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 |
| IFSC Code | : | HDFC0003820 |

*ஆன்லைனில் பணம் செலுத்தியப் பின், உங்கள் சங்கப்பெயர், சங்கத் தலைவர்/செயலாளர் பெயர், பணம் செலுத்திய தேதி, எவ்வளவு செலுத்தினீர்கள் மற்றும்* UTR *எண் இவற்றை மறக்காமல் எங்களுக்கு இமெயில் செய்து விடுங்கள்.*

*சந்தாவை உங்கள் வங்கியில் காசோலை அல்லது ரொக்கமாக கட்டினால் உங்கள் சங்கப் பெயரை மட்டும் அங்கு குறிப்பிடுங்கள்.* “Rotary club of” *என்பதை தவிர்க்கவும்.*

**RI Exchange Rate - March 2019**

**$1 = ₹71**

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,214,363 |
| Clubs | : | 35,787 |
| Districts | : | 538 |
| *Rotaractors | : | 155,020 |
| Clubs | : | 9,734 |
| *Interactors | : | 547,492 |
| Clubs | : | 23,804 |
| RCC | : | 10,200 |

**Estimated*

As on February 15, 2019

# காசநோயில்லா இந்திய திட்டத்திற்கான பயிற்சிக் கருத்தரங்கம்

ரோட்டரி செய்திக்குழு



காசநோயில்லா இந்தியா திட்டம் குறித்து ரொட்டேரியன்களை ஒருங்கிணைத்து அதற்கானப் பணிகளை ஆரம்பிக்க சமீபத்தில் RID 3232 ஒரு கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்திருந்தது. நமது நாட்டில் காசநோய் எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது பற்றி இந்தக் கூட்டம் கவனம் செலுத்தியது. உலகளவில் இருக்கும் காச நோயாளிகளில் 25 சதவீதம் பேர் இந்தியாவில் தான் இருக்கிறார்கள், இந்த நோயால் நிமிடத்திற்கு ஒருவர் இறந்துகொண்டிருக்கிறார் என்று ரோட்டரி இந்திய தேசிய காசநோய் கட்டுப்பாட்டு மற்றும் விழிப்புணர்வு ஆணையத்தின் தலைவர் PRID Y P தாஸ் குறிப்பிட்டுச் சொன்னார். சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி நோயுடன் பிணைந்திருக்கும் சமூகப் பாகுபாட்டைத் திறன்பட தீர்க்க பிரதிநிதிகளை அவர் வலியுறுத்தினார்.

தீவிரமாக நோயைக் கண்டறிவது ஏன் அவசியமானது என்பதை விளக்கிவிட்டு, கிராமப்புற பகுதிகளில் காசநோயைப் பற்றித் தெரிவிக்க தனது முதல் காசநோய் பரிசோதனை வேனை எப்படி இந்த மாவட்டம் அர்ப்பணித்தது என்பதை ரோட்டரி இந்திய தேசிய காசநோய் கட்டுப்பாட்டு ஆணையம்-செயல்பாட்டுத் (தெற்கு) துணைத்தலைவர் டாக்டர் ஹிஸாமுதீன் பாபா நினைவு கூர்ந்தார். 2025 ஆண்டுக்குள் காசநோயை ஒழிக்க கூட்டுமுயற்சி வாய்ப்புகளுக்கான சாத்தியக்கூறுகளை உலக சுகாதார அமைப்பைச் சார்ந்த Dr சுமா வெளிப்படுத்தினார்.

பல்வேறு சங்கங்களால் நடத்தப்படும் மார்பக பரிசோதனைத் திட்டத்திற்கு மாவட்ட அளவில் முழு ஆதரவு தருவதாக உறுதியளித்து, அதைச் செயல்படுத்துவதற்கான செலவுகளுக்கு மாவட்ட நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் தருவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார் DG பாபு பேரம். ■

## STATEMENT ABOUT OWNERSHIP

Statement about ownership and other particulars about Rotary News Tamil to be published in the first issue of every year after the last day of February

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Chennai - 600 008 |
| 2. Periodicity of its publication | : | Monthly |
| 3. Printer's Name | : | P T Prabhakar |
| Nationality | : | Indian |
| Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 4. Publisher's Name | : | P T Prabhakar |
| Nationality | : | Indian |
| Address | : | 15, Sivasami Street<br>Mylapore<br>Chennai 600 004 |
| 5. Editor's Name | : | Rasheeda Bhagat |
| Nationality | : | Indian |
| Address | : | 25, Jayalakshmipuram<br>1st Street, Nungambakkam<br>Chennai - 600 034 |
| 6. Name and address of individual who owns the newspaper and partner or shareholders holding more than one percent of the total capital | : | Rotary News Trust<br>Dugar Towers, 3rd Floor<br>34, Marshalls Road<br>Egmore<br>Chennai - 600 008 |

I, P T Prabhakar, declare that the particulars given are true to the best of my knowledge and belief.

Chennai - 600 008
1st March, 2019

sd/-
P T Prabhakar




# ரோட்டரி - கார்ப்பரேட் உதவியில் சுகாதார மேம்பாட்டுப் பணி

ரோட்டரி செய்திக்குழு

உத்தராகண்ட் மாநிலம் காசிப்பூர் ரோட்டரி சங்கமும் (RID 3110) பிரபல காகித நிறுவனமான நைனி குழுமமும் இணைந்து நகரில் உள்ள அரசுப் பள்ளிகளில் சுகாதார வசதி, குடிநீர் வசதிகளை மேற்கொண்டன.

ரோட்டரி சங்க உறுப்பினரும் தனியார் நிறுவனத்தின் மேலாண் இயக்குநருமான பவன் அகர்வால் ரோட்டரியின் பள்ளியில் WinS, அடிப்படைக் கல்வி, எழுத்தறிவு இயக்கம் ஆகியவற்றுக்கு கார்ப்பரேட் நிதியை அளிக்க உதவ முன்வந்தார்.

ஆறு பள்ளிகளை ரோட்டரி சங்கம் தேர்ந்தெடுத்தது. அப்பள்ளிகளில் மாணவர்கள் கைகளைக் கழுவவதற்குப் போதிய வசதியில்லை. மேலும், கட்டுமான வசதிகள் மோசமாகவும், தூய்மையான குடிநீர் வசதியில்லை. சுகாதார வசதியில்லை. பெண்களுக்கான கழிவறைகளும் இல்லை. இருக்கும் கழிவறைகளும் சரிவர பராமரிக்கப்படவில்லை. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கைகழுவ வேண்டியது குறித்து விழிப்பும் இல்லை.

அப்பள்ளிகளின் 1,200 மாணவர்களிடையே சுகாதாரம் குறித்த விழிப்பு, சோப்பு போட்டு கைகழுவுவது ஆகியவற்றை அன்றாடம் செய்ய வேண்டியதன் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் மாணவிகளுக்குத் தனிக் கழிவறைகள், கைகழுவதற்கான பிரிவுகள் அமைக்கப்பட்டன. இத்திட்டத்தைப் பள்ளிகளிலும் இதர



இடங்களிலும் செயல்படுத்துவது குறித்து ஆசிரியர்கள், பள்ளியின் பணியாளர்கள், உள்ளூர் பிரமுகர்கள், மதத் தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த சுகாதாரப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கான ஊதியத்தை நைனி நிறுவனம் மூன்றாண்டுகளுக்கு அளித்து உதவும். அதன் பின், அந்தந்தப் பள்ளிகளே அவர்களுக்கான ஊதியத்தை வழங்கும்.

அடுத்த கட்டமாக, பள்ளிகளின் கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்கான உதவிகளைப் பெறுவதில் ரோட்டரி சங்கம் ஈடுபட்டுள்ளது.■

---

# சத்தீஸ்கர் பள்ளி மாணவர்களுக்குத் தூய்மையான குடிநீர்



DG *நிகிலேஷ் திரிவேதி மற்றும் உயர்கல்விதுறை அமைச்சர் உமேஷ் பாட்டீல் பள்ளி நிகழ்ச்சி ஒன்றில்.*

சத்தீஸ்கர் மாநில உயர்கல்வித் துறை அமைச்சர் உமேஷ் பாட்டீல் ராய்கட்டில் நான்கு அரசுப் பள்ளிகளில் குடிநீரைச் சுத்திகரிக்கும் சாதனங்களை தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் D 3261 ஆளுநர் நிகிலேஷ் திரிவேதி முன்னிலை வகித்தார். ராய்கட் நகரில் கிடைக்கும் தண்ணீர் மிகவும் உப்புத் தன்மையோடு இருப்பதால், அதைச் சுத்திகரித்து மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காக RC ராய்கட் ஸ்டீல் சிட்டி. இந்த சாதனங்களை பள்ளிகளுக்கு நன்கொடையாக வழங்கியது.

நகரின் பல்வேறு பகுதிகளில் 32 குளிர்நீர் சாதனங்களை ரோட்டரி வழங்கியுள்ளது என்று அத்திட்டத்தின் தலைவர் டேக்லால் தெரிவித்தார்.

இவற்றுடன், பள்ளி மாணவிகளுக்கு உதவும் வகையில் நாப்கின் வழங்கு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.■

# கோரக்பூரில் ரோட்டரியின் திறன் பயிற்சி மையம்

ரோட்டரி செய்திக்குழு



*ரோட்டரி சிங்கர் மையத்தில் பெண்கள் தையற்கலை கற்கின்றனர்.*

ஹரியானா மாநிலம் கோரக்பூரில் உள்ள ராம் நாராயண்லால் மகளிர் பள்ளியில் சிங்கர் ரோட்டரி திறன் மையம் தொடங்கப் பட்டுள்ளது. கோரக்பூர், (D 3120), அமெரிக்காவில் உள்ள தெற்கு டகோடா, (D 5610), உலகளாவிய நிதியுதவி, TRFன் உதவியுடன் அமைக்கப் பட்ட இந்த மையம் தேசிய கல்வி சொசைட்டியின் உதவியோடு கடந்த 2018 ஜூலை முதல் இயங்குகிறது. தற்போது 160 மகளிர் தையல் பயிற்சி பெறுகின்றனர். இந்த மையத்தை திட்ட இயக்குநர் பூர்விநரேன் பாண்டே கவனித்துக் கொள்கிறார்.



DG *ஸ்துதி அகர்வால் ரோட்டரி ஆரம்பப் பள்ளியில்.*

இந்த மையத்திற்கு பல்வேறு பள்ளிகள், கல்வி நிறுவனங்களிடமிருந்து ஆர்டர்கள் வருகின்றன. அவற்றில் கிடைக்கும் வருவாயில் 80 சதவீதம் பயிற்சி பெறுவோருக்குத் தரப்படுகிறது. மீதமுள்ள தொகை இதர செலவுகளுக்கும் பொருட்களை வாங்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

மேலும் இச்சங்கம் ரோட்டரி ஆரம்பப் பள்ளி ஷிவ்பூர் சஹாப்கன்ஞ் என்ற இடத்தில் 1964ல் நிறுவியுள்ளது. இதனை அப்போதைய RI தலைவர் சார்லஸ் W பெட்டன்கில் மற்றும் PRIP நித்திஷ் லஹரி அப்போது திறந்து வைத்தனர். இந்தப் பள்ளிக்கு DG ஸ்துதி அகர்வால் வருகைத் தந்து பள்ளிக் குழந்தைகளுடன் உரையாற்றினார்.■



**RC கும்பகோணம் — RID 2981**
லைஃப் அகெய்ன் பவுண்டேஷனுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு புற்றுநோய் விழிப்புணர்வு மாராத்தானில் 3,000-க்கு அதிகமான பெண்கள் கலந்து கொண்டனர். நடிகை கவுதமி சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். இந்த நிகழ்ச்சியில் 500 நலிவடைந்த பெண்களுக்கு தையல் மெஷின்கள் மற்றும் சேலைகள் போன்றவற்றையும் இச்சங்கம் நன்கொடை அளித்தது.

**RC உளுந்தூர்பேட்டை — RID 2982**
இப்பிராந்தியத்தில் பசுமை சூழல் ஏற்படுத்தும் முயற்சியின் ஒரு அங்கமாக செந்தநாடு கிராமத்தில் ஒரு மாபெரும் மரக்கன்று நடும் முகாமை இச்சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த முயற்சியில் ரொட்டேரியன்கள் கிராமத்தினரையும் ஈடுபடுத்தினர்.






**RC அகோலா சென்ட்ரல் — RID 3030**
அகோலா குயின்ஸின் இன்னர் வீல் கிளப் உடன் இணைந்து, ஜூப்ளி இங்கிலீஷ் ஹை ஸ்கூல் மாணவர்களுக்கு சுற்றுச்சூழலுக்கு ஏற்ற விநாயகர் சிலைகளை உருவாக்கும் ஒரு பயிற்சிப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது. DG ராஜீவ் ஷர்மா இந்த பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டார்.

**RC புதுக்கோட்டை பேலஸ் சிட்டி — RID 3000**
ஒரு பிளாஸ்டிக்-எதிர்ப்புத் திட்டத்தில், வாரச்சந்தை நடைபெறும் இடத்தில் வியாபாரிகள் மற்றும் காய்கறி விற்பனையாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த கையிதழ்களை சங்க உறுப்பினர்கள் விநியோகித்தனர். வியாபாரிகளிடமிருந்து பாலிதீன் பைகளை சேகரித்துவிட்டு, அவர்களுக்குத் துணிப்பைகளை சங்க தலைவர் காசிநாதனும் அவருடைய குழுவினரும் வழங்கினர்.



# சங்க சேவைகள்

**RC பலோத்ரா — RID 3054**

ரோட்டரி பவனில் ஆயுர்வேத மருத்துவ முகாம் நடத்தப்பட்டது, இதில் 60க்கு மேற்பட்ட நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டது. மா ஆய்நாத் கௌசாலாவிற்கு 5,000 ரூபாய் நன்கொடையாக ரொட்டேரியன்கள் வழங்கினர், இந்த மடம் ஊனமுற்ற பசுக்கள் மற்றும் கன்றுகளைக் கவனித்துக்கொள்கிறது.



**RC சூரத் — RID 3060**

வள்ளல் ஜோடியான ரொட்டேரியன்கள் நரேந்திரக்குமார் மற்றும் பவானிபென் மேத்தா ஆகியோர் ஒரு மயானத்திற்கு ரூ.9 இலட்சம் மதிப்புள்ள ஒரு சோலார் பேனல் மற்றும் வாட்டர் ஹீட்டர் போன்றவற்றை நன்கொடை அளித்தனர். அதிகாரிகளிடம் இதற்கான வசதிகளை DG பிங்கி பட்டேல் வழங்கினார்.



**RC ஹோஷியார்பூர் — RID 3070**

மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குக்காக வரும் பொதுமக்களுக்கு சௌகரியமாக இருக்க, நாற்காலிகள் மற்றும் சீலிங் ஃபேன் போன்றவற்றுடன் உள்ள ஒரு காத்திருப்பு அறையை மாவட்ட அமர்வு நீதிபதி அரோரா உடன் இணைந்து PDG பார்வீந்தர் ஜித் சிங் திறந்துவைத்தார்.

**RC அம்பாலா — RID 3080**

ஒரு முன்னணி பாதுகாப்பு அமைப்பில் பணிபுரியும் ஷ்லாகா ஆர்ச்சிபால்ட் மற்றும் வக்கீலான ஜான் ஆர்ச்சிபால்ட் என்ற ஒரு அமெரிக்க ஜோடிக்கும் பள்ளி மாணவர்களுக்கும் இடையே கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. 'நவீன இளைஞர்களின் ஆசை' என்ற தலைப்பில் அவர்கள் கலந்துரையாடினர்.




**RID — 3090**

DGND (2021–22) ஆக தேர்வு செய்யப்பட்ட ஒரு PDRR பர்வீன் ஜிந்தல் அவர்களுக்கு மாவட்ட ரோட்டராக்டர்கள் மற்றும் ரொட்டேரியன்கள் வாழ்த்து தெரிவித்தனர். இதுவரை மூன்று PDRR-க்கள் மாவட்ட கவர்னர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.





**RC அலகாபாத் நார்த் — RID 3120**

பண்டிகைக்கால கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இனிப்புகள், துணிகள் மற்றும் பலன்கள் அடங்கிய பரிசுப் பொருள்களை பிரயாக்ராஜ் சிவில் லைன்களில் உள்ள சுமார் 50-க்கும் அதிகமான துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.




**RC சோன்பெத் — RID 3132**

தீபாவளி மற்றும் பௌபிஜ் பண்டிகைகளை முன்னிட்டு நலிவடைந்த பெண்களுக்கு சேலைகள், சட்டைத்துணிகள் மற்றும் பலகாரம் போன்றவற்றை ரொட்டேரியன்கள் விநியோகித்தனர். ரோட்டரி பற்றி ஒரு நல்ல அபிப்பிராயத்தை சுற்றுப்புறங்களில் இந்த செயல்பாடு உருவாக்கியது.



**RC பாம்பே ஸீ ஃபேஸ் — RID 3141**

தங்களின் இயல்பிற்கு அதிகமான சேவைகள் செய்ததற்கு, மூன்று பேர் மற்றும் மூன்று அமைப்புகளுக்கு சுயநலமற்ற சேவைக்கான தொழிலில் சிறந்து விளங்கியோர் விருதுகள் வழங்கப்பட்டது.



**RC தோம்பிவிளி ஈஸ்ட் — RID 3142**

ரோட்டரி பவன் மற்றும் அபினவ் வித்யாலயாவில் பள்ளி மாணவர்களிடையே திறமையை வெளிக்கொணருவதற்காக சங்கத்தின் முத்திரை பதிக்கும் திட்டப்பணியான 'பால்மேலா' நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியை PDG உல்ஹாஸ் கோலாத்கர் தொடங்கிவைத்தார்.



**RC குண்டூர் விகாஸ் — RID 3150**

ஆந்திரப்பிரதேசம் குண்டூர் மற்றும் பிரகாசம் மாவட்டங்களில் உள்ள 82 அரசுப்பள்ளிகளுக்கு 2,800-க்கு அதிகமான பெஞ்சுகள் வழங்கப்பட்டது, இது RID 6920-ன் ஆறு சங்கங்கள், அமெரிக்கா, மற்றும் TRF உடன் இணைந்து ஒரு உலகளாவிய மானிய திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. RIDE கமல் சங்வி சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.



# சங்க சேவைகள்

**RC காத்ரி — RID 3160**

உலக போலியோ தினத்திற்கு ஒரு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது, இதில் ரொட்டேரியன்களுடன் சேர்ந்து அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் அரசு மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த செவிலியர்கள் கலந்துகொண்டனர். சுமார் 800 பேர் கலந்து கொண்டனர். கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப்போட்டி போன்றவையும் நடத்தப்பட்டது.



**RC செவன் ஹில்ஸ் தர்வாத் — RID 3170**

இந்த அனைத்து பெண்களின் சங்கம் நலிவடைந்த பெண்களுக்காக துணிப்பை உருவாக்கும் ஐந்து நாள் பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்தது. 25 பங்கேற்பாளர்கள் 1,000-க்கும் மேற்பட்ட பைகளை உற்பத்தி செய்தனர்.





**RC ஷனிவரசாந்தே — RID 3181**

ஆஷா ஸ்பூர்தி திட்டப்பணியின் கீழ், குழந்தைகளைக் கவருவதற்காக ஒரு அங்கன்வாடியின் சுவர்களில் வண்ணமயமான சித்திரங்களை இந்த சங்கம் வரைந்தனர். இந்த சுற்றுப்புறத்தை சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்திருக்க ஊழியர்கள் வலியுறுத்தப்பட்டனர்.



**RC திருப்பூர் மிட்டவுண் — RID 3202**

திருப்பூர், வெள்ளக்கோவிலில் உள்ள மூன்று அரசுப்பள்ளிகளுக்கு 2,000-க்கும் அதிகமான புத்தகங்கள் மற்றும் விளையாட்டுப் பொருள்களை சங்கம் நன்கொடை அளித்தது, இதுதவிர இந்த வளாகத்தில் 50 மரக்கன்றுகள் நடப்பட்டது.



**RC பேர்ல்சிட்டி தூத்துக்குடி — RID 3212**

"பூமியின் இரத்தம் - நீரை காப்போம்" என்ற கோஷத்தின் கீழ் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு சிறிய மாராத்தான் ஏற்பாடு செய்யப்பட்டது. 600-க்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்ட இந்த பேரணியை DG S ராஜகோபால் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

# வருங்கால தலைவரை ஹாம்பர்கிற்கு அனுப்புவோம்



2019 RI கன்வென்ஷன் தலைவர் ஜான் ப்ளவுன்ட்டுடன் ஒரு உரையாடல்

**உங்கள் முதல் கன்வென்ஷன் எது?**

1988 ஆம் ஆண்டு நடந்த ஃபிலடெல்ஃபியா தான் எனது முதல் மாநாடு. என்னுடன் என் அம்மா, மகள் மற்றும் மனைவியையும் கூட்டிச் சென்றேன். நான் இரண்டு அமர்வுகளுக்குச் சென்ற பின்பு, நாங்கள் ஃபிலடெல்ஃபியாவை சுற்றிப் பார்த்தோம். அது ஒரு அருமையான சுற்றுலா, ஆனால் உண்மையில் நான் மாநாட்டில் கலந்து கொள்ளாததால், எனக்கு அது ஒரு நினைவார்த்தமாக இல்லை.

சில வருடங்கள் கழித்து, நான் கவர்னராக வந்தபோது, ஒரேகான், போர்ட்லேண்டில் நடைபெற்ற மாநாட்டுக்குச் சென்றேன். ரோட்டரி பற்றிய புரிதலை அந்த மாநாடு விசாலமாக்கியது.

**சங்கங்கள் ஏன் மாநாடுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரசிடென்டை அனுப்புகிறார்கள்?**

1983ம் ஆண்டு, என் சங்கமான கலிஃபோர்னியா செபாஸ்டோபோல் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள், எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரசிடென்டை ஒவ்வொரு ஆண்டும் மாநாட்டுக்கு அனுப்பத் தீர்மானித்தோம், முதல் வருடம் டேவ் மேட்சென் என்பவரை அனுப்பினோம். அவர் ஒரு நிதி திரட்டும் யோசனையுடன் வந்தார், இது எங்கள் சங்கத்தில் நாங்கள் செய்வதை ஒட்டுமொத்தமாக மாற்றியது. அவர் அங்கிருந்த போது மற்றொரு சங்கத்திடமிருந்து கற்றுக் கொண்டார். வருடங்கள் தோறும் இது கோடிக் கணக்கான பணத்தைத் திரட்டியது. இதனால் நாங்கள் அனுப்புவதால் நீண்ட காலத்திற்கு அதற்கான பலனை அனுபவித்தோம்.

ஒவ்வொரு ஆண்டும் இப்போதும் கூட நாங்கள் எங்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை அனுப்புகிறோம், மாநாட்டின் மாயாஜாலத்தால் அவர்கள் மிகவும் உற்சாகமாகவும், மிகவும் உணர்வுப்பூர்வமாகவும் திரும்பி வருகிறார்கள். அவர்கள் ரோட்டரியுடன் மிகவும் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் மற்றும் எங்களுடனும் எங்கள் சங்கத்துடனும் இணைந்து உலகத்தை மாற்றுவதற்கு அடுத்த ஆண்டு முழுவதும் செலவழிக்கப் போவதற்கு மிகவும் ஆர்வத்துடன் உள்ளனர். ஏன் தெரியுமா? உலகத்தை அவர்கள் மிகவும் நுணுக்கமாகப் பார்க்கிறார்கள். மக்களை அவர்கள் சந்திக்கிறார்கள். எண்ணங்களை கொண்டுவந்து, தொடர்புகளை உருவாக்குகிறார்கள். கடந்த ஆண்டுகளில் எங்கள் சங்கம் தான் ஒரு தலைசிறந்த சங்கமாக இருந்து வருகிறது - இனிவரும் தலைமைக்கு மாநாட்டிலிருந்து அனுபவ ஞானம் கிடைப்பது தான், இதற்கு ஒரு குறிப்பிடத்தக்க அங்கமாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

**ஒவ்வொரு வருடமும் யாரையாவது அனுப்புவதால் ஏற்படும் செலவை உங்கள் சங்கம் எப்படி சமாளிக்கிறது?**

உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்களில் இருந்து இதற்கான நிதியை ஒதுக்குகிறோம். இது அதிகப்படியான தொகை தான், ஆனால் இதன் மூலம் அதிகளவு மதிப்புகள் கிடைக்கும் என்பது பற்றி எந்தவொரு கேள்வியும் இல்லை.

**ஹாம்பர்க்கில் இந்த வருடம் ரொட்டேரியன்கள் என்ன எதிர் பார்க்கலாம்?**

இந்த மாநாட்டின் மையக்கருத்து - தருணத்தை தவறவிடாதீர் - இது அவசியத்தைப் பற்றி பேசுகிறது. சங்கங்கள் ஒத்துப்போவதற்காக முயற்சித்தால் மட்டுமே, பலமாக வளர முடியும். இன்றைய நிலையைக் கைப்பற்றி அதைச் சிறந்ததாக மாற்றுவோம். ■

Rotary PEOPLE OF ACTION

# கஜா புயலால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள்

ரோட்டரி செய்திக்குழு

கடந்த ஆண்டு நவம்பரில் தமிழகத்தில் ஏற்பட்ட கஜா புயலால் ஏராளமானோர் வீடுகளையும் சொத்துகளையும் இழந்துவிட்டனர். ரோட்டரி உடனே செயல்பட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டியது.

புயல் பாதித்த தஞ்சை மாவட்டம் நெட்டோடை கிராமத்தில் பாதிக்கப்பட்ட 41 குடும்பங்களுக்கு ராமநாதபுரம் ராயல்ஸ் ரோட்டரி சங்கம் (ரோட்டரி இன்டர்நேஷனல் மாவட்டம் 3212) வீடுகள் கட்டித் தரப்பட்டன.

அதிராமபட்டினத்துக்குச் செல்லும் வழியில் இந்த கிராமத்தைப் பார்த்தோம். கால்வாயின் இரு புறமும் ஏராளமான வீடுகள் மிக மோசமாக சேதமடைந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தோம். உடனே பயணத்தை இடையில் நிறுத்தி, அங்குள்ள சேதத்தைப் பார்வையிட்டோம். எப்படி இப்பகுதி மக்களுக்கு உதவலாம் என்று ஆராய்ந்தோம் என்று ரோட்டரி சங்க உறுப்பினர் N கார்த்திகேயன் கூறினார்.

ரோட்டரி உறுப்பினர்கள் நெட்டோடை கிராமத்தினருக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், இதர நிவாரணங்களை வழங்கினர். அந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான உதவிகளையும் மேற்கொண்டனர். சமூக வலைதளங்களின் மூலமாக வீடுகளைக் கட்டித் தருவதற்கு உதவும்படி கோரிக்கை விடப்பட்டது. அதையடுத்து, பல நல்ல உள்ளம் கொண்டவர்கள் நிதியுதவி அளித்தனர். இதற்காக முதலில் உதவிக் கரம் நீட்டிய ரோட்டரி முன்னாள் ஆளுநர் டாக்டர் சின்னத்துரை கடந்த ஜனவரி 1ம் தேதி புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளை அந்த கிராமத்தினருக்கு வழங்கினார். அவருடன் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அறிவியல் ஆலோசகராக இருந்த V பொன்ராஜ் பங்கேற்றார். அதையடுத்து அந்த கிராமத்தில் சூரிய சக்தியால் இயங்கும் தெரு விளக்குகள் அமைத்துத் தரப்பட்டன.

நல்ல இதயம் கொண்ட ஒவ்வொருவரும் அங்குள்ள தஞ்சைப் பகுதியில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த 775 குடும்பங்களுக்கும் மளிகைப் பொருட்கள், போர்வைகள், மெழுகு வர்த்திகள், குடிநீர், துணிமணிகள், வீட்டுக் கூரைக்கான ஓடுகள், இதர பொருட்களையும் அளித்தனர் என்று ரோட்டரி சங்கத் தலைவர் சோம சுந்தரம் தெரிவித்தார்.

பேரிடர் மேலாண்மை என்பது ரோட்டரி சங்கத்துக்குப் புதியதல்ல என்று கூறிய அவர், 2015ம் ஆண்டு ஏற்பட்ட புயலால் கடலூர் அருகே பாதிக்கப்பட்ட 23 வீடுகளை ரோட்டரி கட்டித் தந்து, நிவாரண உதவிகளை அளித்திருக்கிறது என்றார்.

அண்மையில் அமெரிக்காவின் கரோலினா தமிழ்ச் சங்கமும் அப்துல் கலாம் லட்சிய இந்தியா இயக்கமும் இணைந்து இத்தகைய சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

வடிவமைப்பு:
L குணசேகரன்



# நலம் தரும் மனம்

ஷீலா நம்பியார்

எதிலும் கவனமான ஒழுக்கம் (Mindfulness), அக்கறையோடு தியானம் (Mindful Meditation), கவனமாக உண்பது (Mindful Eating) ஆகியவை எல்லாம் புதிய வார்த்தைகளாக இருக்கலாம். பலருக்கு இதில் என்ன இருக்கிறது என்று கூடத் தோன்றலாம்.

ஒழுக்கமோ, கவனமோ பழங் காலத்தில் எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு மதத்துக்கும் ஆன்மிகத்துக்கும் தனியே தியானப் பயிற்சிக் கான உத்திகள் உள்ளன. ஆனால், ஒழுக்கத்துக்கும் தியானத்துக்கும் மத சம்பிரதாயங்கள் ஏதும் கிடையாது. யார் வேண்டுமானாலும் எத்தகைய நபராக இருந்தாலும் தங்களது வாழ்க்கையில் கவனமான தியானத்தை தினம்தோறும் சில நிமிடங்கள் கடைப்பிடிக்கலாம்.

அமெரிக்கா, மாசாசூசெட்ஸ் பல்கலைக்கழகத்தின் ஆய்வுகளை அடுத்து கவனத்துடன் பழகும் தியானம் தொடர்பான சில செயல்பாடுகள் விஞ்ஞான உலகின் கனத்தை ஈர்த்துள்ளன. தியானம் செய்வதன் மூலம் உளவியல் நலம் காத்து, மன அழுத்தம், பதற்றம், நாள்பட்ட வலி, ஏன் புற்றுநோய் பாதிப்பு எனப் பலவித உபாதைகளைக் கட்டுப்படுகிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நோயைத் தணிக்கும் முறையில் மனம்-உடல் சார்ந்த பயிற்சி முக்கியத்துவம் பெறுகிறது.

**கவன ஒழுக்கம் என்றால் என்ன?**

கவனமான நிலை என்பது விழிப்பு ஆகும். தற்போதைய நிலை குறித்து விழிப்போடு இருப்பது. இதில் என்ன இருக்கிறது? அதைப் பற்றி சிந்தித்தால் அது வேறொன்றுமில்லை, நிகழ்காலத்தில் வாழ்வது. கடந்தகாலம் என்பது முடிந்துவிட்டது. எதிர்காலம் என்பது வரவில்லை. நிகழ்காலம் ஒன்றே நிஜம் என்று மனத்தில் கொண்டு அதில் ஈடுபடுவதுதான்.

எப்போதாவது மனம் குழம்பிய போதோ எங்காவது செல்லும்போதோ குழந்தைகளுடன் இருந்திருக்கிறீர்களா? அலுவலகத்தில் சக ஊழியருடன் கார சார விவாதம் நடத்திய பின் கோபமும் எரிச்சலும் ஏற்பட்டிருக்கிறதா? அந்தக் காலம் மாதிரி வராதா என்று ஏங்கியிருக்கிறீர்களா? தொலைக்காட்சி முன் அமர்ந்து, சுவாரஸ்யமான நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டே கையில் இருக்கும் தின்பண்டத்தை நம்மை அறியாமல் காலி செய்த துண்டா? இதெல்லாம் கவன ஒழுக்கம் இல்லாததன் அறிகுறிகள். இவை நமக்கு உதவாது. இவை எல்லாம் நமது நிகழ் கணங்களைப் பறித்துக் கொண்டு, ஏதோ பயன்தராத ஒரு கற்பனை உலகில் மிதக்கச் செய்கின்றன. கடைசியில் ஏதாவது வியாதியில் கொண்டு தள்ளுகின்றன.

கவனம் என்பது நம்மை நிகழ் காலத்தில் முழுமையாக இருக்கச் செய்வது. நிகழும் கணங்களை அதன் வலி, அவஸ்தை, மகிழ்ச்சி, அச்சம் ஆகிய உணர்வுகளுடன் அப்படியே உணரச் செய்வது. கவனமாக வாழ்வது எதையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையை அளிக்கும். தேவைக்கு ஏற்ப மாற்றத்தையும் ஏற்படுத்தும். உதாரணத்திற்கு, எதன் மீதாவது கோபமோ, அதிருப்தியோ நேர்ந்தால், அந்த உணர்வு ஏன் வந்தது என்று ஆராய்ந்து, அதற்கான காரணத்தைக் கண்டறிவது, அதைத் தவிர்த்து உற்சாகமாகவும் எதையும் பொருட்படுத்தாத மனநிலையையும் அளிக்கும். உண்மையில், வலியோ, அவஸ்தையோ, பதற்றமோ ஏற்பட்டால், அதிலிருந்து தப்பித்துச் செல்வதை விட்டுவிட்டு, அதை அரவணைத்துச் செல்வது சுய விழிப்புணர்வை அளிக்கும்.

இப்படி எந்த முடிவும் எடுக்காமல் அப்படியே நிகழ் கணங்களில் வாழ்வதும், எதையும் ஏற்றுக் கொள்வதும் நம்மை மாற்றும். சுய உணர்ச்சியை மேம்படுத்தும். இது நம்மில் பலரிடம் இருப்பதில்லை. நமது மனத்திலும் உடலிலும் புத்திசாலித்தனம் புதைந்திருக்கிறது. எது தவறு, சரி என்று அது சுட்டிக் காட்டுகிறது. ஆனால், அது சொல்வதைத்தான் நாம் கேட்காமல் வேறு கண்முன்னே நடக்கும் விஷயங்களிலும் ஊடகங்களிலும் ஈடுபடுகிறோம்.

கவனமாக இருப்பது என்பது ஒரு பழக்கம். நமது மூளையில் தோன்றும் எண்ணங்கள் நோயை அதிகரிக்கச் செய்யும். எல்லாம் நம் எண்ணங்கள் செய்யும் வேலைதான். எதைப் பற்றியும் கவனமாக இருப்பது நமது உடல்நலனுக்கு நல்லது.

மன அழுத்தத் திட்டத்தின் (Mindfulness Based Stress Reduction Program) நிறுவனர் டாக்டர் கபாட்-ஜின் (Dr Kabat&Zinn) முழுமையான கவனம் மற்றும் அதன் பலன்கள் குறித்து பல ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கிறார். பதற்றம், வலி, தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றுக்கும் உள்ள தொடர்புகள் குறித்தும் அவர் ஆராய்ந்தார்.

நாம் அனுபவிக்கும் வலியோ வியாதியோ தொடர்பான எண்ணங்கள் மீது நமது கவனத்தைச் செலுத்துவதன் விளைவாக ஏற்படும் தியானத்தின் மூலம் பலன் கிடைக்கும். உண்மையில், வலி அல்லது நோயைப் பற்றி ஒரு குறிப்பிட்ட விதத்தில் நினைத்துக் கொண்டிருந்தால் அதிகரிக்கும். வேறு விதத்தில் நினைத்துக் கொண்டிருந்தால், அதுவே மாறிவிடும்.

வேண்டாத சம்பவங்களை அசைபோடும்போது அதைக் குறித்து விழிப்போடு கவனம் செலுத்தினாலோ

முதுகில் வலி இருப்பதாகக் கருதி, அதை உணர்ந்து கவனித்தாலோ அவை நமக்குப் பலன் தரும்.

**கவனத்துக்குச் சில யோசனைகள் –**

- எளிய விஷயங்களில் முழுமை யாகக் கவனம் செலுத்துங்கள். ஷவரில் குளிக்கும்போது, தண்ணீரை அனுபவிக்கிறோம். அதன் குளுமை, பெய்யும் சத்தம், உணர்ச்சி ஆகியவற்றை அணு அணுவாக ரசிப்பதைப் போல, எதுவாக இருந்தாலும் முழுமையான விழிப்புடன் இருங்கள்.
- மூச்சில் கவனம் தேவை. இது எளிதாகத் தோன்றும். ஆனால், நாம் யாரும் மூச்சுவிடுவதைக் கவனிப்பதில்லை. மூச்சுவிடுவதில் கவனத்துடன் இருங்கள். அதை நாள் முழுவதும் ஒரு பழக்கமாகவே கையாளுங்கள். ஒருவரைப் பார்த்துப் பேசிய பிறகு இன்னொருவருடன் பேசும்போது, அலுவலகத்தில் நடக்கும்போது, ஒரு கோப்பைத் தண்ணீர் குடிக்கும் போது கொஞ்சம் நின்று மூச்சு விடுங்கள்.
- உடம்பை கவனியுங்கள். சில சமயம் நம் உடம்பில் எங்கோ வலியோ அவஸ்தையோ தெரியும். எப்படி நாம் உட்காருகிறோம், நிற்கிறோம், உண்கிறோம் என்று கவனம் செலுத்தியிருக்க மாட்டோம். நமது கால், கை, இடுப்பு எல்லாம் எப்படி நிலையில் அசைக்கிறோம்? ஏதாவது சிரமம் உண்டா? அசையும்போது வலிக்கிறதா? ஒரே பக்கம் சாய்ந்து செயல்படுகிறோமா? ஒரு பக்கம் பலவீனமாக இருக்கிறதா? இவற்றில் எல்லாம் நாம் பொதுவாகக் கவனம் செலுத்துவதில்லை. அப்படிச் செய்தால், நமது உடலில் ஆழ்ந்த கவனம் தோன்றும். அது நமது உடலை மேம்படுத்தும்.
- எண்ணங்களின் மீது கவனமாக இருங்கள். அவை உங்கள் மூளையில் செயல்படுவதை உணருங்கள். சும்மா உணர்ந்தாலே போதும்.
- உணர்வுகள்-சுவைப்பது, முகர்வது என எல்லா உணர்வுகளையும் அனுபவித்துப் பாருங்கள். நடக்கும்போது, எல்லாவற்றையும் தீர்க்கமாகப் பாருங்கள். நுட்பமாக முகருங்கள், கூர்மையாகக் கேளுங்கள். சமைக்கும்போது தோன்றும் வாசனையையும் உணருங்கள். காய் கறிகளின் வண்ணங்களைக் கூர்ந்து பாருங்கள். அவற்றை நறுக்கும் போதும் கவனியுங்கள். அது கூட ஒரு வகை தியானம் போலத்தான்!
- யாருடன் பேசும்போதும் முழுமையான விழிப்பு தேவை. அது அவர்களுடனான உங்களது நட்பு, உறவுக்கும் நல்லது. நீங்கள் அவர்கள் மீது அக்கறை காட்டுகிறீர்கள் என்று அவர்கள் நினைக்கவும் செய்யும். அவசர உலகில் இப்போது நாம் அப்படி உரையாடுவது இல்லை.
- கவனமான தியானத்துக்கு பத்து நிமிடம் போதும். அது குறித்து யூ டியூப் போன்ற பல சமூக வலைதளங்களில் அறிந்து கொள்ளலாம். டாக்டர் கபாட்-ஜின் கூறியதையும் முயற்சி செய்யுங்கள். 'பத்து நிமிட தியானத்தால் என்ன பயன்?' என்று கேட்பீர்கள். தினமும் பத்து நிமிடம் செய்தால், அதன் பலன் நாள் முழுக்கக் கிடைக்கும். அது உடலை ஸ்கேன் செய்வது போல் இருக்கலாம். புரிதல் சார்ந்த மன அழுத்தம் குறைப்புக்கு (Based Stress Reduction & MBSR) துணைபுரியலாம். தினமும் குறிப்பிட்ட நேரத்தில் தியானம் செய்வதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். காலப் போக்கில் அது அப்படியே அமைந்துவிடும்.

கவனத்தின் பலன் ஏராளம். நோய் தீர்ப்பு முதல் பொது உடல் நலன் வரையில் பயன் தரக் கூடியது. சில சமயம் சில காரியங்கள் நடப்பதில்லையே என்று நினைத்திருக்கிறீர்களா? தேவைப்படும்போது அதைக் கவனிக்காமல் போய்விடுகிறதே என்று நினைக்கிறீர்களா? உங்களது எண்ணம், உணர்வை முறையாக வெளிப்படுத்த இயலவில்லை என்று நினைப்பதுண்டா? கூடாது என்று தெரிந்தும் பல சமயம் அதிகமாகச் சாப்பிடுவது ஏன் எனக் கவனித்திருக்கிறீர்களா? சில சமயம் பல எண்ணங்கள் சூழ்ந்து கொண்டு தூங்கவிடாமல் செய்வதை உணர்ந்திருக்கிறீர்களா? தினந்தோறும் கவன தியானம் (Mindful Meditation) பழகுவதும், கவனஒழுக்கத்தை (Mindfulness) தொடர்வதும் மனத்தை அமைதிப்படுத்தும், அமைதியான அர்த்தமுள்ள வாழ்க்கையை ஏற்படுத்தும்.

அடுத்து கவனித்து சாப்பிடுவது குறித்து கட்டுரை எழுதுகிறேன். எனக்குப் பிடித்தமான விஷயம். உணவுப் பழக்கத்தை மாற்றினால் வாழ்க்கையில் பலன் அளிப்பதும் கூட.

Dr ஷீலா நம்பியார் MD,
வாழ்வியல் மருத்துவ நிபுணர்
மற்றும் உடற்பயிற்சி ஆலோசகர்.
40 வயதுக்குப் பின் எடையைப் பராமரியுங்கள் (Get Size Wise, Gain To Lose Fit After 40) என்ற நூலின் ஆசிரியர். இணையதளம்: www.drsheelanambiar.com

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி



# பள்ளி மாணவிகளுக்கு சைக்கிள்

ரோட்டரி செய்திக்குழு



DG *ரமேஷ் வாங்கலா,* RC *ஹைதராபாத் கச்சிபவுலி தலைவர்* T S *சசிகலா,* PDGs T V R *மூர்த்தி மற்றும்* T V *ராவ் அவர்கள் பள்ளிக் குழந்தைகளுடன்.*

அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் RC ஹைதராபாத் கச்சிபவுலி (RID 3150) மற்றும் 14 ரோட்டரி சங்கங்கள் இணைந்து, அரசுப்பள்ளியை சார்ந்த நலிவுற்ற மாணவிகளுக்கு 100 சைக்கிள்களை வழங்கினர்.

இந்த மாணவிகள் பள்ளிக்குச் செல்வதற்கு நீண்ட தூரம் நடக்க வேண்டியுள்ளது. அவர்களது நேரத்தை மிச்சப்படுத்தவும் சிரமத்தைக் குறைக்கவும் இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன என்று ரோட்டரி சங்கத்தின் செயலாளர் தேப்ஜானி சட்டர்ஜி தெரிவித்தார். ரோட்டரி சங்கத் தலைவர் T S சசிகலா சைக்கிள்களை நன்கொடையாக வழங்கினார்.

இதற்கான நிகழ்ச்சியில் மாவட்ட ஆளுநர் ரமேஷ் வாங்கலா, A G உஷாராணி மற்றும் பல ரோட்டரியினர் இதில் பங்கேற்றனர்.■

# தூய்மை இந்தியாவிற்கான ஒரு சைக்கிள் பிரச்சாரம்

கோயம்புத்தூரிலிருந்து கொச்சிவரை சுமார் 200 கி.மீ., தூர ஒரு சைக்கிள் பயணத்தை RID 3201 ஏற்பாடு செய்திருந்தது, 75 பேர் கலந்து கொண்ட இப்பயணத்தை, DG A வெங்கடாசலபதி, RPIC ராஜதுரை மைக்கேல் மற்றும் டிஸ்டிரிக்ட் செக்ரட்டரி செல்ல ராகவேந்திரன் முன்னிலையில் கோவை மாநகராட்சி ஆணையர் Dr K விஜயகார்த்திகேயன் தொடங்கிவைத்தார். ரோட்டரி தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மக்களிடம் ரோட்டரியை விளம்பரப்படுத்து வதுடன், மேலும் சுகாதாரத்தை பேணுவதற்காக தூய்மை இந்தியாவிற்கான ஒரு சைக்கிள் பிரச்சாரம் என்று இந்த நிகழ்ச்சி தலைப்பிடப்பட்டது.


ரொட்டேரியன்கள், ரோட்டராக்டர்கள், அன்னெட்கள் மற்றும் 105 RAF பட்டாலியனைச் சேர்ந்த ஜவான்கள் என கொச்சியில் RC அங்கமலி ஏற்பாடு செய்திருந்த பாராட்டுவிழாவிற்கு PDG சுனில் ஜகாரியா தலைமை தாங்கினார்.

அதே வேளையில் மகாத்மா காந்தியின் பிறந்து 150வது ஆண்டு மற்றும் உலக போலியோ தினம் (அக்டோபர் 24) போன்றவற்றைக் கொண்டாட சுமார் 300 பேர் கலந்து கொண்ட ஒரு நடை மாரத்தான் நடைபெற்றது, தலைவர் மனைவி வீணா பதி கொடியசைத்து துவக்கி வைத்தார். ■




DG A *வெங்கடாசலபதி மாநகராட்சி ஆணையர்* Dr K *விஜயகார்த்திகேயனுடன் சைக்கிள் பிரச்சாரத்தை துவக்கி வைக்கிறார்.*

# On the racks




## De-stress your life


Author : **Glenn Harrold**
Publisher : **Hachette India**
Pages : **183; ₹299**

The must-have book for de-stressing your life and embracing modern living.

Using tools and techniques such as meditation, regulated breathing and self-hypnosis, expert Glenn Harrold shows you how to cope with the pressures of modern life and create a happier, stronger and more resilient you. Through seven easy steps you will learn:

- What stress is and what causes it
- The mental and physical effects of stress
- Techniques to help you cope with stressful situations and problems
- Ways to be kinder to yourself and build a greater sense of self-worth

From finances and careers, relationships and self-image to time management and life goals, *De-stress your life* will teach you the skills, techniques and practices you need to achieve for a healthy work/life balance and find your own inner calm.




## Sleep well every night


Author : **Glenn Harrold**
Publisher : **Hachette India**
Pages : **178; ₹299**

In this easy-to-follow six-stage programme, clinical hypnotherapist Glenn Harrold reveals how you can truly change the way you sleep.

By rethinking basic lifestyle choices and using 100 per cent natural remedies, including self-hypnosis, Harrold shows that a good night's sleep is only a step away. *Sleep well every night* will give you the tools and knowledge to:

- Understand what sleep is and why it's so important
- Identify common problems and know how to tackle them
- Make simple but powerful changes that will drastically improve your quality of sleep
- Eliminate the hidden causes of insomnia

With practical exercises, top tips and easy-to-follow techniques, this invaluable programme will help you sleep easier, better and longer. It's time to take back control of your day and night, reclaiming your right to a good night's sleep.




## Loss weight now!

Author : **Glenn Harrold**
Publisher : **Hachette India**
Pages : **200; ₹299**

Do you want to lose weight and stay slim?

Do you wish it was easy to choose healthy foods?

Would you love to have the will-power to exercise regularly?

Do you wish losing weight was really, really easy?

Glenn Harrold has developed a safe and revolutionary approach that will transform your relationship with yourself and with food. He promises to give you total control of your weight, so you never need to diet again.

Successful weight loss starts in your head, not at the supermarket or at the gym, and Harrold's quick and easy exercises will change your mindset in an instant. Suddenly you will find it really easy to eat healthy food all the time, you'll want to get out and exercise, and you'll not even think about all those foods you know are bad for you but you normally can't resist.

Weight loss has never been easier. With Glenn Harrold you'll watch the pounds disappear forever — and you'll love it!

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

# பறந்தது விமானமா? மானமா?

TCA ஸ்ரீநிவாச ராகவன்

தில்லியில் 1958ம் ஆண்டு முதல் வசித்து வந்த நான் 1970ம் ஆண்டு தில்லியிலிருந்து சென்னை முதல் முறையாகப் பயணமானேன். அந்த விமானி, ஒலி பெருக்கியில் அந்த விமானம் புறப்பட்டு இரண்டு மணி 20 நிமிடத்தில் சென்னை சென்றடையும் என அறிவித்தார். IC 539 (அல்லது 540 என நினைவு) என்ற இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் மாலை 5 மணிக்குப் புறப்பட்டு 7.20 மணிக்குச் சென்னையில் தரையிறங்கியது. இந்தியாவில் அப்போது இந்தியன் ஏர்லைன்ஸ் மட்டும்தான் ஒரே ஒரு உள்நாட்டு விமானப் போக்குவரத்து சேவை அளித்தது. பத்தாண்டுகளுக்கு முன் அதுவும் சர்வதேச விமான சேவை நிறுவனமான ஏர் இந்தியாவுடன் இணைந்து விட்டது. அடுத்த 30 ஆண்டுகள், இரு நகரங்களுக்கும் இடையில் விமானப் பயண நேரம் இரண்டு மணி 20 நிமிடம்தான்.

ஒரு முறை தனியார் விமானத்தில் சென்றபோது, அதன் டிக்கெட்டில் புறப்பாட்டு நேரம் காலை 11.10 மணி என்றும் சென்றடையும் நேரம் மதியம் 2.20 மணி என்றும் போடப்பட்டிருந்தபோது, 'என்னடா மூன்று மணி நேரத்துக்கும் மேல் பயணமா?' என்று அதிர்ச்சி அடைந்தேன். டர்போ-ப்ரோப் மூலம் புரொப்பெல்லர் இயங்கும் விமானமா என்று திகைத்தேன். டிக்கெட்டில் விமானப் பயணத்தின் நேரம் காலத்தைப் பலமுறை திரும்பத் திரும்ப பார்த்தேன். விமானப் பயணத்தைப் பற்றிப் பார்த்தேன். விமானப் பயணப் பாதைக்கான செயலியை (flight tracking apps) பார்த்தேன். அந்த விமானம் இடையில் நிற்காது பயணம் செய்யும் என்பதையும் உறுதி செய்து கொண்டேன்.

இதைக் குறிப்பிட்டு எனது கட்டுரையில் (Twitter), 'தில்லியும் சென்னையும் நகர்ந்து விலகி விட்டனவா?' என்று குறிப்பிட்டேன். 100 பேர் பதிலளித்தும் ஒரு சிலர் மட்டும் அது சரியான நேரத்தில் செல்கிறது எனச் சுட்டிக் காட்டியிருந்தனர். நாம் எப்போதும், 'நான் தாமதமில்லை. விமானம் தான் புறப்பட நேரமானது' என்போம். பிறது, விமானம் குறிப்பிட்ட தூரத்தை, குறிப்பிட்ட வேகத்தில் பறந்து சரியான நேரத்தில் போக வேண்டிய ஊரை அடைந்தால், 'சரியான நேரத்திற்குச் செல்லும் விமான சேவை' என்போம். இந்த விமானத்தில் பயண நேரத்தை நீட்டிக் குறிப்பிட்டிருந்தது விமானம் புறப்படுவதற்கு அனுமதித்தது போல அமைந்தது. அந்த விமானம் 50 நிமிடம் தாமதமாகவே புறப்பட்டது. சரியாக 2 மணி, 20 நிமிடத்தில் சென்றடைந்தது. விமானம் புறப்படுவதற்கு 2 மணி நேரம் முன்பாகவே விமான நிலையத்திற்கு வந்துவிடவேண்டும். இது போதாதென்று, முன்பு அளித்ததில் பாதி அளவு நொறுக்குத் தீனிக்கு இரு மடங்கு காசு, விமானத்தின் நடுவில் உள்ள சீட்களைத் தவிர இதர இருக்கைகளுக்கு கூடுதல் கட்டணம் என்று வசூலித்து வாட்டி வதைக்கிறார்கள். வெட்கக் கேடு!

ஒரு முறை பயணத்தின்போது, பிரீமியம் சீட்டில் அமர்ந்தேன். உடனே பணிப்பெண் அங்கு வந்து, அதற்குக் கூடுதல் கட்டணம் என்றாள். நான் முகம் சுழித்தபடி பார்த்தேன். அவள் 'பெரியவங்க கிட்டே எதுக்கு வெச்சுக்கணும்' என்று நினைத்தாளோ என்னவோ, தெரியாது அப்படியே போனது.

அது போகட்டும், இந்த விமான சேவை நிறுவனங்கள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கின்றன? ஒரு போக்குவரத்து நிறுவனத்தின் ஆலோசகராக இருந்த நான், குறிப்பாக விமானப் போக்குவரத்து வல்லுநராக இருப்பவன். பொதுமக்களுக்கு இப்படித் தனியார் விமான நிறுவனங்கள் குடைச்சல் கொடுப்பதை ஏன் அரசு, குறிப்பாக சிவில் விமானப் போக்குவரத்து டைரக்டர் ஜெனரலும் எப்படி அனுமதிக்கிறார்களோ தெரியவில்லை.

விநியோகத்தை விட தேவை அதிகரித்தால், விலை ஏறும் என்பது அடிப்படை பொருளாதாரம். ஆனால், விமான சேவையில் இதெல்லாம் இல்லை. அவர்கள் தங்கள் இஷ்டத்துக்குக் கட்டணம் விதிக்கிறார்கள். ஏராளமான கட்டணமோ, அற்பக் கட்டணமோ அவர்களது வசதிக்கு கட்டணம் வைக்கிறார்கள். விலை ஏற்ற இறக்கம் என்ற நடைமுறை இங்கே பொருந்துவதில்லை. கட்டணம் பற்றி எதுவும் தெரிவதில்லை.

எது எப்படியோ, விமானத்தில் தில்லி சென்றடைந்ததும் அப்பாடா என்றாகிவிடுகிறது. ஒரு பஸ்ஸில் கும்பலாக ஏற்றப்படுகிறோம். பழைய சர்வதேச விமான நிலையத்துக்கு (T2) அழைத்துச் செல்லப்படுகிறோம். புதிய உள்நாட்டு விமான நிலையத்தில் குறைந்த கட்டணத்தை வசூலிப்பதாகக் கூறிக்கொள்ளும் விமானங்கள் போய் வருகின்றன. விமான நிலையம் 1986ல் கட்டப்பட்டது. எல்லாம் மாறிவிட்டது, அங்குள்ள கழிவறையைத் தவிர, நுழைந்ததும் நாற்றம்தான். நிச்சயம் அது 1980ம் ஆண்டுகளில் கட்டப்பட்டிருக்குமோ! ■

# நாக்பூரில் RIPE மார்க் மலோனிக்கு தலைப்பாகை







புகைப்படங்கள்: ரஷீதா பகத்

Regn. No. RNP – TN/CCN/677/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Rotary News Tamil published on 1st of every month

ADVT

